## (இ) அரசாங்கத் தொழில் முயற்சிகள்*

### பொது

1967ம் ஆண்டில் அரசாங்கத் துறையில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதெனத் தேரக்கூடிய முயற்சிகள் 62ஆக இருந்தன. இலங்கைத் தும்புச் சபை (1968 மாச்சில்), கொழும்பு மாவட்டப் புனரமைப்பு அபிவிருத்திச் சபை (1968 மேயில்), தேசிய அச்சடித்தற் கூட்டுத்தாபனம் (1968 செத்தெம்பரில்) என்பவை நிறுவப்பட்டதுடன், 1968ல் மொத்தத் தொகை 65ற்கு அதிகரித்துள்ளது. இந்த மொத்தத் தொகையில் 55 அரசாங்கக் கூட்டுத்தாபனங்களாகவும், ஏனையவை அரசாங்கத் திணைக்களங்களாகவும் இயங்கின. 1968 வனபரிபாலனத் திணைக்களத்தின் வர்த்தக முயற்சிகள் 1968 ஏப்பிறலில் நிறுவப்பட்டதான அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டது. இதற்கிடையில் அரசாங்கத் திணைக்களமான அரசாங்க மின்சாரப் பொறுப்பேற்றல்களை ''மின்சாரச் சபை'' என்ற தலைப்பின்கீழுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றிற்கு மாற்றுதல் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மசோதாவொன்று சமர்ப்பிக்கப்பட்டதுமன்றி, துறைமுகச் சேவைகளை ஒரு ''துறைமுக அதிகாரச் சபைக்குக் கீழ்'' ஒன்று சேர்ப்பதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

### அரசாங்கத் துறையின் கைத்தொழில்கள்

1968ல் கைத்தொழிற்றுறையிலுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கையானது, தேசிய மரக் கூட்டுத்தாபனத்தினதும், தேசிய அச்சடித்தற் கூட்டுத்தாபனத்தினதும் (மேலதிகமாக இலங்கை அரசாங்கப் பதிப்பகத்துடன் தொழிலாற்ற) நிறுவப்பட்டதுடன், 21லிருந்து 23ற்கு அதிகரித்துள்ளது. இத்துடன் அரசாங்க அல்லது அரசாங்கச் சார்புள்ள திணைக்களங்களாகத் தாபிக்கப்பட்ட 3 தொழிற்றுபனங்களிருந்தன. அவை யாவன அரசாங்க வடிசாலை, சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் தகர அடைப்பாலை, அரசாங்க அச்சகம் முதலியனவாகும்.

1968ல் அரசாங்க மா அரைத்தற் கூட்டுத்தாபனமும், தேசிய பாற் சபையினது கட்டிப்பால் தயாரிப்பு ஆலையும் உற்பத்தியைத் தொடங்கியிருக்கையில், தேசிய உரத் தயாரிப்புக் கூட்டுத்தாபனமும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்த் தூய்மியும், அரசாங்க அச்சடித்தற் கூட்டுத்தாபனமும் உற்பத்தியைத் தொடங்கவில்லை. ஏனைய கூட்டுத்தாபனங்களில், பல தம் நீடிப்புத் திட்டங்களில் வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றில், 1967/68ல் இலங்கை எண்ணெய், கொழுப்புகள் கூட்டுத்தாபனத்தின் புதிய கால்நடைத் தீனி ஆலை, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் புதுப்பிக்கப்பட்ட பழைய சூளை, இலங்கை கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனத்தின் றுரைல், சிர்லோன், வேருக்கும் இயந்திரம், இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் உரு அமைப்பு வேலைத்தலம், அரசாங்க வன்பொருள் கூட்டுத்தாபனத்தின் உருக்கு - இரும்பு வார்ப்பு, இலங்கை உரக் கூட்டுத்தாபனத்

---

* இதுவரை ஆண்டறிக்கை அரசாங்கத் துறையிலுள்ள கைத்தொழில் இயக்கங்களின் பகுப்பினை மட்டும் ஆராய்ந்துள்ளது. இவ்வாண்டு தொடக்கம் பகுப்பாய்வு கைத்தொழிற் சார்பற்ற பிரதான அரசாங்க முயற்சிகளையும் உள்ளடக்குவதற்குப் படிப்படியாக நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதுவரை செய்யப்பட்ட அரசாங்கத் துறைக் கைத்தொழில்களின் பகுப்பாய்வு பஞ்சாங்க ஆண்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். இக் கைத்தொழில்களும் மற்றும் அரசாங்க முயற்சிகளில் அதிகமானவையும், பஞ்சாங்க ஆண்டுகளிலிருந்து வேறுபடும் நிதியாண்டுகளின் அடிப்படையிற் தம் கணக்குகளைப் பேணுவதால், அவற்றைக் குறிப்பாகப் பஞ்சாங்க ஆண்டுகளுக்குப் பிரித்தெடுக்கும்போது, அவை கூடியளவு மதிப்பீட்டுத் தொகைகளிற் பதியப்பட்டுள்ளன. எனவே கூடியளவு சரியாக இருப்பதற்கு, இப்போது தொடக்கம், இப் பகுப்பாய்வு அதிக நம்பிக்கையுள்ள நிதியாண்டுப்படியான எண்தொகைகளைக்கொண்டு செயற்படும்.

அட்டவணை

## அரசாங்கக் கைத்தொழில்களின் ஆண்டு ஆற்றல், உற்பத்தி,

| கூட்டுத்தாபனம் | உற்பத்திக் கூறுகள் | 1964–65 | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை | ஆற்றல் |
| 1. தேசிய பாற்சபை | | | | | |
| (அ) விநியோக அமைப்பு | | | | | |
| (i) பாற்கொள்வனவுகள் | பைந்துகள் '000 ... | — | 16938 | — | — |
| (ii) பால் வேறுபடுத்தபட்ட | பைந்துகள் '000 ... | — | 598 | வி.கி. | — |
| (iii) பால் பதனிடப்பட்டது | பைந்துகள் '000 ... | 59250 | 16340 | 16,096 | 59,250 |
| (ஆ) கட்டிப்பால் ஆலை (ஆ) | ரின்கள் '000 ... | — | — | — | — |
| 2 கிழைத்தாள் ஆலை | | | | | |
| (அ) தயாரித்தல் | தாள்–தொன்கள் ... | 6570 | 5950 | 5710 | 7345 |
| | பயிற்சிப்புத்தகம் '000 ... | 6500 | 6606 | 4110 | 6000 |
| (ஆ) வர்த்தகம் | தாள்—தொன்கள் ... | — | 800/இ | 652 | — |
| 3. இ. பீங்கான் பொருட்கள் | | | | | |
| (அ) நீர்கொழும்பு | பீங்கான் பொருள்—தொன் ... | 880 | 880 | வி.கி. | 880 |
| (ஆ) பிலியந்தலை ஆலை | அடுக்களைப்பொருள்–தொன் ... | — | — | — | — |
| | சுகாதார சுத்திப் பொருட்கள்... | — | — | — | — |
| | சுவரோடுகள்–தொன் ... | — | — | — | — |
| (இ) கயோலின்-தூய்மி | கயோலின்–தொன் ... | 5000 | 1630 | 998 | 5000 |
| 4. இ. எண்ணெய், கொழுப்பு | | | | | |
| (அ) எண்ணெய் ஆலை | தேங்காயெண்ணெய் தொன் ... | 22320 | 1747 | 2259 | 22320 |
| (ஆ) புறவென்டர்பொறி | கால்நடைத் தீனி தொன் ... | 31200 | 16804 | 16575 | 31200 |
| (இ) கொழுப்பு தி.பொறி | கொழுப்புத் திராவகம் தொ ... | — | — | — | — |
| | கிளிசறின் தொ ... | — | — | — | — |
| (ஈ) ஏனைய கூறுகள் | ஏனைய எண்ணெய்கள் தொ ... | — | — | — | — |
| 5. இ. ஒட்டுப்பலகை (ஈ) | மூவொட்டுப்பலகைச.அ.'000 | 18000 | 15323 | — | 18000 |
| | தேயிலைப் பெட்டிகள் '000 ... | 780 | 731 | 722 | 840 |
| | கம்பைகள் '000 ... | 700 | 428 | வி.கி. | 710 |
| | பலகைகள் ச. அ. '000 .. | 993 | வி.கி. | 697 | 1550 |
| | கதவுகள் '000 ... | 8 | 6 | 6 | 10 |
| 6. இ. தோற்பொருட்கள் | குரேம் ச. அ. '000 ... | 646 | 473 | 135 | 567 |
| | சப்பாத்துகள்சோடிகள்'000 ... | 216 | 184 | 181 | 216 |
| | ஏனைய தயாரிப்புகள்ரு.'000 ... | 286 | 210 | 54 | 304 |
| 7. பரந்தன் இரசாயனம் | எரி சோடா தொன் ... | 1500 | 844 | 844 | 1500 |
| | பாசிகம் தொன் ... | 1400 | 255 | 255 | 1400 |
| | மேசை உப்பு தொன் ... | — | 11 | 11 | — |
| 8. இலங்கைச் சீமெந்து | சீமெந்து தொன் ... | 80000 | 73436 | 75583 | 80000 |
| (அ) காங்கேசன்துறை ஆலை | சீமெந்து தொன் ... | 80000 | 73436 | 75583 | 80000 |
| (ஆ) காலி ஆலை | சீமெந்து தொன் ... | — | — | — | — |
| 9. இலங்கைச் சீனி | | | | | |
| (அ) கந்தளாய் ஆலை | சீனி தொன் ... | 21000 | 1958 | 1958 | 21000 |
| | ஸ்பிறிற் புறூவ் கலன் '000 ... | 600 | 423 | 400 | 600 |
| (ஆ) கல்லோயா ஆலை (உ) | சீனி தொன் ... | 19200 | 5471 | 5393 | 19200 |
| | ஸ்பிறிற் புறூவ் கலன் '000 ... | 750 | 391 | 374 | 750 |
| 10. இ. கனிப்பொருள் மணல் | இல்மனைற் தொன் ... | 60000 | 46953 | 38380 | 60000 |
| | உருட்டையில் தொன் ... | — | — | — | — |
| | சிர்கோன் தொன் ... | — | — | — | — |

*II ( இ ) 1*

*விற்பனைகள் (அளவு) – 1964/65 1968/69 (அ)*

| 1965–66 | | 1966–67 | | | 1967–68 | | | 1968–69* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ.பத்தி | விற்பனை | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை |
| 17165 | — | — | 18583 | — | — | 22763 | — | — | 30776 | — |
| 229 | வி.கி. | — | 17 | வி.கி. | — | 1217 | வி.கி. | — | 2852 | வி.கி. |
| 16935 | 16353 | 59250 | 18566 | 17203 | 59250 | 20382 | 19526 | 59250 | 24968 | 23084 |
| — | — | — | — | — | — | — | — | 25000 | 11514 | 6011 |
| 7361 | 5987 | 8050 | 9156 | 6684 | 9000 | 9500 | 6014 | 9000 | 8333 | 9765 |
| 10767 | 11241 | 6200 | 10327 | 6792 | 8500 | 7215 | 8213 | 8500 | 12000 | 12000 |
| 6500இ | 4453 | — | 12600இ | 7644 | — | 6700இ | 7155 | — | 6992அ | 8510 |
| 852 | வி.கி. | 880 | 814 | வி.கி. | 940 | 954 | வி.கி. | 940 | 1021 | 1000 |
| — | — | 1600 | 189 | வி.கி. | 1600 | 1180 | வி.கி. | 1600 | 1133 | 1325 |
| — | — | — | — | — | 500 | 110 | வி.கி. | 500 | 280 | 194 |
| — | — | — | — | — | 300 | 125 | வி.கி. | 300 | 169 | 133 |
| 435 | 1054 | 5000 | 2027 | 1916 | 5000 | 2600 | 2181 | 5000 | 2750 | 2283 |
| 2050 | 1442 | 22320 | 1759 | 2207 | 22320 | 1300 | 1293 | 22320 | 1447 | 1447 |
| 23810 | 23754 | 31200 | 29234 | 29144 | 31200 | 30011 | 30383 | 31200 | 53016 | 56060 |
| — | — | — | — | — | 5400 | 350 | 220 | 5400 | 8028 | 1334 |
| — | — | — | — | — | 5400 | 22 | … | 5400 | 673 | 175 |
| — | — | — | — | — | — | — | — | — | 104 | 20 |
| 13677 | — | 18000 | 19649 | — | 25000 | 19807 | — | 25000 | 25349 | — |
| 714 | 727 | 1260 | 987 | 988 | 1300 | 977 | 974 | 1300 | 1163 | 958 |
| 410 | வி.கி. | 480 | 312 | 338 | 750 | 215 | வி.கி. | 750 | 20 | 306 |
| வி.கி. | 744 | 1250 | 1608 | 1109 | 2400 | 1099 | 1152 | 2400 | 910 | 923 |
| 5 | 5 | 7 | 5 | 5 | 9 | 11 | 11 | 9 | 20 | 18 |
| 514 | 165 | 600 | 649 | 118 | 600 | 629 | 145 | 600 | 695 | 156 |
| 184 | 211 | 216 | 246 | 244 | 216 | 260 | 255 | 271 | 309 | 307 |
| 248 | 46 | 300 | 289 | 22 | 300 | 334 | 26 | 300 | 342 | வி.கி. |
| 1082 | 1082 | 1500 | 1002 | 1002 | 1500 | 970 | 970 | 1500 | 1021 | — |
| 288 | 288 | 1400 | 397 | 397 | 1400 | 540 | 540 | 1400 | 639 | 482 |
| 11 | 11 | — | 89 | 89 | 175 | 121 | 121 | 175 | 205 | 196 |
| 84477 | 86578 | 120000 | 81575 | 75105 | 265000 | 206631 | 214699 | 275000 | 240683 | 228246 |
| 84477 | 86578 | 120000 | 81575 | 75105 | 165000 | 160491 | 164981 | 175000 | 155233 | 146083 |
| — | — | — | — | — | 100000 | 46140 | 49718 | 100000 | 85450 | 82163 |
| 3299 | 3299 | 21000 | 2587 | 2587 | 21000 | 1403 | 1403 | 21000 | 3545 | 3545 |
| 729 | 707 | 600 | 871 | 832 | 600 | 426 | 503 | 600 | 735 | 782 |
| 6492 | 6379 | 19200 | 915 | 2539 | 19200 | 5789 | 5789 | 19200 | 4542 | 4542 |
| 379 | 307 | 750 | 249 | 282 | 750 | 500 | 480 | 750 | 480 | 347 |
| 53742 | 50575 | 90000 | 53265 | 55480 | 90000 | 48281 | 73430 | 90000 | 71464 | 73430 |
| — | — | — | — | — | — | — | — | 10500 | 1277/ஊ | — |
| — | — | — | — | — | — | — | — | 9500 | — | — |

அட்டவணை

அரசாங்கக் கைத்தொழில்களின் ஆண்டு ஆற்றல், உற்பத்தி,

| கூட்டுத்தாபனம் | உற்பத்திக் கூறுகள் | 1964/65 | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆற்றல் | உ. பத்தி | விற்பனை | ஆற்றல் |
| 11. தேசிய உப்பு | உப்பு தொன் ... | 20000 | 10926 | 4527 | 30000 |
| 12. தேசிய ஆடைகள் | நூல் இருத்தல் '000 ... | 3400 | 1971 | 2112 | 3400 |
| | ஆடைகள் யார் '000 ... | — | — | — | 14000 |
| 13. தேசிய சிறுகைத்தொழில் | தளவாடங்கள் பெ.மதி ரூ.'000... | — | 3868 | 3814 | — |
| | செ.கட்டி, ஓடுகள் ,, ரூ. '000... | — | — | — | — |
| | மருந்துவகைகள் ,, ரூ. '000... | — | — | — | — |
| 14. இலங்கை உருக்கு (எ) | உருட்டிய பகுதிகள் மெ. தொ... | — | — | — | — |
| | கம்பி உற்பத்திகள் மெ. தொ... | — | — | — | — |
| 15. இலங்கை ரயர் (ஏ) | ரயர்கள் தொகை ... | — | — | — | — |
| | ரியூப்புக்கள் தொகை ... | — | — | — | — |
| | ஒட்டுமடிப்புகள் தொகை ... | — | — | — | — |
| 16. இ. அரசாங்க வன்பொருள் | மண்வெட்டிகள் '000 ... | — | — | — | — |
| | ஏனைய விவசாயச் சா:ம் '000 ... | — | — | — | — |
| | கட்டட வன்பொருள் '000 ... | — | — | — | 895 |
| | நீர் உறுப்புக்கள் '000 ... | — | — | — | — |
| | வெட்டுக்கருவி '000 ... | — | — | — | — |
| | தச்சுக்கருவிகள் '000 ... | — | — | — | — |
| | பொறியியற்சாதனம் '000 ... | — | — | — | — |
| 17. இலங்கை உரம் | உரம் தொன் ... | — | 79733/இ | 24283 | — |
| 18. இலங்கை கடற்றொழில் | மீன் இருத்தல் '000 ... | — | — | — | — |
| | (அ) பிடித்த மீன் ... | — | — | — | — |
| | (ஆ) கொள்வனவுசெய்த மீன்... | — | — | — | — |
| | கருவாடு இருத்தல் '000 ... | — | — | — | — |
| | மீன் உணவுஇருத்தல் '000 ... | — | — | — | — |
| | ஈரவெண்ணெய் '000 ... | — | — | — | — |
| 19 அரசாங்க மாவரைத்தல் ஆலை (ஒ) | கோதுமை மா தொன் ... | — | — | — | — |
| | உப பொருட்கள் தொன் ... | — | — | — | — |

* தற்காலிகமானவை.

(அ) சகல எண்தொகைகளும் கூட்டுத்தாபனங்களின் நிதியாண்டுகளுக்குத் தொடர்புடையவை. தேசிய பாற்சபை பஞ்சாங்கவாண்டையே நிதியாண்டாகக் கொண்டுள்ளது. ஏனைய கூட்டுத்தாபனங்கள் ஏப்பிறல் தொடக்கம் மார்ச்சு வரையான காலப்பகுதியை நிதியாண்டாகக் கொண்டுள்ளன. கீழேயுள்ள அடிக்குறிப்பு (உ) வைப் பார்க்கவும்.

(ஆ) உற்பத்தி 1968 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளைக் குறிக்கின்றன.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முழு உற்பத்தியும் முதலில் 3–ஒட்டுப்பலகைக்குச் சமமாகத் தரப்பட்டுள்ளது. முடிவுபெற்ற உற்பத்திக்குத் தொடர்பான எண்தொகைகளே இங்கு வேறாகத் தரப்பட்டுள்ளன. இக்கூட்டுத்தாபனம் இங்கு உற்படுத்தப்படாத வேறு பொருட்களையும் சிறு அளவில் உற்பத்தி செய்கின்றது.

*II* (ஈ) 1

விற்பனைகள் (அளவு) — *1964/65 — 1968/69* (அ)

| 1965/66 | | 1966/67 | | | 1967/68 | | | 1968/69* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ.பத்தி | விற்பனை | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை | ஆற்றல் | உ.பத்தி | விற்பனை |
| 19127 | 13900 | 70000 | 63468 | 60800 | 70000 | 74611 | 77546 | 78000 | 90885 | 77688 |
| 2658 | 2323 | 3400 | வி. கி. | 2270 | 3400 | 2669 | 1000 | 3400 | 2315 | 456 |
| 439 | — | 14000 | 2810 | 1924 | 14000 | 6682 | 5431 | 14000 | 6166 | 5208 |
| 4575 | 4634 | — | 4642 | 4404 | — | 4584 | 4624 | — | 4177 | 5175 |
| 1700 | 659 | — | 2710 | 2018 | — | 3005 | 1997 | — | 3057 | 3234 |
| — | — | — | 1283 | 416 | — | 1368 | 642 | — | 1080 | 1083 |
| — | — | — | — | — | 60000 | 25425 | 24407 | 60000 | 26505 | 15950 |
| — | — | — | — | — | 12000 | 3343 | 3007 | 12000 | 4822 | 4976 |
| — | — | — | — | — | 250000 | 57622 | 28284 | 250000 | 62124 | 65260 |
| — | — | — | — | — | 152000 | 62062 | 33063 | 152000 | 43108 | 46177 |
| — | — | — | — | — | 88000 | 29477 | 17873 | 88000 | 2921 | 7004 |
| — | — | 200 | 12 | 12 | 200 | 214 | 138 | 281 | 187 | 141 |
| — | — | — | — | — | 13 | 5 | 1 | 121 | 8 | 5 |
| 46 (ஐ) | — | 895 | 437 | 415 | 935 | 1023 | 704 | 1045 | 1147 | 600 |
| — | — | — | — | — | 244 | 173 | 57 | 269 | 34 | 42 |
| — | — | — | — | — | 500 | 29 | 15 | 600 | 73 | 51 |
| — | — | — | — | — | 65 | 12 | 5 | 195 | 18 | 13 |
| — | — | — | — | — | — | — | — | 274 | 3 | 2 |
| 90180 | 101241 | — | 145000 | 111789 | — | 177182 | 157756 | — | 220000 | 192080 |
| (இ) | | — | (இ) | — | | (இ) | | — | (இ) | — |
| 5138 | 3930 | — | 8467 | 7178 | — | 9767 | 6711 | — | 11784 | 6717 |
| 2527 | — | — | 5980 | — | — | 6633 | — | — | 9976 | — |
| 2611 | — | — | 2487 | — | — | 3134 | — | — | 1808 | — |
| 64 | 37 | — | 345 | 333 | — | 378 | 366 | — | 640 | 518 |
| 41 | 41 | — | 104 | 98 | — | 85 | 85 | — | 74 | 61 |
| 14 | — | — | 23 | 28 | — | 23 | 31 | — | 33 | 35 |
| — | — | — | — | — | — | — | — | 70000 | 4245 | 3245 |
| — | — | — | — | — | — | — | — | — | 1357 | 2115 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(தரவு கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்டது)

* தற்காலிகமானவை

(ஊ) கூட்டுத்தாபனம் 1956 செத்தெம்பரில் கல்லோயா ஆலையைப் பாரமெடுத்தது.

(ஊ) உற்பத்தி, 1968 யூலையில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு தரப்பட்டுள்ள எண்தொகை 1968 யூலை தொடக்கம் 1969 மார்ச்சு வரைக்குமான காலப்பகுதிக்காகும்.

(எ) 1967 ஏப்பிறலில் உற்பத்தி தொடங்கப்பட்டது.

(ஏ) 1967 மேயில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

(ஐ) 1966 பெப்புருவரியில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

(ஒ) 1968 யூலையில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

தின் பல உரக் களஞ்சியங்களும், செயல்நிலைப்படுத்தப்பட்டன. II (இ) 1 தொடக்கம் II (இ) 4 வரையுள்ள அட்டவணைகள், தேசியக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களினது, அவற்றின் மூலதன முதலீட்டம், உற்பத்தி, விற்பனை இலாபங்கள் நட்டங்களையொட்டி, அவற்றின் வெவ்வேறான முயற்சிகள் நிதியாண்டுகளின்படி, 5 ஆண்டுகள் காலப்பகுதிக்கான புள்ளிவிவரச் சுருக்கத்தைத் தருகின்றன.

1967/68 இறுதியில் இருந்த 21 அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களில் முதலீடுசெய்யப்பட்ட மொத்த மூலதனம் ஏறக்குறைய ரூபா 7,625 இலட்சம் ஆகும். இதில் ஏறக்குறைய ரூபா 6,439 இலட்சம் உற்பத்தியை ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளையொட்டியதாகும். 1968/69 நிதியாண்டில் செய்யப்பட்ட புதிய முதலீடு ஏறக்குறைய ரூபா 2,556 இலட்சமாகும். இது பிரதானமாக, இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் புத்தளத் தாலை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்த் தூய்மி, தேசிய ஆடைவகைக் கூட்டுத்தாபனத்தின் துல்கிறிய ஆடை ஆலை, அரசாங்க மா அரைத்தற் கூட்டுத்தாபனத்தின் மா ஆலை, இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் அவிசாவளை ஒட்டுப்பலகை — பல வகுப்பு என்பனவற்றை யொட்டிச் செய்யப்பட்டதாகும். எனவே, 1968/69 நிதியாண்டு இறுதியில் 22 கூட்டுத்தாபனங்களிற் செய்யப்பட்ட மூலதன முதலீடு ரூபா 10,181 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 7,975 இலட்சம், உற்பத்தியைத் தொடங்கிய முயற்சிகளையொட்டியதாகும்.

பல கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களில் உற்பத்தியானது சென்ற ஆண்டிலும்பார்க்க 1967/68ல் அதிகரித்துள்ளது. சிறி லங்கா சீனிக் கூட்டுத்தாபனத்திலும் (கந்தளாய்த் தொழிற்சாலை), கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனத்திலும் மட்டுமே வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனத்தினதும், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்திகள் சிலவற்றில் வீழ்ச்சி காணப்பட்டது. 1968/69ன் முதல் மூன்று காற்பகுதிகளிலுள்ள போக்கு, பல கூட்டுத்தாபனங்கள் தமது உற்பத்தியை மேலும் உயர்த்துமெனத் தெரிகிறது. கிழக்குப் பிரதேசக் காகித ஆலைக் கூட்டுத்தாபனம், சிறி லங்கா சீனிக் கூட்டுத்தாபனம் (கல்லோயாத் தொழிற்சாலை) தேசிய ஆடைக் கூட்டுத்தாபனம், தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம் என்பனவற்றில் வீழ்ச்சிகள் எதிர்பார்க்கப்பட்டன.

ஏறக்குறைய எல்லாக் கூட்டுத்தாபனங்களும் தம் மொத்த உற்பத்தி ஆற்றலுக்குக் குறைவாகவே இயங்கினவென்பதுவும், இவ்வட்டவணைகளிலிருந்து காணக்கூடியதாயிருக்கிறது. எனவே, உற்பத்தியிற் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களிலும்பார்க்கக் கூடுதலான அதிகரிப்பு அடையக்கூடியதாயிருக்கிறது.

பல கூட்டுத்தாபனங்கள் 1967/68ல் தம் இயக்கங்களில் இலாபங்களைப் பதிவுசெய்தன. தேசிய பாற் சபை (1967ன்), இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனம், சிறி லங்கா சீனிக் கூட்டுத்தாபனம் (கல்லோயாத் தொழிற்சாலையின் நட்டத்தினால்), தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம், இலங்கை அரசரங்க வன்பொருட் கூட்டுத்தாபனம், இலங்கைக் கடற்றொழிற் கூட்டுத்தாபனம் என்பனவற்றில் மட்டுமே இழப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1968/69ல் நடைமுறைப் போக்குகள் இக் கூட்டுத்தாபனங்களின் செயலாக்கம் சிறந்ததாகவிருக்கும் என்பதைக் காட்டுகின்றன. தேசிய பாற் சபை, தேசிய சிறு கைத்தொழில்கள் கூட்டுத்தாபனம், இலங்கைக் கடற்றொழிற் கூட்டுத்தாபனம் என்பவற்றில் மட்டும் இழப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும் கூட்டுத்தாபனங்களின் தொடர்பான திறமை அல்லது திறமையின்மைபற்றி ஆராயுமிடத்து, இலாபங்கள் அல்லது நட்டங்களை மிகவும் வரையறைகளுடன் மட்டுமே உபயோகித்தல் வேண்டும் என்பது உணரப்பட வேண்டியதாகும். ஏனெனில், சில கூட்டுத்தாபனங்கள் சிக்கனமற்ற சமூகக் கடமைப்பாடுகளைச் செய்யவேண்டியிருந்ததுமன்றி, சில கூட்டுத்தாபனங்கள் முழு அல்லது கிட்டிய முழுவுரிமைகளை அனுபவிக்கின்றன.

பல கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் தமது தயாரிப்பு முயற்சிகளுடன் வியாபார முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன. பொதுவாக இம் முயற்சிகள் குறிப்பிடத்தக்களவு இலாபங்களைக் கொண்டுவந்தன. கிழக்குப் பிரதேசக் காகித ஆலை, பரந்தன் இரசாயனம், தேசிய ஆடைகள், இலங்கை உருக்கு ஆகியன அத்தகைய கூட்டுத்தாபனங்களாகும். அட்டவணை II (இ) 2ல் தயாரிப்பு முயற்சிகளின் விளைவுகளை இவ்வியாபார முயற்சிகளின் விளைவுகளிலிருந்து வேறுபடுத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது.

மிக அண்மையில், இக் கூட்டுத்தாபனங்கள் தம் உற்பத்திகளின் ஏற்றுமதிகளை விரிவடையச் செய்யும் போக்கினைக் காட்டின. அட்டவணை II (இ) 4, இக் கூட்டுத்தாபனங்களின் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான ஏற்றுமதிகளைக் காட்டுகின்றன. கூட்டுத்தாபனங்களின் ஏற்றுமதிகளின் பெறுமானம் 1964/65ற்குரிய ரூபா 10 இலட்சத்திலிருந்து 1967/68ல் ரூபா 35 இலட்சத்திற்கு அதிகரித்ததிலிருந்து, 1968/69ன் ஏற்றுமதிகள் ரூபா 118 இலட்சமாகுமென மதிப்பிடப்பட்டுள்ளன. முக்கிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனம் (கொழுப்பு, திராவகங்களும், கிளிசறினும்), இலங்கைக் கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனம் (மீன், சுருத்துடுப்பு ஏனைய பொருட்களும்) ஆகும்.

நிறைவேற்று அலுவலாளர்கள், அலுவலக அலுவலாளர்கள், தொழிற்சாலை அலுவலாளர்கள் என்றவகையிற் பகுக்கப்பட்டபடியான சென்ற 3 ஆண்டுகளுக்குரிய கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் தொழில்நிலை அட்டவணை II (இ) 3ல் தரப்பட்டுள்ளது. இதிலிருந்து தொழில்நிலை 1966/67ற்குரிய 16,872லிருந்து 1967/68ல் 20,207ற்கு அதிகரித்துள்ளதைக் கண்டு கொள்ளலாம். 1968 திசெம்பரில் இது 21,914ற்கு மேலும் அதிகரித்துள்ளது. இம் மொத்தத்தில், பிரதான அதிகரிப்பு, தொழிற்சாலைக் கூலித் தொகையிலேற்பட்டதாகும். கூட்டுத்தாபனங்களிற் சிறி லங்கா சீனி, தேசிய ஆடைவகைகள், தேசிய சிறு கைத்தொழில்கள், இலங்கைச் சீமெந்து ஆகிய கூட்டுத்தாபனங்கள் பிரதான தொழில்தருநர்களாகும்.

ஒவ்வொரு கைத்தொழிற் கூட்டுத்தாபனத்தின்படி, அவற்றின் இயக்கங்களின் மிக விரிவான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

### தேசிய பாற் சபை

1954ல் தேசிய பாற் சபை, ''இலங்கையிலுள்ள[1] நுகர்வோர்களுக்கு நியாயமான விலையிற் போதுமான பால் விநியோகம் கிடைக்கக்கூடியதாகச் செய்யும்பொருட்டு'', ''திறமையானதும் விலை குறைவானதுமான பால் உற்பத்தியையும், சந்தைப்படுத்தல் சேவைகளையும்'' நிறுவி, பராமரிப்பதற்கும், ஏனைய நிறுவனங்களால் அத்தகைய சேவைகளின் அபிவிருத்தியை உயர்த்தவும், நிறுவப்பட்டது. மிக அண்மையில், பால், பாலுற்பத்திகளைப் பதனிடுதலுக்குப் பல தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஊக்கமளித்து, சபை தனது தொழிற்பாடுகளை விரிவடையச் செய்தது.

குறிப்பாகச் சென்ற ஈராண்டுகளிற் பால் பதனிடுதல், விநியோகத்தின் விரிவு சபையின் முயற்சிகளிலொரு குறிப்பிடத்தக்க அம்சமாகவுள்ளது. பாற் கொள்வனவுகள் முந்திய ஆண்டிற் 14 இலட்சம் பைந்துகளால் அதிகரித்தமைக்கு எதிராக 1967ல் 42 இலட்சம் பைந்துகளால் (அல்லது 22.5 சதவீதம்) அதிகரித்துள்ளன. 1968ல் கொள்வனவுகள் 80 இலட்சம் பைந்துகளால் (அல்லது 35.2 சதவீதம்) மேலும் அதிகரித்துள்ளன. இக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு, உயர்ந்தளவு உற்பத்திக்கு ஊக்கமளிக்குமுகமாக 1967 இலிருந்து உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட விலை பைந்தொன்

---

1. 1955ம் ஆண்டின் 28ம் இலக்க, 1957ம் ஆண்டின் 9ம் இலக்க, 1964ம் ஆண்டின் 18ம் இலக்கச் சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்டபடியான 1954ம் ஆண்டின் 12ம் இலக்க பாற்சபைச் சட்டம்,

அட்டவணை

## அரசாங்கக் கைத்தொழில்களின் விற்பனவு,

| கூட்டுத்தாபனம் | விற்பனவுப் பெறுமதி 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 (இ) |
|---|---|---|---|---|
| 1. தேசியப் பாற்சபை | 9,566 | 10,160 | 10,717 | 13,227 |
| (அ) பதனிடு நிலையங்கள் | 9,566 | 10,160 | 10,717 | 13,227 |
| (ஆ) கட்டிப்பால் ஆலை | — | — | — | — |
| (இ) நுண்மத் தீர்வான பால் திட்டம் | — | — | — | — |
| 2. கீழைத்தாள் ஆலை | 15,964 | 27,737 | 33,430 | 32,000 |
| (அ) தயாரித்தல் | | | | |
| (1) தாள் தொழிற்சாலை | 13,864 | 14,537 | 16,230 | 14,644 |
| (2) தாள் மட்டை ஆலைத் திட்டம் | — | — | — | |
| (ஆ) வர்த்தகத் தொழில் | 2,100 | 13,200 | 17,200 | 17,400 |
| 3. இலங்கைப் பீங்கான் பொருட்கள் | 2,932 | 3,348 | 4,421 | 10,075 |
| (அ) நீர்கொழும்பு ஆலை | 2,658 | 3,058 | 3,219 | 4,000 |
| (ஆ) பிலியந்தல ஆலை | — | — | 675 | 5,475 |
| (இ) கயோலின் தூய்மி | 274 | 290 | 527 | 600 |
| 4. இலங்கை எண்ணெய்களும் கொழுப்புகளும் | 10,179 | 12,304 | 18,406 | 18,747 |
| (அ) தேங்காயெண்ணெய்ப் பொறி | 2,421 | 1,760 | 2,665 | 1,660 |
| (ஆ) கால்நடைத் தீனிப் பொறி | 6,134 | 9,232 | 11,330 | 14,666 |
| (இ) கொழுப்புத் திராவகப் பொறி | — | — | — | 357 |
| (ஈ) கிளிசறின் பொறி | — | — | — | ... |
| (உ) ஏனைய பொறிகள் | 1,624 | 1,312 | 4,411 | 2,064 |
| 5. இலங்கை ஒட்டுப்பலகை | 5,039 | 5,103 | 6,749 | 7,839 |
| (அ) ஜின்தோட்ட ஆலை | 5,039 | 5,102 | 6,749 | 7,839 |
| (ஆ) அவிசாவலை ஆலைத் திட்டம் | — | — | — | — |
| 6. இலங்கைத் தோற் பொருட்கள் | 3,817 | 4,507 | 5,230 | 4,893 |
| (அ) சப்பாத்து ஆலை | 3,368 | 4,010 | 4,795 | 4,417 |
| (ஆ) தோற் பதனிடும் ஆலை | 449 | 497 | 425 | 476 |
| 7. பரந்தன் இரசாயனம் | 1,642 | 3,437 | | |
| (அ) தயாரித்தல் | 1,406 | 1,588 | 2,019 | 2,442 |
| (ஆ) வர்த்தகத் தொழில் | 236 | 1,849 | — | — |
| 8. இலங்கைச் சீமெந்து | 13,573 | 15,244 | 15,815 | 39,898 |
| (அ) காங்கேசன்துறை ஆலை | 13,573 | 15,244 | 15,815 | 29,656 |
| (ஆ) காலி ஆலை | — | — | — | 10,242 |
| (இ) புத்தளை ஆலை | — | — | — | — |
| 9. இலங்கைச் சீனி | 8,495 | 14,926 | 21,592 | 21,777 |
| (அ) கந்தளாய் ஆலை | 8,495 | 14,926 | 15,743 | 10,008 |
| (1) சீனி | 1,104 | 1,846 | 852 | 702 |
| (2) ஸ்பிறிட் | 7,391 | 13,080 | 14,891 | 9,306 |
| (ஆ) கல்லோயா ஆலை | 9,604 | 7,829 | 5,849 | 11,769 |
| (1) சீனி | 2,753 | 2,254 | 822 | 2,887 |
| (2) ஸ்பிறிட் | 6,851 | 5,575 | 5,027 | 8,882 |
| 10. இலங்கைக் கனிப் பொருட்கள் | 946 | 1,372 | 1,453 | 2,503 |
| (அ) எல்மனேற் ஆலை | 946 | 1,372 | 1,453 | 2,503 |
| (ஆ) உப பொருட்கள் | — | — | — | — |
| 11. தேசிய உப்பு | 407 | 1,112 | 5,463 | 7,025 |

*II* (இ) 2

## இலாபம் முதலீட்டம் ஆகியவற்றின் பெறுமதி

| | இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ஆ) | | | | | முதலீட்டம் செய்த மூலதனம் (இ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1968-69 (ஈ) | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 (ஈ) | 1968-69 (ஈ) | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 (ஈ) | 1968-69 (ஈ) |
| 23,517 | 1,392 | 641 | –889 | –1,5000 | – 63 | 14,751 | 14,741 | 14,741 | 20,352 | 22,971 |
| 16,890 | –1,392 | –641 | –889 | –1,500 | –513 | 11,956 | 11,956 | 11,956 | 13,156 | 14,506 |
| 6,627 | — | — | — | — | + 450 | 2,785 | 2,785 | 2,785 | 5,696 | 6,300 |
| — | — | — | — | — | — | — | — | — | 1,500 | 2,165 |
| 43,301 | + 766 | +3,159 | +3,783 | + 3,919 | + 6,440 | 29,000 | 29,000 | 29,000 | 29,000 | 35,700 |
| 24,601 | — 250 | +1,617 | +1,072 | + 1,496 | + 5,040 | 29,000 | 29,000 | 29,000 | 29,000 | 29,000 |
| — | — | — | — | — | — | — | — | — | — | 6,700 |
| 18,700 | + 516 | +1,542 | +2,711 | + 2,423 | + 1,400 | — | — | — | — | — |
| 13,004 | + 276 | + 442 | + 775 | + 1,802 | + 4,008 | 8,075 | 8,075 | 19,000 | 20,000 | 20,000 |
| 4,756 | + 378 | + 581 | + 728 | + 743 | + 987 | 5,000 | 5,000 | 5,000 | 5,000 | 5,000 |
| 7,604 | — | — | + 24 | + 989 | + 2,830 | — | — | 10,934 | 11,925 | 11,925 |
| 644 | – 102 | – 139 | + 23 | + 70 | + 191 | 3,075 | 3,075 | 3,075 | 3,075 | 3,075 |
| 23,388 | + 215 | + 568 | – 1,611 | + 642 | — 4,552 | 21,900 | 21,940 | 21,940 | 21,940 | 27,940 |
| 629 | – 1,010 | – 904 | – 2,033 | – 1,288 | — 549 | | | | | |
| 19,088 | +1,289 | + 1,963 | + 1,359 | + 609 | + 435 | | | | | |
| 2,731 | — | — | — | — | — | | | | | |
| 239 | — | — | — | + 970 | + 3,118 | | | | | |
| 701 | – 64 | – 491 | – 937 | + 353 | + 450 | | | | | |
| 10,265 | + 378 | + 14 | + 597 | + 281 | + 1,603 | 2,800 | 2,800 | 2,800 | 3,456 | 14,800 |
| 10,265 | + 378 | + 14 | + 597 | + 182 | + 1,603 | 2,800 | 2,800 | 2,800 | 2,800 | 2,800 |
| — | — | — | — | — | — | — | — | — | 656 | 12,000 |
| 7,889 | + 309 | + 214 | + 391 | + 187 | + 413 | 5,200 | 5,200 | 5,200 | 6,245 | 6,245 |
| 7,147 | — | — | — | — | — | 3,500 | 3,500 | 3,500 | 4,225 | 4,225 |
| 742 | — | — | — | — | — | 1,700 | 1,700 | 1,700 | 2,020 | 2,020 |
| 4,920 | — 614 | — 471 | + 270 | + 733 | + 865 | 12,321 | 12,321 | 12,321 | 12,321 | 12,321 |
| — | – 674 | – 887 | – 569 | – 124 | | 12,321 | 12,321 | 12,321 | 12,321 | 12,321 |
| — | + 60 | + 416 | + 839 | + 857 | — | — | — | — | — | — |
| 48,046 | +4,441 | +9,628 | +8,004 | +13,875 | +13,160 | 51,622 | 61,442 | 100,533 | 110,138 | 170,114 |
| 29,448 | +4,441 | +9,628 | +8,004 | +12,550 | +13,070 | 38,120 | 44,534 | 50,197 | 52,120 | 65,952 |
| 18,598 | — | — | — | + 1,325 | + 90 | 7,578 | 10,275 | 13,514 | 14,489 | 18,234 |
| — | — | — | — | — | — | 5,924 | 6,633 | 36,822 | 43,529 | 85,928 |
| 25,455 | + 900 | +6,725 | +7,657 | + 4,500 | + 4,140 | 33,300 | 33,700 | 151,900 | 157,621 | 163,911 |
| 16,467 | + 900 | +6,725 | +7,814 | + 500 | + 5,140 | 33,300 | 33,700 | 34,700 | 35,700 | 35,000 |
| 2,007 | வி.கி. | வி.கி. | – 2,763 | – 2,500 | — 4,360 | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 14,460 | வி.கி | வி.கி. | +10,577 | + 3,000 | + 9506 | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 8,988 | – 6,195 | – 6,295 | – 157 | – 5,000 | – 1,000 | 112,900 | 117,200 | 117,200 | 122,521 | 128,911 |
| 2,571 | –12,182 | –12,391 | – 5,094 | – 10,000 | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 6,417 | +5,987 | +6,096 | + 4,937 | 5,000 | வி.கி. | | | | | |
| 3,150 | – 502 | – 600 | + 54 | + 192 | + 1,088 | 10,100 | 11,100 | 11,100 | 11,100 | 14,875 |
| 3,150 | – 502 | – 600 | + 54 | + 192 | + 1,088 | 10,100 | 11,100 | 11,100 | 11,100 | 11,375 |
| — | — | — | — | — | — | | — | — | 3,500 | 3,500 |
| 7,049 | + 860 | + 629 | +1,000 | + 2,196 | – 2,500 | 1,718 | 2,013 | 6,503 | 8,862 | 13,067 |

அட்டவணை

## அரசாங்கக் கைத்தொழில்களின் விற்பனவு,

| கூட்டுத்தாபனம் | விற்பனவுப் பெறுமதி 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 |
|---|---|---|---|---|
| 12. தேசிய ஆடைகள் ... ... ... ... ... | 7,274 | வி. கி. | 9,700 | 12,988 |
| (அ) வியாங்கொடை ஆலை ... ... ... | 7,274 | வி, கி. | 9,700 | 12,988 |
| (ஆ) துல்கிரியாத் திட்டம் ... ... ... ... | — | — | — | — |
| (இ) ஏனைய திட்டங்கள் ... ... ... ... | — | — | — | — |
| ... ... ... ... ... | — | — | — | — |
| 13. தேசிய சிறு கைத்தொழில்கள் ... ... ... | 3,814 | 5,293 | 6,838 | 7,263 |
| (அ) தச்சுத் தொழிற் பகுதி ... ... ... ... | 3,814 | 4,634 | 4,404 | 4,624 |
| (ஆ) செங்கட்டி, ஓடு ஆலைகள் ... ... ... | — | 659 | 2,018 | 1,997 |
| (இ) ஆயுள்வேத மருந்து ஆலை ... ... ... | — | — | 416 | 642 |
| 14. இலங்கை உருக்கு ... ... ... ... ... | — | — | — | 25,665 |
| 15. இலங்கை ரயர் ... ... ... ... ... | — | — | — | 8,541 |
| 16. அரசாங்க வன்பொருள் ... ... ... ... | — | 23 | 513 | 2,564 |
| (அ) வன் பொருள் ஆலை ... ... ... ... | — | 23 | 513 | 2,564 |
| (ஆ) வாற்பிரும்பு ஆலை ... ... ... ... | — | — | — | — |
| 17. இலங்கை உரம் ... ... ... ... ... | 9,795 | 41,339 | 47,000 | 68,838 |
| (அ) கலவைப் பொறிகள் போன்றவை ... ... | 9,795 | 41,339 | 47,000 | 68,838 |
| (ஆ) உரக் களஞ்சியம் ... ... ... ... | — | — | — | — |
| (இ) ஆலை ... ... ... ... ... | — | — | — | — |
| 18. இலங்கைக் கடற்றொழில் ... ... ... ... | — | 2,718 | 7,029 | 8,229 |
| (அ) மீன்பிடி வள்ளங்களும் விற்பனை அமைப்பும் ... | — | 2,718 | 7,029 | 8,229 |
| (ஆ) மீன்பிடித் துறைமுகங்களும் வள்ளத் தளங்களும் ... | — | — | — | — |
| 19. அரசாங்க மாவரைத்தல் ஆலை ... ... ... | — | — | — | |
| 20. அரசாங்க உரத் தயாரிப்பு (எ) ... ... | — | — | — | — |
| 21. இலங்கைப் பெற்றோலியம் - தூய்மி (எ) ... ... | — | — | — | — |
| 22. அரசாங்க அச்சகம் (எ) ... ... ... ... | | | | |
| 23. அரசாங்க மரப் பொருள் ... ... ... ... | — | — | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி (தரவுகள் கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்டவை).

* தற்காலிகமாக

(அ) சகல எண்தொகைகளும் கூட்டுத்தாபனங்களின் நிதியாண்டுகளுக்குத் தொடர்புடையவை. தேசிய பாற் சபையும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பஞ்சாங்க ஆண்டையே நிதியாண்டாகக் கொண்டுள்ளன. ஏனைய கூட்டுத்தாபனங்களின் நிதியாண்டு ஏப்பிறல் தொடக்கம் மார்ச்சுவரைக்கும். அடிக்குறிப்பு 'உ'வைப் பார்க்கவும்.

(ஆ) வரி விதிக்கப்பட முன்பு.

(இ) பெறுமானத் தேய்வு இல்லாமல், நிதியாண்டின் முடிவிலுள்ளபடி ஒன்று திரண்ட மொத்தங்கள்.

(ஈ) வரவுசெலவுத் திட்டம் அமைக்கப்பட்ட அல்லது மதிப்பிடப்பட்ட எண்தொகைகள்.

(உ) கூட்டுத்தாபனமானது 1966 செப்தெம்பரில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையிலிருந்து கல்லோயா ஆலையைப் பாரமெடுத்தது. கல்லோயா ஆலையானது ஒற்ரோபர் தொடக்கம் செத்தெம்பர் வரைக்குமான நிதியாண்டின் அடிப்படையில் இயங்கியதால், 1965/66 வரைக்குமான அதன் எண்தொகைகள் கூட்டுத்தாபன எண்தொகைகளுடன் ஒன்றுசேர்க்கப்படவில்லை.

II (இ) 2

## இலாபம், முதலீட்டம் ஆகியவற்றின் பெறுமதி

| | இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ஆ) | | | | | முதலீட்டம் செய்த மூலதனம் (இ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1968/69 (ஈ) | 1965/66 | 1965/66 | 1966/67 | 1967/68 (ஈ) | 1968/69 (ஈ) | 1264/65 | 1965/66 | 1966/67 | 1967/68 (ஈ) | 1968/‿9 (ஈ) |
| 13,484 | +1,368 | +1,335 | + 719 | +1,964 | +3,546 | 45,400 | 50,300 | 54,467 | 64,500 | 93,600 |
| | +1,368 | +1,335 | + 719 | +1,964 | +3,546 | 45,400 | 50,000 | 53,300 | 53,300 | 53,300 |
| — | — | — | — | — | — | — | — | 1,167 | 7,208 | 40,300 |
| — | — | — | — | — | — | | | | | |
| — | — | — | — | — | — | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. |
| 9,492 | - 1,468 | - 1,004 | - 1,154 | - 1,160 | - 515 | 14,632 | 19,832 | 21,410 | 21,760 | 22,760 |
| 5,175 | - 1,084 | - 766 | - 841 | - 987 | - 704 | 1,350 | 1,350 | 2,378 | 2,378 | 2,378 |
| 3,234 | - 384 | - 238 | - 439 | - 420 | - 45 | 12,249 | 17,282 | 17,832 | 18,182 | 19,182 |
| 1,083 | — | — | + 126 | + 247 | + 234 | 1,033 | 1,200 | 1,200 | 1,200 | 1,200 |
| 22,652 | — | — | — | + 1,988 | + 7,827 | 80,273 | 94,395 | 115,900 | 121,065 | 123,300 |
| 25,187 | — | — | — | + 800 | + 3,000 | 37,721 | 58,731 | 67,396 | 67,525 | 67,525 |
| 2,985 | — | - 28 | - 1,052 | — 37 | + 2,132 | — | 15,127 | 16,704 | 30,170 | 43,455 |
| 2,985 | — | - 28 | - 1,052 | — 37 | + 2,132 | — | 15,127 | 16,249 | 15,667 | 21,952 |
| — | — | — | — | — | — | — | — | 455 | 14,503 | 21,503 |
| 99,245 | + 235 | +2,204 | +2,073 | + 1,210 | + 5,939 | 90 | 165 | 927 | 2,463 | 13,600 |
| 99,245 | + 235 | +2,204 | +2,073 | + 1,210 | + 5,939 | 90 | 165 | 245 | 377 | 600 |
| — | — | — | — | — | — | — | — | 681 | 1,922 | 6,000 |
| — | — | — | — | — | — | — | — | 1 | 164 | 7,000 |
| 9,089 | — | - 1,447 | - 3,400 | - 3,553 | - 2,800 | — | வி. கி. | 11,077 | 13,632 | 53,800 |
| 9,089 | — | - 1,447 | - 3,400 | - 3,553 | - 2,800 | — | வி. கி. | 9,346 | 9,684 | 30,721 |
| — | — | — | — | — | — | — | வி. கி. | 1,731 | 3,948 | 23,078 |
| 2,687- | — | — | — | — | வி. கி. | 5,194 | 11,115 | 15,153 | 19,992 | 29,106 |
| — | — | — | — | — | — | — | — | 800 | 2,800 | 10,000 |
| — | — | — | — | — | — | — | — | 8,075 | 17,521 | 65,521 |
| | | | | | | | | | | |
| வி. கி. | — | — | — | — | வி. கி. | — | — | — | — | 2,500 |

(ஊ) விற்பனைகள் 1968 திசெம்பரில் ஆரம்பித்தன.

(எ) இதுவரைக்கும் உற்பத்தியில்லை.

## அட்டவணை II (இ) 3

### அரசாங்கக் கைத்தொழில்களிலே தொழில்நிலைகள்—1966/67இலிருந்து 1968/69வரை

| கூட்டுத்தாபனம் | நிறைவேற்றுவோர் | | | நிறைவேற்றுவோர் அல்லா தோரும் எழுத்தர்களும் | | | ஆலை ஏனைய தொழிலாளிகள் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1966/67 | 1967/68 | 1968/69 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1966/67 | 1967/68 | 1968/69* |
| 1. தேசிய பாற்சபை ... | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | 889 | 1,275 | 1,171 |
| 2. கிழத் தாளாலை ... | 32 | 35 | 36 | 219 | 229 | 250 | 611 | 662 | 793 | 862 | 926 | 1,079 |
| 3. இலங்கைப்பீங்கான்பொருள் | 29 | 34 | 38 | 71 | 123 | 95 | 736 | 745 | 788 | 836 | 902 | 921 |
| 4. இலங். எண்ணெய், கொழுப்பு | 28 | 26 | 26 | 93 | 109 | 113 | 575 | 557 | 583 | 696 | 697 | 722 |
| 5. இலங்கை ஒட்டுப்பலகை ... | 10 | 12 | 9 | 67 | 69 | 44 | 692 | 697 | 989 | 769 | 778 | 1,042 |
| 6. இலங். தோற் பொருட்கள் ... | 15 | 13 | 13 | 88 | 99 | 101 | 485 | 531 | 547 | 588 | 643 | 661 |
| 7. பரந்தன் இரசாயனம் ... | 11 | 14 | 14 | 29 | 37 | 37 | 240 | 259 | 263 | 280 | 310 | 314 |
| 8. இலங்கைச் சீமெந்து ... | 51 | 65 | 73 | 305 | 334 | 358 | 1,171 | 1,364 | 1,476 | 1,527 | 1,763 | 1,907 |
| 8. இலங்கைச் சீனி (ஆ) ... | வி. கி. | 36 | 42 | வி. கி. | 897 | 520 | வி. கி. | 1,083 | 1,768 | 2,933 | 2,016 | 2,333 |
| 10. இலங். கனிப்பொருள் மணல் | 4 | 7 | 7 | 21 | 48 | 37 | 76 | 125 | 155 | 101 | 180 | 209 |
| 11. தேசிய உப்பு ... | 16 | 18 | 23 | 36 | 122 | 127 | 402 | 1,257 | 1,158 | 454 | 1,397 | 1,309 |
| 12. தேசிய ஆடைகள் ... | 12 | 16 | 310 | 73 | 98 | 311 | 1,417 | 1,622 | 1,400 | 1,502 | 1,736 | 2,021 |
| 13. தேசிய சிறு கைத்தொழில்கள் | 42 | 44 | 44 | 483 | 491 | 509 | 1,403 | 1,425 | 1,396 | 1,928 | 1,960 | 1,949 |
| 14. இலங்கை எஃகு ... | 29 | 36 | 60 | 49 | 61 | 133 | 518 | 853 | 801 | 596 | 950 | 994 |
| 15. இலங்கை டயர்கள் ... | 19 | 19 | 24 | 43 | 52 | 67 | 698 | 726 | 892 | 760 | 797 | 983 |
| 16. இலங். அரசாங்கவன்பொருள் | 23 | 24 | 30 | 94 | 120 | 124 | 489 | 2,066 | 1,006 | 606 | 2,210 | 1,160 |
| 17. இலங்கை மா அரைத்தல் ... | 9 | 9 | 11 | 19 | 20 | 48 | 34 | 34 | 162 | 62 | 63 | 221 |
| 18. இலங்கை உரம் ... | 10 | 12 | 16 | 70 | 113 | 152 | 31 | 36 | 97 | 111 | 161 | 265 |
| 19. இலங்கை கடற்றொழில் ... | 89 | 94 | 94 | 862 | 875 | 803 | 411 | 411 | 411 | 1,362 | 1,380 | 1,308 |
| 20. அர. வளமாக்கிகள் தயாரிப்பு | 2 | 3 | வி. கி. | 4 | 4 | வி. கி. | 4 | 4 | வி. கி. | 10 | 11 | வி. கி. |
| 21. இலங்கைப் பெற்றோலியம் எண்ணெய்த் தூய்மி ... | — | வி. கி. | 39 | — | வி. கி. | 43 | — | வி. கி. | 82 | — | 52 | 164 |
| 22. அரசாங்க மரம் ... | — | — | 42 | — | — | 249 | — | — | 890 | — | — | 1,181 |
| மொத்தம் ... | 431 | 517 | 951 | 2,626 | 3,901 | 4,148 | 9,993 | 14,457 | 15,382 | 16,872 | 20,207 | 21,914 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி. (எண்தொகைகள் கூட்டுத்தாபனங்களாலே தரப்பட்டவை)

(அ) 1966/67உக்கும் 1967/68உக்குமான எண்தொகைகள், கூட்டுத்தாபனங்களின் நிதியாண்டுகளின் இறுதியிலுள்ளபடியாகும். தேசிய பாற்சபையினதும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும், நிதியாண்டுகள் திசெம்பர் 31இல் முடிவுறும். ஏனைய சகல கூட்டுத்தாபனங்களினதும் நிதியாண்டுகள் மார்ச்சு 31இல் முடிவுறும். 1968/69ற்கான எண்தொகைகள் 1968 திசெம்பர் 31இல் உள்ளபடியாகும். இவை தற்காலிகமானவை.

(ஆ) எண்தொகைகள் பூர்த்தியாகவில்லை.

அட்டவணை II (இ) 4

## அரசாங்கக் கைத்தொழில்களின் ஏற்றுமதிகள் 1964/65—1968/69

| கூட்டுத்தாபனம் | உற்பத்திக் கூறு | 1964/65 | | 1965/66 | | 1966/67 | | 1967/68* | | 1968/69* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு | பெறுமதி ரூ. '000 | அளவு | பெறுமதி ரூ. '000 | அளவு | பெறுமதி ரூ. '000 | அளவு | பெறுமதி ரூ. '000 | அளவு | பெறுமதி ரூ.'000 |
| 1. இலங்கை எண்ணெய்களும் கொழுப்புகளும் ... | கொழுப்பு திராவகம் தொன்கள் | — | — | — | — | — | — | 220.0 | 356.7 | 2700.0 | 5400.0 |
| | கிளிசறின்–தொன்கள் | — | — | — | — | — | — | 1.0 | 0.2 | 300.0 | 715.0 |
| 2. இலங்கைத் தோற் பொருட்கள் ... ... | சப்பாத்துக்கள்–'000 சோடிகள் | — | — | — | — | 2.0 | 44.5 | — | — | 20.0 | 984.3 |
| | தோல் '000 தொன்கள் | 34.9 | 55.6 | — | — | 5.9 | 9.8 | 11.5 | 13.5 | — | — |
| 3. இலங்கை கனிப் பொருட்கள் ... ... | இல்மனைற்–'000தொன் | 38.4 | 945.7 | 50.6 | 1372.4 | 55.5 | 1453.2 | 73.4 | 2503.0 | 84.0 | 3150.0 |
| 4. பரந்தன் இரசாயனப் பொருட்கள் ... ... | குளோரின்–தொன் | 6.7 | 7.8 | 13.4 | 15.6 | 13.3 | 15.4 | — | — | — | — |
| 5. இலங்கை ரயர் ... | ரயர்கள்-தொகை | — | — | — | — | — | — | — | — | 320 | 38.6 |
| | ரியூப்புக்கள் - தொகை | — | — | — | — | — | — | — | — | 320 | |
| | ஒட்டுமடிப்புக்கள் ,, | — | — | — | — | — | — | — | — | 120 | |
| 6. இலங்கைகடற்றொழில்கள் | மீன்–'000 இரு. | — | — | — | — | — | — | 986.6 | 648.1 | 1.9 | 1459.7 |
| | சுறா–'000 இரு. | — | — | — | — | 5.9 | 44.8 | 3.7 | 13.7 | 7.1 | 56.5 |
| | ஏனைய உற்பத்திகள் '000 இரு. | — | — | — | — | — | — | 41.4 | 7.1 | — | — |
| மொத்த வருவாய்கள் ... | | — | 1009.1 | — | 1388.0 | — | 1567.7 | — | 3542.3 | — | 11804.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி (தரவு கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்டவை).

* தற்காலிகமானவை

றிற்கு 10 சதத்தாற் கூட்டி, பைந்தொன்றிற்கு 45 சதங்களுக்கு அதிகரிக்கப்பட்ட விலேவே காரணமாக அமையும். இறக்குமதி செய்யப்பட்ட பால் மா தட்டுப்பாடாக இருந்தமை காரணமாக, உடன் பாலின் கேள்வி அதிகரித்தமையினுல், சபை தனது ஆற்றல் உபயோகிப்பினை உயர்த்தக்கூடியதாயிருந்தமையும் காரணமாகும். மிக அண்மைக் காலம் வரையும், சில நிலேயங்களிற் பாற் கொள்வனவுகள் கேள்விக்குறையினுல் வரையறைக்குள் மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. பால் மிகையாகவுள்ள நிலேயங்களின் மேல்மிச்சமான பால் பதனிடுதலுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டது. இப் பாலின் விற்பனைக் கேள்வி நிலேமைகளிற் தங்கியதாகும். கட்டிப்பாற் தொழிற்சாலே நிறுவப்பட்டமையும், பாலின் மிகையான தொகையை உட்கொள்வதற்கு உபயோகமானதாயிருந்தது. எனவே பாற் சபை, 1967 தொடக்கம் தனது முயற்சிகளேக் குறிப்பிடத்தக்களவால் அதிகரிக்கக்கூடியதாயிருந்தது.

பால் பதனிடுதலும் மேலே கூறப்பட்டுள்ள காரணங்களால் அண்மை ஆண்டுகளில் சதவீதமாக அதிகரித்துள்ளது. பால் விற்பனை 1967, 1968ம் ஆண்டுகளிற் முறையே 23 இலட்சம் பைந்துகளாலும், 36 இலட்சம் பைந்துகளாலும் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு, உற்பத்தியாளருக்குக் கொடுக்கப்பட்ட விலேயதிகரிப்புடன் 1967 சனவரியில் நுகர்வோர் விலேயும் 10 சதங்களால் (சராசரி) உயர்த்தப்பட்டபோதிலும், ஏற்பட்டது. சபையின் ஏனைய உற்பத்திகளான ஐஸ்-கிறீம், யோக்கெற், தயிர் என்பவற்றில் அதிகரித்த விற்பனைகள் குறிப்பிடத்தக்கதாகும். எனவே, சபையானது தனது உயர்ந்த மொத்த விற்பனையினுல் தன் நட்டங்களே 1967ற்குரிய (தற்காலிக) ரூபா 15 இலட்சத்திலிருந்து 1968ல் ரூபா 5 இலட்சத்திற்குக் (தற்காலிக) குறைக்க முடிந்தது. முந்திய ஆண்டிலும்பார்க்க 1967ல் நட்டம் அதிகரித்தமை, ''இடைக்காலப்'' படிக் கொடுப்பனவின் விளேவினுலான உயர்ந்த கூலிச் செலவு பெருமளவு காரணமாக அமையும். சில சந்தர்ப்பங்களிற் சபையானது சந்தை விலேயிலும் 10 சதம் குறைவான மானிய விலேயிற் பாடசாலேப் பிள்ளேகளுக்குத் தொடர்ந்தும் பால் விநியோகித்தது.

மேலே கூறப்பட்டுள்ள பால் விநியோகங்களின் நட்டங்கள் 1968ல் கட்டிப்பால் தொழிற்சாலேயினுல் உழைக்கப்பட்ட இலாபத்தினுல் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. 1968 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கிய 250 இலட்சம் தகரங்கள் கொண்ட ஆண்டு உற்பத்திவலுவையுடைய இத் தொழிற்சாலே, 1968 திசெம்பர் இறுதிவரை 115 இலட்சம் தகரங்களே உற்பத்தி செய்தது. எனினும், இறக்குமதி செய்யப்பட்ட கட்டிப்பால், சந்தையிற் கிடைக்கக்கூடியதாயிருந்ததால், விற்பனைகள் ஏறக்குறைய உற்பத்தியின் அரைவாசியாகவிருந்தன. எனவே, இவ்வாண்டில் இதன் இலாபம் ரூபா 5 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. முழு ஆற்றல்வலுவுக்கு அமைந்த தொழிற்பாடும் விற்பனையும், இருப்பின் இக் கட்டிப்பால் ஆலே கூடிய இலாபம் பெறக்கூடியது. ஆனுல், அத்தகைய இலாபங்கள், 1968ற் செய்ததுபோல தொடர்பாக மலிவான மூலப் பொருட்களே உபயோகிக்கும்போதுமட்டுமே பெறக்கூடியனவாகும். 1969 தொடக்கம் உள்நாட்டுப் பாலேக்கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களேப் படிப்படியாகப் பதிலீடுவதற்குச் சபை திட்டமிட்டிருப்பதால், இக் கட்டிப்பால் ஆலே எதிர்காலத்தில் உயர்ந்த இலாபங்களே ஈட்டமுடியாது எனத் தெரிகிறது.

**கீழைத் தாள் ஆலேக் கூட்டுத்தாபனம்**

கீழைத் தாள் ஆலேக் கூட்டுத்தாபனத்தின் தொழில்கள், வாழைச்சேனேத் தொழிற்சாலேயிற் காகித உற்பத்திசெய்வதும், காகிதம் இறக்குமதிசெய்து விற்பனை செய்வதுமாகும். 1967/68ல் காகித உற்பத்தி சென்ற ஆண்டிலும் பார்க்க 9,500 தொன்களுக்கு, அல்லது 3.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது, தொழிற்சாலேயின் ஆற்றல்வலுவில் ஆண்டிற்கு 950 தொன்கள் கொண்ட மேலுமோர் அதிகரிப்பினுலும், தொடர்ச்சியாக மூன்ருவது ஆண்டில் அதன் ஆற்றலின் வலு உயர்ந்ததாக உபயோகிக்கப்பட்டமையினுலுமாகும். இத் தொழிற்சாலேயின் 1968/69ன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிச் செயலாற்றமும், 1968/69ற்கான வரவுசெலவுத் திட்டமும், 1968/69ன் உற்பத்தி சென்ற ஆண்டின் உற்பத்தியிலும்பார்க்க 1,167 தொன்

களாற் குறைவாக இருக்கும் என்பதைக் காட்டுகிறது. இதற்கு, 1968/69ல் இதுவரை கவனம் செலுத்தப்பட்டதான எழுதும் அச்சடிக்கும் ஏனைய காகிதங்களைவிட மெல்லியதும் பாரமற்றதுமான (ஆனால் உயர்ந்த விலையுடைய) முறித் தாள்களினதும், வங்கித் தாள்களினதும் உற்பத்தியில் அதிகளவு கவனம் செலுத்தியமை காரணமாக அமையும். அண்மை ஆண்டுகளில் முதலாவது இனத்தைச் சேர்ந்த காகிதங்களில் விற்பனைசெய்ய முடியாமற் குவிந்திருந்த கையிருப்புகளால் இம்மாற்றம் இயலுமானதாயிற்று.

சென்ற ஆண்டிற்[1] கூறியதுபோல இந்தக் கூட்டுத்தாபனம், தனியார் துறைக் கேள்வியின் வீழ்ச்சியினால் விற்பனைப் பிரச்சினையை எதிர்நோக்கியது. எனவே, சென்ற ஈராண்டுகளில் விற்பனைசெய்யப்படவேண்டிய அதிகளவான கையிருப்புகள் இக் கூட்டுத்தாபனத்திடம் சேரப்பட்டிருந்தன. 1967/68ல் 1 .0 சதவீதத்தால் 6,014 தொன்களுக்கு வீழ்ச்சியடைந்த விற்பனைத் தொகை, 1968/69ல் அதிகரிக்கும் போக்கினைக் காட்டியது. நடைமுறைப் போக்குகளின்படி 1968/69ல் விற்பனைகள் 61.7 சதவீதத்தால் 9,765 தொன்களுக்குக் கூர்மையாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டதால், விற்பனை வருமானம் ரூபா 100 இலட்சத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. 1967/68ல் தயாரிக்கப்பட்ட காகிதங்களின் விற்பனையின் பேரிலான இலாபம், விற்பனை இடர்களிற்கிடையிலும் சிறு அதிகரிப்பைக் காட்டியது. எனினும், 1968/69ன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளில் உள்ள போக்குகள், ஆண்டின் உயர்ந்தளவு விற்பனையால் 1968/69ல் மிகவும் உயர்ந்தளவு இலாபத்தை ஈட்டலாமென்பதைக் காட்டுகின்றன.

வியாபார முயற்சிகளைப் பொறுத்தமட்டில் இக் கூட்டுத்தாபனம் 1967/68ல் 6,700 தொன்கள்கொண்ட காகிதத்தை இறக்குமதிசெய்தது; 1968/69ல் இது 6,992 தொன்களுக்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதிற் கூட்டுத்தாபனம் 7,155 தொன்களை 1967/68ல் விற்பனை செய்து, 1968/69ல் 8,510 தொன்களை விற்பனைசெய்யத் திட்டமிட்டுள்ளது. 1967/68ல் வியாபார இயக்கங்களிற் கிடைத்த இலாபம் ரூபா 24 இலட்சமாகும். இத் தொகை, பிரதானமாக விற்பனைக் குறைவினாற், சென்ற ஆண்டிலும் பார்க்க 10.6 சதவீதம் குறைவானதாகும். மறுபுறத்தில் 1968/69ற்கான மதிப்பிடப்பட்ட இலாபம், ரூபா 14 இலட்சம் ரூபாவிற்கு மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இவ் வீழ்ச்சிக்கு, நாணய மதிப்பிறக்கத்தினாலும், அ.செ.உ.சா. திட்டத்தினாலும் ஏற்பட்ட அதிகரித்த இறக்குமதிக் கொள்விலைகள், மொத்த விற்பனைத் தொகையின் உயர்ச்சியினாற் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை மேலதிகமாக எதிரீடுசெய்யுமென்பதே காரணமாகும்.[2] கூட்டுத்தாபனத்தின் தொழில்நிலை 1966/67ன் 862லிருந்து 1967/68ல் 926ற்கும் 1968/69ல் 1,079ற்கும் அதிகரித்துள்ளது.

கூட்டுத்தாபனம் ஆண்டொன்றிற்கு 12,000 தொன்கள்கொண்ட உற்பத்திவலுவுடன் வாழைச்சேனையிற் காகித பட்டை ஆலையொன்றை நிறுவுதலிற் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எய்தியது. இவ்வாலைக்குரிய இயந்திரங்கள், சாதனங்களின் நிரம்பலுக்காக 1968 மாச்சில் சேர்மன் சமஷ்டிக் குடியரசுடன் ஓர் உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டது. இது 1971 அளவில் உற்பத்திக்கு வருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், கூட்டுத்தாபனமானது, 15,000 தொன்கள்கொண்ட ஆண்டுற்பத்தி ஆற்றலுடன் ஒரு கூழ்த் தாள் ஆலையை எம்பிலிப்பிட்டியாவிலும், அதே உற்பத்தி ஆற்றலுடைய மற்றொரு காகித ஆலையொன்றை இரஜன்கனையிலும் கட்டுவதற்குப் பொருளியற்றகைமை அறியும் ஆய்வுகளை நடாத்தியது.

---

1. ஆண்டறிக்கை 1967, பக்கம் 68, 69.

2. 1968 ஒற்றோபரில் இறக்குமதி செய்யப்பட்ட காகிதங்களின் விலைகள் உயர்ந்த இறக்குமதிச் செலவிற்கமைய உயர்த்தப்பட்டன. எனவே, 1968/69இல் வியாபார இலாபம் உயரக்கூடும்.

## இலங்கைப் பீங்கான்பொருட் கூட்டுத்தாபனம்

இலங்கைப் பீங்கான்பொருட் கூட்டுத்தாபனம் நீர்கொழும்பிலும் (940 தொன்கள் ஆண்டுற்பத்தியாற்றல்), பிலியந்தலையிலும் (1,600 தொன்கள் ஆண்டுற்பத்தியாற்றல்) இரு பீங்கான்பொருட் தொழிற்சாலைகளையும், பொறலஸ்கமுவையில் ஒரு கெயோலின் தூய்மியையும் (ஆண்டுற்பத்தியாற்றல் 5,000 தொன்கள்) நடாத்தி வந்தது. கூட்டுத்தாபனத்தின் மொத்த முதலீட்டம் ரூபா 200 இலட்சமாகும். இதில் ரூபா 119 இலட்சம் பிலியந்தலைத் தொழிற்சாலைக்காகும்.

கூட்டுத்தாபனத்தினாலுற்பத்தி செய்யப்பட்ட பீங்கான்பொருட்கள் 1966/67ன் 1,003 தொன்களிலிருந்து 1967/68ல் 2,369 தொன்களாக இருமடங்கிலும் மேலாக அதிகரித்துள்ளது. 1968/69ன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளின் போக்குகளின்படி, நடைமுறை ஆண்டின் உற்பத்தி மேலும் 2,603 தொன்களுக்கு அதிகரிக்கக்கூடிய தன்மையைக் காட்டுகின்றன. 1967/68ன் அதிகரிப்புக்கு உரிய முக்கிய காரணி பிலியந்தலையிலுள்ள புதிய தொழிற்சாலை இயக்கத்திற்கு வந்தமையேயாகும். 1968/69ல் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு நீர்கொழும்புத் தொழிற்சாலை அடுக்களைப் பொருட்கள் உற்பத்தியினதும், பிலியந்தலைத் தொழிற்சாலையிற் சுகாதாரப் பொருட்கள், சுவர் ஓடுகள் உற்பத்தியினதும் அதிகரிப்புகள் காரணமாக அமையும். எனினும், சென்ற ஈராண்டுகளில் நீர்கொழும்புத் தொழிற்சாலை உற்பத்தி ஆற்றலுக்கும் மேலாக இயங்கி இருக்க, புதிய பிலியந்தலைத் தொழிற்சாலை ஆற்றலுக்குக் குறைவாகவே இயங்கிற்றென்பது கவனிக்கப்படவேண்டியதாகும். கெயோலின் தூய்மியும், அதனது கணிக்கப்பட்ட உற்பத்தி ஆற்றலுக்குக் குறைவாகவே தொடர்ந்து இயங்கியபோதிலும், அது 1965/66 தொடக்கம் அதனது உற்பத்தியை நிதானமாக அதிகரித்துவந்தது. கூட்டுத்தாபன மூலங்களின்படி, சில தொழிற்சாலைகள் உற்பத்தி ஆற்றலுக்குக் குறைவாக இயங்கியதற்கு, சந்தைக் கேள்விக்கேற்ப உற்பத்தியை அமைப்பதான கூட்டுத்தாபனத்தின் கொள்கையே காரணமாக உள்ளது.

பெறுமான நியதிகளிலான கூட்டுத்தாபனத்தின் விற்பனைகள் படிப்படியாக அதிகரித்தன. 1968/69ன் மதிப்பிடப்பட்ட அதிகரிப்பு, சென்ற ஆண்டின் ரூபா 57 இலட்சம் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், ரூபா 30 இலட்சமாகவிருந்தது. கடந்த ஆண்டுகளில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனால் எழுந்த பூர்த்திசெய்யப்படாத கேள்விகளுக்கு இணக்கமளித்தபின், இக் கூட்டுத்தாபனமானது மெல்லென அதிகரிக்கும் கேள்வி உயர்ச்சிக்கேற்ப இயங்கத் தலைப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் இக் கூட்டுத்தாபனம் தனது முழு உற்பத்தி ஆற்றலை உபயோகிப்பதற்கும், பிளாஸ்ரிக் பொருட்கள், ஏனைய பதிலீட்டுப் பொருட்களிலிருந்து எழும் போட்டியை எதிர்க்கவும், தனது விற்பனைக் கொள்கையை மேலும் உறத்தக்கதாகவும், பல்வகைப்பட்டதாகவும் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

உற்பத்தியிலும் விற்பனையிலுமுள்ள நிதானமான அதிகரிப்பு, கூட்டுத்தாபனத்திற்கு அதிகரித்த இலாபங்களை விளைவித்தது. 1967/68ல் ஏற்பட்ட ரூபா 18 இலட்சம் கொண்ட இலாபம், சென்ற ஆண்டிலும்பார்க்க ரூபா 10 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இந்த இலாபம் 1968ன் சில விலைகளின் அதிகரிப்பினால் 1968/69ல் இருமடங்குக்கு மேலாக அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இலாபங்களுக்கு முக்கிய உதவுநர் பிலியந்தலைத் தொழிற்சாலையாகும். இக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நிலை 1966/67ற்குரிய 836லிருந்து 1967/68ல் 902ற்கும், 1968 திசெம்பரில் 921ற்கும் அதிகரித்துள்ளது.

---

1. கெயோலின் என்பது பீங்கான்பொருட் தயாரிப்பிற் பிரதானமாக உபயோகிக்கப்படுகின்ற ஒரு கனிப்பொருளாகும்.

இக் கூட்டுத்தாபனம் 50 இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டத்திற் சில முன்னேற்றச் செயல்களையும் செய்துள்ளது. இது மின்காப்புப் பொருட்கள் தயாரிக்கும் இயந்திரத்தை நிறுவுதல் உட்பட நீர்கொழும்புத் தொழிற்சாலையின் விரிவாக்கலையும் சீர்திருத்தங்களையும் உள்ளடக்கியதாகும். அதே வேளையிற் பிலியந்தலையிலுள்ள சுவர் ஓடு தயாரிக்கும் கூறும் விரிவாக்கப்படவிருக்கின்றது.

## இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனம்

தொடக்கத்தில் எண்ணெய், கொழுப்புகள் தொழிற்சாலை உயர்ந்த விஞ்ஞான முறையில் (இது வழக்கமான முறையிலும்பார்க்கக் கூடுதலான எண்ணெயை அளிக்கும்) உயர்ந்த தரத் தேங்காயெண்ணெயைத் தயாரிக்கவும், உப பொருட்களாகக் கொழுப்பும், கால்நடைத் தீனிகளும் தயாரிக்கவும் நிறுவப்பட்டது. அத்தகைய எண்ணெய்களுக்கு உலகச் சந்தையிலேற்பட்ட பாதகமான மாற்றத்தினாலும், மூலப் பொருட்களைப் பெறுவதிலுள்ள இடர்களினாலும் இக் கூட்டுத்தாபனம் காலப்போக்கிற் படிப்படியாகக் கால்நடைத் தீனியையும், அண்மையிற் கிளிசறின், கொழுப்புத் திரவகங்கள் போன்ற பொருட்களையும் தயாரிப்பதற்கும் தனது தொழிற்பாடுகளை மாற்றியது. 1968/69ல் மூலதன முதலீட்டம், பாவிக்கப்படாததும், ஓரளவு பாவிக்கப்பட்டதுமான மூலச் சாதனங்களும் உட்பட, ரூபா 279 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1966/67, 1967/68இலே தேங்காயெண்ணெய் உற்பத்தியிற் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கு 1968/69ல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது. பிந்திய ஆண்டில், நடைமுறைப் போக்குகள் 147 தொன்கள் கொண்ட சிறிய அதிகரிப்பைக் காட்டுகின்றன. எண்ணெய் ஆலை 1967/68லும் 1968/69லும் முறையே உற்பத்தி ஆற்றலின் 58 சதவீதத்திலும், 4.1 சதவீதத்திலும் இயங்கிற்று. மறுபுறத்திற் கால்நடைத் தீனி உற்பத்தியை 1967/68ல் 777 தொன்களால் அதிகரித்த கால்நடைத் தீனி எந்திரம், நடைமுறைப் போக்குகளின் படி, 1968/69ல் தனது உற்பத்தியில் 23,005 தொன்கள்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது, புதிய கால்நடைத் தீனி எந்திரம் ''முழு இயக்கத்திற்கு வருவதையும்'', அதனது உற்பத்தி ஆற்றல் உயர்ந்த அளவில் உபயோகிக்கப்படுவதையும் குறிக்கின்றது. 1967ன் பிற்பகுதியில் உற்பத்திக்குக் கொண்டுவரப்பட்ட கொழுப்புத் திராவகம், கிளிசறின் தயாரிக்கும் பல்தொகுப்பு இணைந்த எந்திரமும் 1968/69இலே தனது உற்பத்தியிற் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது.

எனினும், தேங்காயெண்ணெய், உற்பத்தியிலொரு பகுதி கொழுப்புத் திராவகங்கள், கிளிசறின் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்பட்டமையால், தேங்காயெண்ணெய் விற்பனையிலொரு வீழ்ச்சி ஏற்பட்டது. கால்நடைத் தீனி, கொழுப்புத் திராவகம், கிளிசறின் ஆகியனவற்றிலிருந்ததான விற்பனை வருவாய் சென்ற ஈராண்டுகளிற் கூரிய அதிகரிப்பைக் காட்டியது. எனவே, 1967/68இற் கால்நடைத் தீனி, கொழுப்புத் திராவகம், கிளிசறின் என்பவற்றிலிருந்து பெற்ற இலாபங்கள் அதிகரித்தமையால், ரூபா 6 இலட்சம் இலாபம் ஏற்பட்டது. இது தேங்காயெண்ணெயின் பேரிலான நட்டத்தை மேலதிகமாக எதிரீடுசெய்தது. 1968/69ல் கிடைக்கத்தக்க இலாபம் 46 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது பெரும்பாலும் கிளிசறினிலிருந்து கிடைக்கும் பெரிய இலாபங்களினாலும், தேங்காயெண்ணெயிலிருந்து இவ்வாலை நிறுவப்பட்டபின் முதன்முதலாகப் பெறப்படும் ஓர் இலாபத்தினாலும், ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இக் கூட்டுத்தாபனத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 1967/68ன் 696லிருந்து 1968 திசெம்பரில் 722ற்கு அதிகரித்துள்ளது.

## இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்

ஆரம்ப ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் ஜிந்தோட்டையில் 1941ம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். 1955ல்[1] அது கூட்டுத்தபானமாக்கப்பட்டபின் அதன் ஆக்கவலு ஆண்டொன்றிற்கு 250 இலட்சம் சதுரவடி ஒட்டுப்பலகைக்கு விரிவாக்கப்பட்டது. 1968/69ல் முதலீடு ரூபா 148 இலட்சமென மதிப்பிடப் பட்டுள்ளது. இதில் ரூபா 28 இலட்சம் மட்டுமே ஜிந்தோட்டைத் தொழிற் சாலையைச் சார்ந்ததாகும். தற்போது இக் கூட்டுத்தாபனம் தனது பிரதான உற்பத்தியான தேயிலைப் பெட்டிகள் தொடக்கம், சட்டங்கள், ஒட்டுப் பலகை மட்டைகள், அடை மட்டைகள், கதவுகள், டெனிஸ் பந்தாட்ட மேசைகள், எழுது மேசைகள் முதலியனவற்றையும் (அண்மைதொட்டு) மேலடை மெல்லொட்டுப் பலகைகளையும் உற்பத்தி செய்கிறது.

இக் கூட்டுத்தாபனம் தனது உற்பத்தியாற்றல்களை அதிகளவு உபயோகித்ததனால் 1966/67இலே தனது உற்பத்தியை மூவொட்டுப் பலகை நியதியில், 60 இலட்சம் சதுர அடிகளால் அதிகரித்திருக்கையில், 1967/68ல் அது மேலும் 1,58,000 சதுர அடிகளால் ஓரளவு அதிகரித்துள்ளது. எனினும், நடைமுறைப் போக்குகளின்படி, சென்ற ஆண்டுகளில் நிறுவப்பட்ட உற்பத்தி ஆற்றல்களைக் கூடிய முழுமையாகப் பயன்படுத்துவதன் பயனால், 1968/69ன் உற்பத்தி 55 இலட்சம் சதுரவடிகள் கொண்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைத் தெரிவிக்கின்றது.

அண்மையாண்டுகளில் இக்கூட்டுத்தாபனம் கதவுகள், மேசைகள், மேலடை மெல்லொட்டுப் பலகைகள் போன்ற இலாபமுள்ள விடயங்களை அதிகமாக உற்பத்தி செய்வதிலே அதிகரித்த கவனம் கொண்டுள்ளமையால், மீளப் பார்வையிடும் மூன்றாண்டுகளிலே தேயிலைப் பெட்டிகளின் விற்பனையிற் சிறிதளவு வீழ்ச்சியிருந்தது. விற்பனைப் பெறுமானம் கடந்தாண்டுகளில் நிதானமான அதிகரிப்பைக் காட்டியது. இக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் இலாபங்கள் ஈட்டியதுடன் 1968/69இற் கூடுதலான அதிகரிப்பை எதிர்பார்க்கின்றது. இடைக்காலப் படிக் கொடுப்பனவுகளாற் செலவுகள் ஒருபுறத்தில் அதிகரித்திருக்கையில், வராமையைக் குறைப்பதன் மூலம் பொருளியற் சிக்கனம் பெறப்பட்டுள்ளது. உயர்ந்த விற்பனை மொத்தமும், 1968/69ன் உயர்ந்தளவு இலாபங்களுக்கு உதவிபுரியும். கூட்டுத்தாபனத்தின் தொழில்நிலை (அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட) 1967/68ற்குரிய 778ல் இருந்து 1968 திசெம்பர் இறுதியில் 1,042ற்கு அதிகரித்துள்ளது.

இக் கூட்டுத்தாபனம் இணைந்த மரத் தயாரிப்புத் தொகுதி ஆலையொன்றினை அவிசாவெலையிற் கட்டுவதற்காக 1968ல் ரூமேனியாவின் கைத்தொழில் ஏற்றுமதி நிறுவனத்துடன்[2] ஒப்பந்தமொன்று செய்துள்ளது. இதன் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 665 இலட்சமாகும். அதன்பின் சில செயலாற்றவிருத்திகளும் ஏற்பட்டிருப்பதுடன், 1970ல் துண்டுப் பலகை எந்திரமும், 1971ல் ஒட்டுப்பலகை எந்திரமும், 1971 யூனில் மரமரியும் ஆலையும் தாபிக்கப்பட்டு முடிந்தவுடன், இந்த முழுத் தொகுதிகளும் 1971 ஒகத்தில் வர்த்தக உற்பத்தியில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நாளொன்றிற்கு மூன்று முறைமாறி வேலைசெய்யுமிடத்து, 32,750 கனமீற்றர்கள் ஒட்டுப்பலகையும் மேலடைப் பலகையும், 21,500 கனமீற்றர்கள் கொண்ட அரிந்த மரங்களையும் 9,000 கனமீற்றர்கள் கொண்ட துண்டுப்பலகையையும் உற்பத்தி செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2,000 ஆட்களுக்கு தொழில் வசதி அளித்து, ஆண்டொன்றிகு 200 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அந்நிய செலாவணியைச் சேமிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

---

1. தற்போதைய அரசாங்கக் கூட்டுத்தாபனமாக 1957ல் மீண்டும் இணைக்கப்பட்டது.
2. அரசாங்க உடைமை வியாபாரக் கூட்டுநிலையம்.

## இலங்கைத் தோற்பொருட்கள் கூட்டுத்தாபனம்

ஆரம்பத்தில் தோல் பதனிடும் ஆலையொன்றும், சப்பாத்து ஆலையொன்றும் கொண்ட தோற்பொருட்கள் உற்பத்தி நிலையம் ஒன்று 1941ல் நிறுவப்பட்டு, 1956ல்[1] கூட்டுத்தாபனமாக்கப்பட்டது. அதன்பின் புதியதொரு சப்பாத்து ஆலை நிறுவியதன்மூலம் அது விரிவடைந்துள்ளது. தற்பொழுது இக் கூட்டுத்தாபனம், சப்பாத்துக்கள், குருமத்தோல், பட்டைத்தோல் ஆகியவற்றையும், இன்னும் பல்வேறு ஏனைய தோற் பொருட்களையும் தயாரிக்கின்றது.

1967/68இற் குருமத்தோல் உற்பத்தி 20,000 சதுர அடிகளால் 6,29,000 சதுர அடிளுக்கு வீழ்ச்சியுற்றது. ''ஏனைய பொருட்களின்'' (முக்கியமாகப் பட்டைத் தோல்) உற்பத்தியின் 45,000 இறுத்தல்களான அதிகரிப்பினால் இது ஈடுசெய்யப்பட்டது. சப்பாத்து உற்பத்தியும் 1967/68ல் 14,000 சோடிகளால் அதிகரித்தது. அண்மையிற் கிடைக்கப்பெற்றுள்ள 1968/69ற்கான எண்தொகைகளின்படி, குருமத்தோல், பட்டைத்தோல் ஆகிய இரு தயாரிப்புகளும் அதிகரிப்புகளைக் காட்டுகின்றன. சப்பாத்துத் தயாரிப்பும் 49,000 சோடிகள் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க உயர்ச்சியைக் காட்டுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில், ஆரம்பத்திலிருந்த விகித ஆற்றலுக்கு எவ்வளவோ மேலாக இக் கூட்டுத்தாபனம் செலாற்றியுள்ளது. குருமத்தோல், பட்டைத்தோல் (ஏனைய பொருட்கள்) ஆகியவற்றின் குறைந்த விற்பனை (அளவு) எண்தொகைகளுக்குத் தோலின் பெரும்பகுதி சப்பாத்துத் தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டதே காரணமாகும்.

சப்பாத்து ஆலையிலிருந்து பெற்ற வருமானத்திலேற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, 1967/68ல் இக் கூட்டுத்தாபனத்தினது விற்பனைவருமானம் 3.4 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. இது தனியார் துறையிடமிருந்து வந்த கடும் போட்டியின் காரணமாகவெழுந்த விற்பனை இடர்களினாலேற்பட்டதாகும். இதன் விளைவால் 1967/68ல் கையிருப்புகளின் பெறுமதி 66.9 சதவீதத்தால் உயர்ந்தது. ஆயினும், 1968/69ல் விற்பனையைப் பெருக்குவதன்மூலம் கூட்டுத்தாபனம் இக் கையிருப்புகளை விற்று முடிக்குமெனத் தெரிகிறது. எனவே, 1967/68ல் 1.9 இலட்சம், ரூபாய்களுக்குக் குறைந்திருந்த கூட்டுத்தாபனத்தின் இலாபம், 1968/69ல் 4.1 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டுத்தாபனத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 1966/67லிருந்த 588லிருந்து 1967/68ல் 643 இற்கும், 1968 டிசெம்பரில் 661இற்கும் அதிகரித்தது.

இக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், தோற்பதனிடுஞ் சாலையொன்று நிறுவுவதையும், உள்நாட்டுத் தோற்பொருட்களுக்கு ஏற்றுமதிச் சந்தைகளை ஊக்குவிப்பதையும் உள்ளடக்கும். 12,50,000 சதுர அடிகள் குருமத்தோலும் 4,30,000 இறுத்தல் தாவரத் தோலும் பதனிடத்தக்க ஆற்றலைக்கொண்ட இந்தத் தோற்சாலைக்கு 62 இலட்சம் ரூபாய்கள் செலவாகுமென மதிப்பிடப்படுகின்றது. இது 1969ல் உற்பத்தியில் ஈடுபடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

---

1. தற்போதுள்ள நிலையில் இது 1957ல் மீள நிறுவப்பட்டது.

**பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்[1]**

எரிசோடா, பாசிகம், டி.டி.ரி. ஆகியவை தயாரிப்பதற்கென இரசாயனச்சாலையொன்று 1951ல் தொடங்கப்பட்டு, 1956இற் கூட்டுத்தபானமாக்கப்பட்டது. டி.டி.ரி. தயாரிப்புக்கான திட்டங்கள் கைவிடப்பட்டு, இப்பொழுது இக்கூட்டுத்தாபனம், சுத்திகரிக்கப்பட்ட மேசையுப்புத் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றது. அத்துடன், 1964 தொடக்கம் இக்கூட்டுத்தாபனம் எரிசோடா இறக்குமதி செய்து, இலங்கையில் அதைப் பாவிப்பவர்களுக்கு விற்பனை செய்கின்றது. 1968/69ல் மூலதன முதலீடு 123 இலட்சம் ரூபாய்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

அதன் தயாரிப்புத் தொழிற்பாடுகளில் எரிசோடாத் தயாரிப்பு, 1967/68ல் 32 தொன்களால் 970 தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது. அதே வேளையில், பாசிகம், மேசையுப்பு ஆகியவற்றின் உற்பத்தித்தொகை கணிசமானளவு அதிகரித்தது. அண்மையிற் கிடைக்கப்பெற்றுள்ள எண்தொகைகளின்படி, 1968/69ல் சகல விதமான தயாரிப்புக்களிலும் அதிகரிப்பு ஏற்படுமெனத் தெரிகிறது. மேசையுப்பின் விடயத்திற் தவிர, 1967/68ல் தன் ஆற்றலுக்குக் குறைவாகவே இயங்கிய இக் கூட்டுத்தாபனம், 1968/69லும் அப்படியே தொடர்ந்துசெயலாற்றும். இக் கூட்டுத்தாபனத்தாலே தயாரிக்கப்பட்ட பாசிகத்தின் விற்பனைகள்பற்றிய பிரச்சினைகள் கடந்த ஆண்டறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ளன. 1967/68லும், 1968/69லும் பாசிகத்தின் விற்பனைகளில் ஊக்கமளிக்கத்தக்கதோர் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தாலும், எரிசோடாத் தயாரிப்பின் உப பொருளாகிய பாசிகத்தின் மேலதிகத் தொகையைக் கூட்டுத்தாபனம் விற்றுமுடிக்கவேண்டியிருந்தது. உண்மையிற் பாசிகத்திற்கான குறைந்த கேள்வி, ஆலையில் எரிசோடாத் தயாரிப்பிலொரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

பாசிகமும், மேசையுப்பும் அதிகரித்தளவில் விற்கக்கூடியதாயிருந்த காரணத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற வருமானம் அண்மையாண்டுகளில் ஒரு நிலையான அதிகரிப்பைக் காட்டின. எனவே, இக்கூட்டுத்தாபனம் 1965/66லிருந்து தனது தயாரிப்புத் தொழிற்பாடுகளிலேற்பட்ட நட்டங்களைப் படிப்படியாகக் குறைக்கக்கூடியதாகவிருந்தது. 1964/65 தொடக்கம் உயர்ந்த இலாபங்கள் விளைந்தனவென்பதைத் தவிர, அதன் வியாபாரத் தொழிற்பாடுகள் சம்பந்தமாக வேறெவ்விதத் தரவுகளும் கிடைக்கக்கூடியதாகவில்லை. உண்மையில் 1966/67, 1967/68ல் இக் கூட்டுத்தாபனம் முழுவதற்குமான கணக்கிலுள்ள இலாபம், தயாரிப்புத் துறையிலுள்ள இழப்புகளுக்கு மேலதிகமாக வர்த்தக இலாபங்கள் இருந்தமையாலாகும்.

நீரகப் பாசிகத் திராவகம், சாம்பரப் பாசிகை[2] ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக முறையே 600 தொன்களும், 25 தொன்களும் கொண்ட வருடாந்த ஆற்றலுள்ள இரு இயந்திரங்களை இக் கூட்டுத்தாபனம் நிறுவியுள்ளது. இவை, கூட்டுத்தாபனத்தின் மேலதிகமான பாசிகத்தை உட்கொள்ளுவதற்கு ஏற்பட்டதாகும். இவையிரண்டும் 1969ல் உற்பத்தியில் ஈடுபடும்.

---

1. 1967ம் ஆண்டின் ஆண்டறிக்கை, பக்கம் 71, 72.
2. தீப்பெட்டிகள், வாணவெடி ஆகியவை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுபவை.

### இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம்

ஆரம்பத்தில் சீமெந்து ஆலையொன்று 1950 ஒற்ரோபரில் ஆண்டிற்கு 80,000 தொன்கள்[1] ஆற்றலுடன் காங்கேசந்துறையில் நிறுவப்பட்டது. இது 1956 நவெம்பரில் காங்கேசன் சீமெந்துத் தொழிற் கூட்டுத்தாபனமாக்கப்பட்டு, 1959 சனவரியிற் தற்பொழுதுள்ள இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனமாக மீளக் கூட்டப்பட்டது.[2] சீமெந்துப் பொருட்களும் தயாரித்தல், இறக்குமதி செய்தல்,[3] விற்பனை செய்தல் ஆகியன இதன் கடமைகளாகும். கூட்டுத்தாபனமாக்கப்பட்டபின்னர், இது காலியிலும் (அரைக்கும் இயந்திரம் ஒன்று மட்டும்), காங்கேசந்துறையிலும், புத்தளத்திலும் ஆலைகள் நிறுவி, தன் தொழிற்பாடுகளை விரிவாக்கியுள்ளது.

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 1967/68ல் 1,25,056 தொன்களால் 2,06,631 தொன்களுக்குக் கூர்மையாக அதிகரித்தது. இது காங்கேசந்துறையிலுள்ள உற்பத்திவலுமேலும் 45,000 தொன்களால் உயர்த்தப்பட்டு, காலியிலுள்ள அரைக்கும் இயந்திரத்தின் 1,00,000 தொன்கள் கொண்ட புதிய உற்பத்திவலுவையும் செயலாற்றத்திற்கு வந்தமையால், இக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வலு 2,65,000 தொன்களுக்கு உயர்ந்தமையால் ஏற்பட்டதாகும். ஆயினும், இதனுல் விளைந்த உற்பத்தியதிகரிப்பு காங்கேசந்துறையிலும், காலியிலும், முறையே 78,916 தொன்களும் 46,140 தொன்களுமாக உள்ளன. அண்மையிற் கிடைக்கப்பெற்றுள்ள எண்தொகைகள், 1968/69ல் காங்கேசந்துறையின் சீமெந்துத் தயாரிப்பில் 5,258 தொன்கள் கொண்டதொரு சிறிய வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இது காலியின் தயாரிப்பில் 39,310 தொன்கள் கொண்ட அதிகரிப்பால் மேலதிகமாக எதிரீடுசெய்யப்பட்டு, 34,052 தொன்கள் கொண்ட மொத்த அதிகரிப்பை விளைவித்தது. காங்கேசந்துறையிலேற்பட்ட வீழ்ச்சிக்கு, திருத்தியமைக்கப்பட்ட பழைய ஆலை, புதிய ஆலையுடன் இணைக்கப்படும் வேளையிற் தொழிற்பாடுகள் தடைப்பட்டமையே காரணமாகும். அதே வேளையில், 1967/68ல் தனது ஆற்றலின் 46.1 சதவீதமாகத் தொழிற்பட்ட காலியிலுள்ள அரைக்கும் இயந்திரம் வெளிநாட்டிலிருந்து கடும் பதமான கட்டிகள் அதிகமாகக் கிடைக்கப்பெற்றதன் காரணமாகத் தனது உற்பத்தியை அதன் ஆற்றலின் 85.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆயினும் இவ்விரு ஆலைகளும் தமது ஆற்றலுக்குக் குறைவாகவே செயலாற்றினவென்பது கவனிக்கத்தக்கது.

அண்மையாண்டுகளில், இக்கூட்டுத்தாபனத்தின் விற்பனைகள், படிப்படியாக அதிகரிப்பைக் காட்டின. மதிப்பிடப்பட்ட சந்தைத் தேவைகளுக்கேற்பவும், கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக்கு ஏற்பவும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சீமெந்து வழக்கமாக இணைக்கப்பட்டிருப்பதனுல்[4] உண்மையில் விற்பனை பற்றிய இன்னல்களை இக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கவில்லை. ஆயினும், தாமதித்து வந்த கப்பல் இறக்குமதிகளின் விளைவால் ஏற்பட்ட இறக்குமதிச் சீமெந்தின் குவியலினுல், இக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருவாய் 1968ன் பிற்பகுதியிற் குறைந்து வந்தது. 1968/69ல் காங்கேசந்துறையிலேற்பட்ட விற்பனை விழ்ச்சிக்கு இதுவே காரணியாகும்.

---

1. ஆரம்பத்தில் இதன் ஆற்றல் 1,00,000 தொன்களெனக் கணிக்கப்பட்டது. ஆனுல், சில தொழில் நுட்பப் பிரச்சினைகளால் இது குறைக்கப்பட்டது.
2. ஆரம்பத்தில் கூட்டுத்தாபனமாக்கப்பட்டமை 1955ன் 19ம் இலக்க அரசாங்க உதவி பெற்ற கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழாகும். அதற்குப்பின் கூட்டுத்தாபனமாக்கப்பட்டமை 1957ன் 47ம் இலக்க அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழாகும்.
3. சென்ற சில ஆண்டுகளில் இலங்கைக்குச் சீமெந்து இறக்குமதி செய்வது இக் கூட்டுத்தாபனத்தின் தனியுரிமையாகவிருந்தது.
4. தற்பொழுது சீமெந்து இறக்குமதிகளில் ஒரு அரசாங்க வியாபார நிறுவனமாகிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (கூ. மொ. வி.) தனியுரிமையைப் பெற்றிருக்கிறது.

உயர்ந்த விற்பனை மொத்தத்தினுல் இக் கூட்டுத்தாபனத்தின் இலாபம், 1967/68ல் 59 இலட்சம் ரூபாய்களால் 139 இலட்சம் ரூபாய்களுக்குக் கூர்மையாக அதிகரித்தது. கிட்டத்தட்ட இம் முழுத் தொகைக்கும், காங்கேசந்துறை ஆலையே வகைகூறிற்று. இறக்குமதி செய்யப்பட்ட கடும்பதமான கட்டிகளின் அதிகரித்த விலை, ஆற்றலின் குறைந்த பாவிப்பு ஆகியவற்றின் காரணமாக, காலியிலுள்ள ஆலை 13 இலட்சம் ரூபாய்கள்கொண்டவொரு சிறிய இலாபத்தைப் பதிவுசெய்தது. 1968/69ன் தன்மைகள், இக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் சிறிது வீழ்ச்சியுற்றதெனக் காட்டுகின்றன. இது காலியிலுள்ள ஆலையின் இலாபத்திலேற்பட்ட வீழ்ச்சியானது, காங்கேசந்துறையிலே திட்டமிடப்பட்ட சிறிய இலாப அதிகரிப்பை மேலதிகமாக எதிரீடுசெய்ததனுலாகும். ஆற்றல் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தும், இலாபங்களிலேற்பட்ட வீழ்ச்சிக்கு, அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின் விளைவால் இறக்குமதி செய்யப்பட்ட கடும்பதமான கட்டிகளின் விலையில் ஒரு கூரிய அதிகரிப்பு ஏற்பட்டதே காரணமாகும். 1968 செத்தெம்பரில்[1] சீமெந்தின் விலை தொன்னென்றுக்கு ரூபா 30ஆல் உயர்த்தப்பட்டிருக்காவிடில், இலாபத்திலேற்பட்ட வீழ்ச்சி இன்னும் கூடியதாக இருந்திருக்கும். இக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1966/67இல் 1,527லிருந்து 1967/68ல் 1,763ற்கும், 1968 திசெம்பரில் 1,907இக்கும் அதிகரித்தது.

அரைக்குமாலையின் ஆற்றல் போதாதிருந்தமை காரணமாக, காங்கேசந்துறையிலுள்ள திருத்தியமைக்கப்பட்ட சூளையின் (1969 சனவரியில் தொழிற்பட்டது) முழு ஆற்றலையும் (1,00,000 தொன்கள்) இக் கூட்டுத்தாபனம் பாவிக்க இயலாமலிருந்தது. எனவே, காங்கேசந்துறையில் மூன்ருவது சீமெந்து அரைக்கும் ஆலையொன்று கட்டுவது 1969 பெப்புருவரியிற் தொடங்கப்பட்டு, 1969 இறுதியில் பூர்த்திசெய்யப்படும். இது காங்கேசந்துறையின் ஆற்றலை மேலுமொரு 1,00,000 தொன்களால் உயர்த்தும். புத்தளத்தில் 945 இலட்சம் ரூபாய்கள் செலவில் ஆண்டொன்றிற்கு 220,000 தொன்கள் உற்பத்தியைச் செய்யுமென எதிர்பார்க்கப்படும் புத்தள விரிவுத் திட்டத்தின் முதற் பகுதியிலும், கூட்டுத்தாபனம் விரைவான வளர்ச்சியடைந்துள்ளது. 1969 இறுதிக்குமுன்னர் அது பூர்த்தியாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. புத்தளம் வேலைகளின் இரண்டாம் பகுதிக்கான இயந்திரங்களைப் பெறுவதற்காக, சேர்மன் சமஷ்டிக் குடியரசின் "குளொக்நர் ஹம்போல்ட் டியூஸ் ஏ.ஜி.'' உடன் இக் கூட்டுத்தாபனம் ஓர் ஒப்பந்தத்தைக் கையொப்பமிட்டுள்ளது. இத் திட்டம் 1971ல் பூர்த்தியானதும், மேலுமொரு 220,000 தொன்கள் சீமெந்தை இக் கூட்டுத்தாபனம் தயாரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 897 இலட்சம் ரூபாய்களாகும்.

*சிறி லங்கா சீனிக் கூட்டுத்தாபனம்*

ஆண்டிற்கு 21,000 தொன்கள் சீனியை உற்பத்தி செய்வதற்கும் துணை உற்பத்தியான வெல்லப்பாகினைக் கையாண்டு ஆண்டுற்பத்தி ஆற்றல் 600,000 கலன்கள்கொண்ட குடிவகையை, வடிசாலையில் உற்பத்தி செய்வதற்கும் தொடக்கத்தில் கந்தளாய்ச் சீனிக் கூட்டுத்தாபனம் 1957ல் நிறுவப்பட்டது. அதே வேளையில் 19,200 தொன்கள்கொண்ட சீனியையும், 750,000 கலன்கள்கொண்ட ஸ்பிரிட்டுக்களையும் உற்பத்திசெய்யும் ஆண்டுற்பத்தி ஆற்றலுள்ள இன்னுமொரு சீனித் தொழிற்சாலையுடன் இணைந்த வடிசாலை, கல்லோயாவிலுள்ள கிங்குராவையில் நிறுவப்பட்டு, கல்லோயா அபிவிருத்திச் சபையின்கீழ் இயக்கப்பட்டது. இரு தொழிற்சாலைகளும் பதனிடுதற்குத் தம் சொந்தத்தில் கரும்பை வளர்த்தன. மாநிலத்தின் கைவசமுள்ள சீனித் தொழிற்சாலைகள் ஒரு நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர

---

1. காங்கேசன் சீமெந்தின் விலை தொன்னென்று 180 ரூபாவிலிருந்து 210 ரூபாவிற்கும், றுஹுனு (காலி) சீமெந்தின் விலை தொன்னென்று 210 ரூபாவிலிருந்து 240 ரூபாவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

வேண்டுமென்று 1963ல் அரசாங்கம் எடுத்த முடிபிற்கமைய கூட்டுத்தாபனத்தின் முன்னைய பெயர் 'சிறி லங்கா சீனிக் கூட்டுத்தாபனம்' எனப் பெயர் மாற்றப்பட்டது. 1966 ஒற்ருேபரில் இக் கூட்டுத்தாபனத்திற்கு கல்லோயா சீனிப் பல்வகை ஆலை மாற்றப்பட்டது. அத்துடன் 1968ல் உடவளவில் உள்ள திட்டமிடப்பட்ட சீனித் திட்டம் இதற்குக் கையளிக்கப்பட்டது. இதனுல் இப்பொழுது இக் கூட்டுத்தாபனம் சீனி, வெல்லப்பாகு, தூய்மையாக்கப்பட்ட ஸ்பிரிட் ஆகியவற்றை கந்தளாயிலும் கல்லோயாவிலும் உற்பத்திசெய்கிறது. அத்துடன் பரிசோதனை அடிப்படையில் உடவளவில் சீனிப் பாணியையும் உற்பத்தி செய்கிறது.

தொடக்க காலந்தொட்டு நெரிப்பதற்குப் போதிய நிலையில் ஒழுங்காகக் கரும்பு கிடைக்காததினுல், தனது உற்பத்தி ஆற்றலுக்குக் குறைந்த நிலையிலேயேதான் கந்தளாய், கல்லோயா, சீனித் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. கரும்புப் பயிர்ச் செய்கைக்கும் சீனி உற்பத்திக்குமிடையிற் தொடக்கத்தில் இரு இணைப்பில்லாததும், கரும்புப் பயிர்ச் செய்கைக்கும் அறுவடைக்குப் போதிய தொழிலாளர் இல்லாததுமே இதற்குக் காரணமாகும். 1967/68ல் சென்ற ஆண்டின் உற்பத்தியிலும்பார்க்க அரைவாசிக்குக் கந்தளாய்த் தொழிற்சாலையின் உற்பத்தி வீழ்ச்சியுற்றது. சீனிப் பயிர்ச்செய்கைக்குத் தண்ணீர்ப் பற்ருக்குறை ஏற்பட்டதே இதற்குக் காரணமாகும். அதே ஆண்டின் நம்பிக்கையான தண்ணீர் நிரம்பலைப் பெற்றிருந்த கல்லோயாத் தொழிற்சாலை தனது உற்பத்தியை ஐந்து மடங்கால் அதிகரித்தது. 1968/69ல் அண்மையிற் கிடைத்த எண்தொகைகள் கந்தளாயின் சீனி உற்பத்தியின் கூரிய வளர்ச்சியைக் காட்டுவதோடு கல்லோயாவின் வீழ்ச்சியையும் காட்டுகிறது. இந்நிலைக்குப் பருவ நிலைகளே முழுக் காரணமாகும். சீனி உற்பத்தியின் துணை உற்பத்தியான வெல்லப்பாகிலேயே தங்கியிருக்கும் ஸ்பிரிட் உற்பத்தி பலவாண்டுகளாக சீனித் தயாரிப்பிற் காணப்பட்ட அதே போக்கினையே காட்டியது.

இக் கூட்டுத்தாபனம் தனது சீனி உற்பத்தி முழுவதையும் நிலவும் உலகச் சந்தை விலைகளுக்கமைய அரசாங்கத்திற்கு விற்கவேண்டும். இது தொன்னுக்குச் சராசரி ரூபாய் 550 ஆக அல்லது இருத்தலுக்கு 24 சதமாக கடந்த 3 ஆண்டுகளாக விளங்கியது. மறுபுறம் 1966/67ல் கந்தளாயில் உற்பத்திச் செலவு இருத்தலுக்கு 62 சதமாகவிருந்தது. இது 1967/68ல் ஏறக்குறைய ஒரு ரூபாவாக விளங்கியது. கல்லோயாவில் செலவுகள் இன்னும் அதிகரித்தன. இதனுல் கந்தாளாயிலும்பார்க்கக் கல்லோயாவிலேயே சீனி உற்பத்தியில் கூட்டுத்தாபனம் பெரிய நட்டத்தை அடைந்தது. மாருக ஸ்பிரிட் உற்பத்தி மிக்க இலாபம் தரும் முயற்சிகளாக இருக்கிறது. கந்தளாயிலேற்பட்ட குறைந்த உற்பத்தியின் காரணமாக இம் மூலத்தில் இருந்து பெற்ற இலாபம் 1967/68ல் சிறிது குறைந்தது. ஆனுல் 1968/69ல் இது குறிப்பிடத்தக்களவு சீர்திருந்தும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கல்லோயாவிற்கூட இம் முயற்சியில் இலாபம் ஏற்படும் போக்குத் தென்பட்டது. கல்லோயாப் பெருந்தோட்டத்திற் பணிபுரிந்தோரின் எண்ணிக்கைபற்றிய எண்தொகைகள் கிடைக்கவில்லை. அது தவிர்த்து கந்தளாயிலும் கல்லோயாவிலும் பணிபுரிந்தோரின் எண்ணிக்கையைப் பார்க்கையில் 1967/68ல் 2,016 ஆக இருந்தோர் 1968 திசெம்பர் முடிவில் 2,333 ஆக உயர்ந்திருப்பது தெரியவருகிறது.

தனது தொழிற்சாலையில் உற்பத்தி ஆற்றலைப் பயன்படுத்துவதுதான் கூட்டுத்தாபனத்தின் முதன்மைப் பிரச்சினையாகவிருந்தது. இதற்குள்ள காரணம் போதிய நிதானமான அளவுகளில் கரும்பு கிடைக்காதிருப்பதேயாகும். பெருந்தோட்டங்களுக்கு ஒழுங்காக நீரை வருவிப்பதனுல் தனது உற்பத்தியை அதிகரிக்க எண்ணியுள்ளது.

## இலங்கை கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனம்

கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனம் புல்மோட்டையிலுள்ள 40 இலட்சம் தொன்களௌன மதிப்பிடப்பட்ட ''எல்மனேட்'' தன்மையுள்ள மணல்களைப் பதன்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு 1957ல் நிறுவப்பட்டது. 1962 தொடக்கம் ஆண்டொன்றிற்கு 90 ஆயிரம் தொன்கள் கொண்ட எல்மனேட் பிரித்தெடுக்கும் பொறி செயலாற்றியது. பின்னர், அதே மணலில்1 காணப்படும் ''ரூட்டைல்'', ''சர்கோன்'' ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்காக, உபபொருட் பொறியொன்று திருகோணமலையில் நிறுவப்பட்டது. 1968/69ன் இறுதியில் மதிப்பிடப்பட்ட மூலதன முதலீட்டம் எல்மனேட் பொறிமீது 114 இலட்சம் ரூபாய்களும், ரூட்டைல்—சர்கோன் பொறிமீது 35 இலட்சம் ரூபாய்களுமாகும்.

1967/68ல் சிறிதளவு வீழ்ச்சியுற்ற எல்மனேட் உற்பத்தி, நடைமுறைப் போக்கின்படி, 1968/69ல் கூர்மையாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சென்ற ஆண்டறிக்கையிற் குறிப்பிட்டுள்ளபடி, புல்மோட்டையிலுள்ள உற்பத்தி உயர்ந்த பருவகாலத் தன்மையைக் (வானிலை காரணமாக) காட்டுகின்றது. மேலும், அந்நியக் கொள்வனவாளர்களின் உண்மையான வேண்டுகோளின் அடிப்படையிலேயே கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்கின்றது. யப்பானிலிருந்து பெறப்பட்ட ஓர் உறுதியான வேண்டுகோள் (முந்திய சிலவாண்டுகளைப்போலவே), 1968/69ல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியாகவிருந்தது. ஆயினும், ஆற்றல்வலுவைப் பயன்படுத்தியமை கணிசமாகக் குறைந்து காணப்பட்டது. ரூட்டைல் உற்பத்தி 1968 யூலையில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட்டது. நீர் வசதிப் போதாமையின் காரணமாக சர்கோன் உற்பத்தியில் சிறிது தாமதம் ஏற்பட்டது.

எல்மனேட்டின் விற்பனை உயர்ந்தமையின் பயனுல் இக் கூட்டுத்தாபனம் 1966/67லிருந்து அதிகரித்த இலாபங்களைப் பெற்றுள்ளது. உயர்ந்த விலை கொண்ட ரூட்டைல், சர்கோன் தயாரிப்புடன் இக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் எதிர்காலத்திற் கணிசமான அளவு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலையிலுள்ள உப பொருட்கள் ஆலை நிரல்முறைப்படி, பூர்த்தியாக்கப்பட்டு, ரூட்டையிலின் பரீட்சார்த்தமான தயாரிப்புகள் 1968 ஏப்பிறலில் ஆரம்பமாயின. அதே வேளையில், எதிர்காலத்தில் எல்மனேட்டுக்கு அதிகரித்த நிலையான கேள்வியை எதிர்நோக்கி, பருவகால மழைக்காலங்களிலும் உற்பத்தி தடையின்றி நடப்பதற்கு ஒரு 20 தொன் உலர்த்தியை நிறுவ இக் கூட்டுத்தாபனம் எண்ணியுள்ளது. 1969ல் இவ்வுலர்த்தி நிறுவப்பட்டதும், எல்மனேட்டைப் பிரித்தெடுக்கும் பொறியின் ஆற்றல் ஆண்டொன்றிற்கு 120,000 தொன்களுக்கு உயரும்.

---

1. புல்மோட்டையையும், திருகோணமலையையும் சுற்றியுள்ள கிழக்குக்கரைப் பகுதிகளிலுள்ள கனிப்பொருட் சார்புள்ள மணல் 72% எல்மனேட், 10% ரூட்டைல், 10% சர்கோன், சிறிதளவு மொர்னடைட் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறதென மதிப்பிடப்பட்டுள்ளது. எல்மனேட்டானது பூச்சுமைக் கைத்தொழிலில் வண்ணப் பொருள் தயாரிப்பதற்கு உபயோகப்படுவதாகும். ரூட்டைலானது 'ரிற்ரோனியம்' என்ற உலோகத்தைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படுவதாகும். இவ்வுலோகம், வெப்பம் தாங்கும் பண்புடையதால், ஒட்டுவேலைகள், விண்வளி விமான ஏவுகணைகள், சேணலை யெற் விமானங்கள் முதலியவற்றில் பெரிதும் உபயோகிக்கப்படுகின்றது. சர்கோன் என்பது உயர் வெப்பு ஏற்கும் பொருட்கள், வார்படச்சாலை, முகங்கள் தயாரிப்பதற்கும், பீங்கான் பொருட்களிலும், அணுவாயுத கைத்தொழில்களிலும் உபயோகிக்கப்படுகின்றது.

### தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்

முதன்முலாக 1957ம் ஆண்டு அம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள நான்கு உப்பளங்களை (பலத்துப்பனே, பண்டலே, கொகொலன்கலே, அம்பாந்தோட்டை) விருத்திபண்ணும்பொருட்டு, இந்தக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது. இதனுல் ஆண்டிற்கு 500,000 தொன்கள் ஏற்றுமதி செய்யலாமெனக் கருதப்பட்டது. இதே வேளேயில் அரசாங்க உப்புத் திணைக்களம் வடக்கு, மேற்கு பகுதிகளிலுள்ள மற்றைய உப்பளங்களைப் பரிபாலனம் செய்து, உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யலாயிற்று. 1963ம் ஆண்டில் அம்பாந்தோட்டைத் திட்டத்தைக்[1] கைவிட்டபின்னர், எல்லா உப்பு உற்பத்தித் தொழில்களேயும் இந்தக் கூட்டுத்தாபனமே நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறே, 1966ம் ஆண்டு யூலே மாதம் அரசாங்க உப்புத் திணைக்களமானது, கூட்டுத்தாபனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. தற்சமயம், கூட்டுத்தாபனம் ஆண்டிற்கு 63,500 தொன்கள் உற்பத்தி ஆற்றலுள்ள 8 உப்பளங்களை உடையது (முன்கூறியவாறு தென்பகுதியில் நான்கும், மற்றையவை மேற்குப் பகுய்யிலுள்ள பாலாவி, மன்னர் ஆகிய இடங்களிலும், வடபகுதியிலுள்ள இருபாலே, ஆனையிறவு ஆகியவையும்). மேலும் இக் கூட்டுத்தாபனம் ஆண்டிற்கு 14,500 தொன்கள் உற்பத்தி ஆற்றலுள்ள 7 தனியார் உடைமை உப்பளங்களிலிருந்தும் (மேற்குப் பகுதியிலுள்ள புத்தளம், கற்பிட்டியா, நாச்சிக்கலி ஆகியவையும், வடபகுதியிலுள்ள சிவியா தெரு, கல்லுண்டாய், கும்புறுப்பிட்டி, நிலாவெளி ஆகிய இடங்கள்) உப்புக் கொள்வனவு செய்துவருகிறது. மேற்கூறியவற்றுள் பண்டலே, கொகொலன்கலேயிலுள்ள உப்பளங்களில் உற்பத்தி தற்போது இல்லே. நான்கு பிரதான உப்பளங்களாகிய ஆனையிறவு (34,000 தொன்கள்), அம்பாந்தோட்டை (18,000 தொன்கள்), புத்தளம் (9,000 தொன்கள்), பாலாவி (8,000 தொன்கள்) என்பவை மொத்த ஆண்டு உற்பத்தியில் 88.5 சதவீதமான உப்புக்கு வகைகூறுகின்றன. இந்த உப்பளங்களில் 1968/69ம் ஆண்டு முடிவில், காணியின் பெறுமதியைவிட (இன்னும் மதிப்பீடுசெய்யப்படவில்லே), 131 இலட்சம் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.

சாதகமான காலநிலேயினுல் இந்தக் கூட்டுத்தாபனத்தின் 1967/68, 1968/69ம் ஆண்டுகளின் உற்பத்தி முறையே 11,143 தொன்களாலும், 16,274 தொன்களாலும் கூர்மையான பெருக்கைக் காட்டின. ஆனுல் விற்பனவு மிகக் குறைவாகவே கூடிற்று. 1967/68ம் ஆண்டில் நடந்தேறிய அதிக மொத்த விற்பனேயின் காரணமாகக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் 12 இலட்சம் ரூபய்களால் அதிகரித்தது. 1968/69ம் ஆண்டில் இது மேலும் ரூபா 3 இலட்சத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இலாப அதிகரிப்பின் காரணம், உப்பின் விலே தொன்னென்றுக்கு ரூபா 80லிருந்து ரூபா 110உக்கு 1968 யூலேயில் கூட்டப்பட்டதினுலாகும். எனினும் இவ்வதிகரிப்பு, சம்பள மிகுதியினுலும் (இடைக்காலப் படியின் பிரகாரம்), மேலதிக ஆக்கற் செலவினுலும் உண்டாகிய செலவுகளின் அதிகரிப்பினுல் மேலதிகமாக எதிரீடுசெய்யப்பட்டுள்ளது. இக் கூட்டுத்தாபனத்திலுள்ள வேலேவாய்ப்பு 1966/67ம் ஆண்டின் 454ல் இருந்து, 1967/68ல் 1,397க்கு உயர்வுற்றது. இது முக்கியமாக அரசாங்க உப்புத் திணைக்களத்தை இக் கூட்டுத்தாபனம் தன்னகத்தில் எடுத்ததன் காரணத்தாலாகும். ஆயினும், 1968ம் ஆண்டு திசெம்பர் மாதம் வேலேநிலே 1,308 ஆட்களுக்குக் குறைவுற்றது. கூட்டுத்தாபனத்தின் வேலேவாய்ப்பு காலநிலேயின் பிரகாரம் மாற்றங்களுக்குட்படத்தக்கதாகும்.

1968/69ம் ஆண்டிலும் இக் கூட்டுத்தாபனம் ஆனையிறவு, பாலாவி, புத்தளம் ஆகிய உப்பளங்களில் தொடர்ந்து அபிவிருத்தி வேலேகளை நடாத்தியது. மேலும் பலத்துப்பண்ணே, புந்தலே ஆகிய இடங்களிலும் அதிக அபிவிருத்தி முயற்சிகள் நடைபெற்றன. இவ்வாறிருக்க, சாவகச்சேரியில் பொறிமுறைப் படுத்தப்பட்ட உப்பளமொன்றிற்கான முதன்மையமைப்பு

---

1. 1963ம் ஆண்டின் 9ம் இலக்க இலங்கைப் பருவப் பத்திரிகை – உப்பு ஆணைக் குழுவின் அறிக்கையில் இவற்றின் காரணங்களைக் காண்க,

வேலைகள் 1968ம் ஆண்டில் முடிவடைந்தன. மொத்தம் 115,000 தொன்கள் உற்பத்தியாற்றலுள்ள இவ்வுப்பளம் (இது, ஆனையிறவிலும்பார்க்க 4 மடங்கு பெரிதாகவும், இலங்கையிலுள்ள மிகப் பெரியதுமானது) 1970ம் ஆண்டில் முடிவடைகையில், நாட்டின் உப்பு உற்பத்தியை இரட்டிப்பாக்கும். இக் கூட்டுத்தாபனம் இலங்கையிலுள்ள ஏனைய உப்பளங்களையும் நவீன முறைப் படி அமைக்கக் கருத்திற் கொண்டிருக்கின்றது.

### தேசிய ஆடைக் கூட்டுத்தாபனம்

இந்த ஆடைக் கூட்டுத்தாபனம் 1958ம் ஆண்டு தாபிக்கப்பட்டது. முதலில் 1963ம்[1] ஆண்டு, ஓகத்து மாதத்தில் வியாங்கொடையில் ஆண்டிற்கு 34 இலட்சம் இருத்தல் நூல் உற்பத்தி ஆற்றலுள்ள நூற்றல் ஆலையொன்று நிறுவப்பட்டது. 1965ல் ஆண்டொன்றிற்கு 140 இலட்சம் யார் உற்பத்தி ஆற்றலுள்ள நெசவுத் தொழில் செய்யக்கூடியதும், ஆண்டிற்கு 400 இலட்சம் யார் துணியை மெருகூட்டல் செய்யக்கூடியதுமான ஓர் ஆடை நெசவுச் சாலையும் அத்துடன் நிறுவப்பட்டது. மேலும், பூகொடையில் ஒரு துணி ஆலை அமைக்கச் சில செலவு செய்யப்பட்டபின்னர், இந்த முயற்சி கைவிடப் பட்டது. இதற்குப் பதிலாக, 1967/68ம் ஆண்டு துல்கிரியா என்னுமிடத்தில் இக் கூட்டுத்தாபனம் ஒரு புதிய இணைந்த ஆடை ஆலையை அமைக்கத் தொடங்கிற்று. 1964 நவெம்பர் தொடக்கம் மேற்கூறிய தயாரிப்புத் தொழிலுடன் இலங்கைக்குப் பருத்தி நூல், தனியுரிமையாய் இறக்குமதி செய்து, உள்ளூர் நெசவுத் தொழிலாளருக்கு விற்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும், 1966ம் ஆண்டு அம்பலாங்கொடையில் உள்ள 2,000 ஏக்கர் கொண்ட அரசாங்க விவசாயத் திணைக்களத்தின் பருத்தித் தோட்டத்தையும் பெற்றுக்கொண்டது. வியங்கொடையிலுள்ள பலநோக்கத் துணிச்சாலைக்கு மதிப்பிடப்பட்ட ரூபா 533 இலட்சம் முதலீடுசெய்யப்பட்டது. 1968/69ம் ஆண்டுவரை துல்கிரியாவிலுள்ள புதிய திட்டத்திற்கு ரூபா 403 இலட்சம் முதலீடுசெய்யப்பட்டுள்ளது. ஏனைய முகாங்களுக்குச் செலவு செய்யப்பட்ட தொகை தெரியவில்லை.

கடந்த 5 ஆண்டுகளால் வெளிநாட்டிலிருந்து கிடைத்த பருத்தியின் நிரம்பல் ஒரு சீராக இல்லாமல் இருந்தமை காரணமாக, நூற்றல் ஆலையின் உற்பத்தியிற் தளம்பல்கள் காணப்பட்டன. 1967/68ம் ஆண்டில் அதிகரித்திருந்த நூல் உற்பத்தி 1968/69ம் ஆண்டில் வீழ்ச்சியுறுமெனக் கருதப் படுகிறது. ஆதியிலிருந்தே இவ்வாலை தனது உற்பத்தி ஆற்றலுக்குக் குறைவாகவே இயங்கிற்று. 1967/68ம் ஆண்டுவரை படிப்படியாக உற்பத்தியில் ஏற்றம் காட்டிய நெசவுச்சாலையும் 1968/69ம் ஆண்டில் (ஏற்றத்திற்குத் திட்டமிட்டபோதிலும்), பிரதானமாக நீடித்த வேலைநிறுத்தங்களினாலும், தொழிலாளர்களின் வரவு ஒழுங்கீனத்தாலும் சிறிய வீழ்ச்சி காட்டுமெனத் தோன்றுகின்றது. நூல் நூற்கும் ஆலையிலும்பார்க்க நெசவுச்சாலை தனது உயர்ந்த ஆற்றலுக்கு மிகக் குறைவாகத் தொழிலாற்றுகின்றது. நூல், ஆடைகள் சம்பந்தமாகத் திட்டமிடப்பட்ட உற்பத்தி அதிகரிப்பின்படி இக் கூட்டுத் தாபனம், 1968/69ல் தனது இலாபத்தை ரூபா 16 இலட்சத்தால் உயர்த்த எண்ணியுள்ளது. கடந்த ஈராண்டுகளிலும் இலாபத்தில் அதிகரிப்பு இருந்தது. இக் கூட்டுத்தாபனம் தனது நூற் தயாரிப்பில் பெரிய பாகத்தைத் தனது சொந்த நெசவுச்சாலைக்குப் பயன்படுத்துவதின் காரணமாகவே, அட்டவணை II (இ) 2ல் குறைவான விற்பனைத்தொகை காணப்படுகின்றது. இத்தால் எஞ்சியவற்றையே விற்கின்றது. இதன் வியாபாரத் தொழில்பற்றிய தரவுகள் கிடைக்கவில்லை. இதில் வேலைவாய்ப்பு 1967/68 இறுதியில் 1,736 பேரிலிருந்து 1968 திசெம்பர் இறுதியில் 2,021 பேருக்குப் பெருகிற்று.

---

1. அமைப்பு இரண்டு பிரிவாய்ச் செய்துமுடிக்கப்பட்டது. முதலாவது உற்பத்திநிலை 1961 ஏப்பிறலில் அடையப்பெற்ற 12,800 கழிசுற்று நூற்கோல்களைக் கொண்டது. இரண்டாவது நிலை 1961 ஓகத்தில் அடையப்பெற்ற 13,800 நூற்கோல்களைக் கொண்டது.

*1968*ம் ஆண்டு தொடக்கம், இந்தக் கூட்டுத்தாபனம், துல்கிரியாவில் இருக்கும் தன்னடக்க பலநோக்குத் துணி ஆலை அமைப்பு வேலையில் துரிதமான முன்னேற்றம் எய்தியது. *1970*ம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்த ஆலை அமைப்பு முடிவடையும்போது, இது *174* இலட்சம் இருத்தல் நூலையும், *140* இலட்சம் யார் துணியையும், மேலும் *400* இலட்சம் யார் துணியை மெருகூட்டக்கூடியதாகவும் இருக்குமெனக் கருதப்படுகின்றது.

## தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம்

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின்னர் *1945*ம் ஆண்டில் அரசாங்கம், யுத்த வேலையில் விடுவிக்கப்பட்ட தச்சர்களுக்கு வேலைகாண் முகமாக அநேக தச்சு வேலைத் தொழிற்சாலைகளை அமைத்தது. இவைகளை முதலிற் கூட்டுறவு முறைப்படி ''தச்சு வேலைச் சங்கங்களாய்'' அமைத்தும், பின்னர் அரசாங்க அலுவலகங்களுக்காயினும் மரத் தளபாடங்களைச் செய்விப்பதற்காக அவற்றை இலங்கைத் தச்சுவேலைக் கூட்டுத்தாபனமாகச் சேர்க்கப்பட்டது. இதனை *1958*ம் ஆண்டு ''தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனமாகத்'' திருத்தியமைத்து, செங்கற்கள், ஓடுகள், வள்ளங்கள், ஆயுள்வேத மருந்து வகைகள் முதலிய பொருட்கள் தயாரிக்கவும் அநுமதியளிக்கப்பட்டது. *1968*ம் ஆண்டில் வள்ளத் தயாரிப்புத் தலம் கடற்றொழிற் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டது. தற்பொழுது இக் கூட்டுத்தாபனத்திற்கு கண்டி, மட்டக்களப்பு, மட்டக்குளியா, மொறட்டுவை, கொக்களை, பண்டாரவளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற் தச்சுவேலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மேலும், இந்தத் தாபனம் *1961*ம் ஆண்டு தொடக்கம் *1964*ம் ஆண்டுவரையுள்ள காலஅளவில் செங்கற்கள், ஓடுகள் (முக்கியமாக ஓடுகள்) தயாரிக்கும் ஆறு தொழிற்சாலைகள் பங்கதெனியா, அநுராதபுரம், யட்டியனை, வாஉட, அளுத்நுவரை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அமைத்துள்ளது. மேற்கூறிய முதல் நான்கு இடங்களிலும் ஆண்டுக்கு *20* இலட்சம் செங்கற்கள் அல்லது ஓடுகள் தயாரிக்கும் ஆற்றலிருக்கின்றது. அளுத்நுவரை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ளவை முறையே, *40* இலட்சமும் *10* இலட்சமும் கொண்ட தயாரிப்பு ஆற்றல் உள்ளன. *1967*ம் ஆண்டு அநுராதபுரத்திலுள்ள தொழிற்சாலையைத் தேசிய பொறியியற் கூட்டுத்தாபனத்திற்கு சிலபல பரிசோதனை நடாத்துவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. *1966*ம் ஆண்டில் நாவின்னையிலுள்ள தொழிற்சாலை ஆயுள்வேத மருந்துகளைத் தயாரிக்கத் தொடங்கிற்று, *1968/69*ம் ஆண்டில் இந்தக் கூட்டுத்தாபனம் செலவிட்ட மொத்த முதலீடு ரூபா *228* இலட்சமென மதிப்பிடப்படுகின்றது. இதில் ரூபா *192* இலட்சம் செங்கற்களும் ஓடுகளும் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அமையும்.

இந்தக் கூட்டுத்தாபனத்தினாற் தயாரிக்கப்படும் செங்கற்கள், ஓடுகள், மருந்துவகைகள், தளவாடங்கள் ஆகியவையின் மொத்தப் பெறுமதி *1967/68*ம் ஆண்டுவரை தொடர்ச்சியாக அதிகரித்தே வந்துள்ளது. தயாராகும் செங்கற்கள், ஓடுவகைகளின் பெறுமதிப் போக்கு முன்போலவே இருப்பினும், தளவாடங்கள், மருந்துவகைகளிற் சிறிய வீழ்ச்சி இருந்துவருமென *1968/69*ம் ஆண்டின் போக்கிலிருந்து அறியக்கிடக்கின்றது. முக்கியமாக செங்கற்கள், ஓடுகள், தச்சுவேலைத் தயாரிப்புகள் ஆகியவற்றின் விற்பனவு அதிகரித்ததன் பிரகாரம் மொத்த விற்பனை வருமானம் அதிகரித்திருந்தது. செங்கற்கள், ஓடுகள் ஆகியவற்றின் கேள்வி கணிசமான அளவு அதிகரித்தேயிருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனம் செங்கற்கள், ஓடுகள் ஆகியவற்றின் தயாரிப்பில் ஏற்படும் நட்டத்தைக் குறைக்கக்கூடுமென எண்ணவிடமுண்டு. மேலும், அதிகரித்த மொத்த விற்பனை இருப்பதால், மருந்துப் பகுதிகளில் அதிகரித்த வருமானம் வரக்கூடும். ஆகையால், எல்லாத் தொகுதிகளையும் எடுத்தாராயும்போது, *1968/69*ம் ஆண்டில் இந்தக் கூட்டுத்தாபனம் தனது நட்டத்தை அரைவாசியாற் குறைக்க எதிர்பார்த்துள்ளது. இது சம்பள ஏற்றம் இருந்தபோதிலும், தனது உற்பத்தி ஆற்றலில் அதிக அளவைப் பயன்படுத்துவதாற்றான் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1968ம் ஆண்டு ஒற்றோபரில் இக் கூட்டுத்தாபனம் மற்றுமொரு செங்கல், ஓடுகள் ஆக்கும் ஆலையைக் கன்வெலையிற் கட்டத் தொடங்கிற்று. 1970ம் ஆண்டில் முடிவடையுமெனத் திட்டமிடப்பட்ட இந்தவாலை ஆண்டிற்கு 170 இலட்சம் கூறுகளைத் தயாரிக்கும் ஆற்றலுள்ளது. இது, இக் கூட்டுத்தாபனத்தின் ஏனைய ஆலைகளின் மொத்த ஆற்றலிலும்பார்க்க 60 இலட்சம் கூறுகள் கூடியதாக இருக்கும். இந்த ஆலை தரை ஓடுகள் தயாரிக்கக்கூடியதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் இவ்வோடுகள் மிகச் சிறிய அளவிலேயே தயாரிக்கப்பட்டுவருகிறது.

### இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனம்

இந்தக் கூட்டுத்தாபனம், 1961ம் ஆண்டு ருசியாவிலிருந்து கிடைத்துள்ள கடன்பணத்தைக் கொண்டு ஒறுவெலையில் ஒரு பலபொருள் தயாரிக்கும் எஃகு ஆலையை அமைக்கும் முகமாகத் தாபிக்கப்பட்டது. முதன்முதலாக, ஆண்டிற்கு 60,000 தொன்கள் உருட்டிய பகுதிகளைத் தயாரிக்குமாற்றலுள்ள எஃகு உருட்டும் ஆலையும், 12,000 தொன்கள் கம்பித் தயாரிப்பு ஆற்றலுள்ள கம்பி உற்பத்திசெய்யும் ஆலையும், ரூபா 1,181 இலட்சம் செலவிற் கட்டப்பட்டது. இதன் முதன்நிலை அமைப்பு 1967ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் தொடங்கலாயிற்று. இரண்டு ஆண்டுகளுக்குமுன் இந்தக் கூட்டுத்தாபனம் ''இந்துஸ்தான் பொறிக்கருவிகள் தாபனத்தின்'' இலங்கை முகாமை உரிமைகளைப் பெற்றிருந்ததால், இலாபகரமான தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டிருந்தது.

கடந்த ஆண்டிலும்பார்க்க, 1968/69ம் ஆண்டில் தற்சமயம் கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரங்களின்படி, உருட்டிய எஃகும், கம்பித் தயாரிப்புக்களும் அதிகரித்திருப்பதைக் காட்டுகின்றன. இவைகளைத் தயாரிக்கும் இரண்டு ஆலைகளும் தமது ஆற்றலுக்கு மிகக் குறைவாகவே இயங்குகின்றனவென்பது குறிப்பிடத்தக்கது. உருட்டியினதும் கம்பி ஆலையினதும் தயாரிப்பு அவற்றின் ஆற்றல்களில் முறையே 44.2 சதவீதமும், 40.2 சதவீதமுமாகும். இதற்குள்ள காரணம், தயாரிப்பு முறைகளின் நுணுக்கங்களினலும், உருக்குப் பொருளுக்குள்ள கேள்வி அதிகரிப்பு மெதுவாகவே உயர்ந்து செல்லும் நிலைமையினலும், கூட்டுத்தாபனம் படிப்படியாகவே இறுதி உற்பத்தியாற்றலை அடைவதற்குத் திட்டமிட்டிருப்பதனலாகும். எதிர்பார்க்கப்படும் உயர்ந்த விற்பனைகளினல் இக் கூட்டுத்தாபனம் தனது இலாபத்தை 1967/68ம் ஆண்டிற்குரிய ரூபா 20 இலட்சத்திலிருந்து 1968/69ம் ஆண்டிற்கு ரூபா 78 இலட்சமாகப் பெருக்க எதிர்பார்க்கின்றது. ஆனல், தற்சமயம் கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களின்படி, மேற்கூறிய குறியிலக்கை 1968/69ம் ஆண்டில், முக்கியமாக குறைவுள்ள விற்பனையின் காரணமாக அடையமுடியாதென அறியக்கிடக்கின்றது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் நடைமுறைக்கு வந்ததன்பயனுற் கட்டற்ற இறக்குமதி உத்தரவுச் சீட்டின்கீழ் சிலபல உருட்டிய எஃகுப் பொருட்கள் இறக்குமதி செய்ய உத்தரவு அளிக்கப்பட்டது. இதனல் மொத்த விற்பனவு குன்றிற்று. ஆயினும், 1969ம் ஆண்டு சனவரி மாதத்தில் இந்தப் பொருட்கள் கட்டற்ற இறக்குமதி உத்தரவுச் சீட்டுமுறையிலிருந்து நீக்கப்பட்டது. இதனல் 1969/70ம் ஆண்டில் விற்பனை அதிகரிக்குமென எண்ண இடமுண்டு.

மேலும் ஒறுவெலையிலேயே 700 தொன்கள் வார்ப்புக்கள் ஆற்றலுள்ள எஃகு வார்ப்புச்சாலை கட்டிமுடிக்கப்பட்டது. இதன் பரீட்சார்த்த உற்பத்தி 1969ம் ஆண்டு மே மாதம் தொடங்கும். இக் கூட்டுத்தாபனம் நாகம் பூசும் பொறியமைப்பைப் பின்போட்டுள்ளதாயினும், உருவ அமைப்புச் சாலையொன்றைக் கட்டிமுடித்து, தயாரிப்புக்களை 1968ம் ஆண்டு சனவரி மாதத்திற் தொடங்கியுள்ளது. ''இந்துஸ்தான் பொறிக்கருவிகள் தாபனத்தின்'' தொழில்நுட்ப அறிவுடன்சேர்ந்து இவ்விடத்தில் ஒரு பொறிக்கருவிகள் ஆக்கம் நிலையத்தை அமைப்பதற்கு வேண்டிய முதன்மை வேலைகளைத் தொடங்கிற்று. முதலில் தற்போது ஒறுவெலையிலிருக்கும் கட்டட வசதியுடன் 1969ம் ஆண்டு யூன் மாதம் ஐவகைப் பொறிக்கருவிகளை இணைக்கும். பின்னர் உள்ளூரிலேயே எல்லாப் பொறிகளையும் ஆக்குவதற்கு எண்ணியுள்ளது. தயாரித்தல்

உபகரணங்களுக்கு ரூபா 3 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இரண்டாம் நிலை அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டே இருந்தன. இதனால் இறக்குமதிசெய்யும் தேனிரும்பிலிருந்தும், உள்ளூர் கழிவிரும்பிலிருந்தும் எஃகு தயாரிக்கப்படும். மூன்றும் நிலைக் கட்டடத்திலேயே கூட்டுத்தாபனம் உள்ளூர் உலோகக் கருவிரும்பை உபயோகிப்பதற்கு எத்தனித்துள்ளது.

## இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம்

இந்தக் கூட்டுத்தாபனமும், எஃகுக் கூட்டுத்தாபனத்தைப் போல், ருசியாவின் கடனுதவியால் 1962ம் ஆண்டு களனியில் ரயர்கள், ரியூப்புக்கள் தயாரிக்கும் நிலையமொன்றை நிறுவியது. 1967 மேயில் தயாரிப்புத் தொடங்கப்பட்ட முதல்நிலைக் கட்டத்தின் உற்பத்தி ஆற்றல் ஆண்டிற்கு 2,50,000 ரயர்களும், 1,52,000 ரியூப்புக்களும், 88,000 ஒட்டுமடிப்புக்களுமாகும். இந்த நிலையத்திற்கான மூலதனச் செலவு 675 இலட்சமாகும். தற்போது கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களின்படி 1968/69ம் ஆண்டில் ரயர்கள் தயாரிப்பு கடந்த ஆண்டிலும்பார்க்க 4,502ஆற் கூடியிருக்கையில், ரியூப்புக்களும், ஒட்டுமடிப்புக்களும் இவ்வாண்டிற் குறைவுற்றன. ரயர்களின் தயாரிப்புப் பெருக்கம் 1968ம் ஆண்டின் புகுத்தப்பட்ட புதிய கன அளவுப்படி ரயர்கள் தயாரித்ததனாலாகும். மேலும் இக் கூட்டுத்தாபனம் தனது ஆற்றல் நிலையிலிருந்து மிகவும் குறைந்த படியில் இயங்கிற்று. 1968/69ம் ஆண்டில் ஆற்றல் உபயோகத்தின் வீதங்கள், ரயர்களுக்கு 24.9 சதவீதமும், ரியூப்புக்களுக்கு 28.4 சதவீதமாகவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. உருக்குத் தயாரிப்பைப் போலவே, இங்கும் தொழில்நுட்ப நுணுக்கங்களின் காரணமாகப் படிப்படியாக ஆற்றலைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. விற்பனையை எடுத்தாராயும்போது, சந்தைகளில் வெளிநாட்டு ரயர்கள் கிடைக்கக்கூடியதாயிருந்ததன் காரணமாக, 1967/68ம் ஆண்டில் மந்தமாயிருந்த விற்பனவு, பின்னர் படிப்படியே ரயர் இறக்குமதிகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1968/69ம் ஆண்டிற் கூர்மையாக உயர்வுற்றது. இதனால் இத்தாபனம் முன்னுள்ள ஆண்டுகளில் விலைப்படாதிருந்த கையிருப்புக்களை விற்றுக் கொள்ளக்கூடியதாயிருந்தது. சந்தையில் ரயர்களின் தட்டுப்பாடுகள் படிப்படியாக அகற்றப்பட்டுச் செல்லும்போது விற்பனையிற் சாதாரணமான ஏற்றத்தையே இக் கூட்டுத்தாபனம் வருங்காலங்களில் அடையக்கூடியதாயிருக்கும்.

1968/69ம் ஆண்டில் 1,35,000 ரயர்கள் உற்பத்தி செய்யப்படுமென்ற அடிப்படையில் ரூபா 200 இலட்சம் இலாபம் அடையலாமென இத் தாபனம் திட்டமிட்டிருந்தது. ஆனால் ரயர் அச்சுக்கள் வந்தடைவதிற் காலதாமதம் காரணமாகத் திட்டமிட்டதிலும்பார்க்க உண்மையுற்பத்தி அரைவாசி அளவிலேயே, பெருக்கக்கூடியதாயிற்று. கிடைக்கக்கூடிய அண்மை விவரங்களின்படி, கடந்த 1967/68ம் ஆண்டிற் கிடைத்த இலாபமாகிய ரூபா 8 இலட்சத்திலிருந்து இவ்வாண்டு ஓரளவு உயர்ந்த ரூபா 30 இலட்சம் கொண்ட இலாபம் பெறக்கூடியதாகவிருக்கிறது.

தற்போதுள்ள தொழிற்சாலையின் செயலாற்றம் முழு ஆற்றல் நிலைமைக்கு வந்தவுடன் (மேலதிக உற்பத்தியை ஏற்றுமதிசெய்ய இத் தாபனம் திட்டமிட்டுள்ளது) இத்தாபனம் இரண்டாம் நிலைக் கட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. அத் திட்டத்தின்படி ஆண்டுக்குரிய ஆற்றல்நிலை 3,60,000 ரயர்களுக்கும், 2,50,000 ரியூப்புக்களும், ஒட்டுமடிப்புக்களும் விரிவுறும். இந்த உற்பத்திப் பெருக்கம் இக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுமதிப் பிரச்சாரத்தின் வெற்றியிலேயே தங்கியிருக்கும்.

## இலங்கை அரசாங்க வன்பொருட் கூட்டுத்தாபனம்

இந்தக் கூட்டுத்தாபனம் சிறிய கருவிகள், கமத்தொழிலுக்குரிய ஆயுதங்கள், மற்றும் ஏனைய நானுவிதப் பொருட்களும் தயாரிப்பதற்காக 1963ல் நிறுவப்பட்டது. இத் தொழிலில் இரும்பினுல் அல்லது இரும்பல்லாத உலோகத்தினுல் உருக்கு வேலை, அமுக்கம் செய்தல், வார்த்தல் மற்றும் சம்பந்தப்பட்ட ஆக்கமுறைகளையும் உள்ளடக்கும். இக் கூட்டுத்தாபனம் முதலில் யக்கலையில், போலந்து மக்கட் குடியரசு கொடுத்துதவிய கொடுகடனைக் கொண்டு ஒரு வன்பொருள் ஆலையை அமைத்தது. இந்த ஆலை ரூபா 160 இலட்சத்தில் முடிவுற்றதென மதிப்பிடப்பட்டது. இதன் ஆற்றல் ஆண்டிற்கு 34 இலட்சம் வன்பொருட்களை ஆக்கும் வலுவுடையது. ஒரு குறித்த பொருளையன்றி, ஒருமைப்பாடுள்ள பல தயாரிப்புக்களைத் தயாரிக்கக் கூடிய தன்மையே இந்த ஆலையின் முக்கியமான அம்சமாகும். ஆகவே, மண்வெட்டியிலிருந்து ஏனைய கமத்தொழில் ஆயுதங்களும், கட்டடக்காரர்களுக்குரிய இரும்புப் பொருட்களும், தண்ணீர்க்குழாய் இணைப்புக்கள் முதலியனவையும், கத்தி வகைகளும், தச்சுவேலை ஆயுதங்களும், பொறியியற் கருவிகளுமாக அநேக வகையான பொருட்களைத் தயாரிக்கக்கூடியதாக இந்த ஆலை அமைந்திருந்தது. 1965ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் வர்த்தகமுறையிலான தயாரிப்புக்கள் ஆரம்பமாயிற்று. சேர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்து கிடைத்த கடனில் ஒரு பகுதியாகக் கொண்டு எந்தரமுல்லை என்னும் இடத்திலும் வார்ப்பிரும்புச் சாலையொன்று அமைக்கப்பட்டது. ரூபா 215 இலட்சம் செலவில் அமைத்த இவ்வார்ப்பிரும்பு ஆலை நாளுக்கு ஒருமுறை இயங்கி ஆண்டிற்கு 6,000 தொன்கள் வார்ப்பிருப்புப் பொருட்கள் தயாரிக்கும் ஆற்றலையுடையது. திசெம்பரில் இதன் பரீட்சார்த்த தயாரிப்பு ஆரம்பமாயிற்று. வர்த்தகத்திற்கான தயாரிப்பு 1969, ஏப்பிறல், அல்லது நிரந்தரமாக மின்சக்தி கிடைக்கக்கூடியதாயிருக்கும்பொழுது தொடங்கவிருக்கிறது.

1967/68ம் ஆண்டில் வன்பொருள் ஆலை பூரணமான உற்பத்தியில் இருந்தமையால், எல்லாப் பகுதிகளிலுமுள்ள தயாரிப்பு, கடந்த ஆண்டிலும் பார்க்க (10 இலட்சம் கூறுகளால்) அதிகரித்துள்ளது. தற்சமயம் கிடைக்கக் கூடிய விவரங்களின்படி, இது 1968/69ம் ஆண்டில், இடையிடையே மின்சாரம் தடைப்பட்டிருந்தும், 14.7 இலட்சம் கூறுகளைத் தயாரித்து, 1967/68ம் ஆண்டிற்குரிய 14.6 இலட்சம் கூறுகளிலும்பார்க்க சிறிய ஏற்றமுடையதாயிருக்குமெனத் தெரிகிறது.

இக் கூட்டுத்தாபனம், பொருட்கள் விற்பனையில், நுகர்வோரின் விருப்பங்கள் இறக்குமதிப் பொருட்களில் இருப்பதினுலும், அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின்கீழ் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டமையாற் பதிலீட்டுப் பொருட்கள் அதிகரித்துக் கிடைக்கக்கூடியதாயிருந்தமையாலும், மிகப்பெரிய இன்னல்களுக்கு உட்பட்டிருந்தது. 1968ம் ஆண்டில் விலை ஏற்றமிருந்தபோதிலும், இத் தாபனத்தின் பொருட்கள் போட்டிகரமானவையாக இருந்தன. எனவே, கூட்டுத்தாபனத்தின் விற்பனை 1968/69ம் ஆண்டில் வீழ்ச்சியடைந்து அதன் கையிருப்புக்கள் மிகவதிகரித்தன. ஆயினும் முக்கியமாக ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினுல் விலைவாசிகள் 30 சதவீதம் முதல் 82 சதவீதம் வரை அதிகரித்ததினுலும், 1968 நவெம்பரில் மண்வெட்டிகளின் விலை 12 சதவீதம் உயர்த்தப்பட்டமையாலும் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானம் சிறிதளவால் அதிகரித்தது.

1967/68ம் ஆண்டில் உற்பத்தி அளவும் விற்பனையும் உயர்ந்த மட்டத்தில் இருந்தமையினுற் இக் கூட்டுத்தாபனம் தனது நட்டத்தை ரூபா 11 இலட்சத்திலிருந்து, ரூபா 37,000 இலட்சத்திற்குக் கணிசமானளவிற் குறைக்க முடிந்தது. ஆனுல், 1968/69ம் ஆண்டில் விற்பனை இன்னல்கள் இருப்பதால், திட்டமிடப்பட்ட இலாபமான ரூபா 21 இலட்சம் கிடைக்குமென்பது சந்தேகத்திற்குரியதாகும். இக் கூட்டுத்தாபனத்தின் பொருளியற்திறன் முக்கியமாக அதன் பொருட்களின் விற்பனையிலும், மின்சக்தித் தடைகளாற் பாதிக்

கப்படாத தளராத உற்பத்தியிலுமே தங்கியிருக்கின்றது. 1967/68ம் ஆண்டில் மின்சாரத் தடைப்பாட்டால் உற்பத்தியில் ரூபா 2,67,750க்கு நட்டம் அடையப்பட்டதென மதிப்பிடப்பட்டுள்ளது. வர்த்தக உற்பத்தியை இந்த ஆண்டிற் தொடங்கியிருக்கும் வார்ப்பிரும்பு ஆலேக்கும் தடையில்லாத மின்சார வசதியே கூடிய முக்கியமான விடயமாகக் கருதப்படுகின்றது.

1968 திசெம்பரில் இக்கூட்டுத்தாபனம் யக்கலேயிலிருக்கும் ஆலேயின் கமத்தொழில் ஆயுதங்கள் (முக்கியமாக மண்வெட்டிகள்) தயாரிப்பாற்றலே விருத்திசெய்யும் வேலேகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் கோரியுள்ளது. இத் திட்டத்திற்கு ரூபா 62.1 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தாபனம் மேலும் ஹங்கேரிய மக்கட் குடியரசு அளிக்கும் உதவியுடன் மின்சாரமாற்றி, மனேயிடு மீற்றர்கள், மின்சார மோட்டார்கள் ஆகியவை தயாரிக்கும் ஓர் ஆலேயையும் அமைப்பதற்கான திட்டமொன்றை வைத்திருக்கின்றது.

### இலங்கை உரக் கூட்டுத்தாபனம்

இவை முக்கியமாக, தெங்கு, நெல், தேயிலே, இரப்பர்ப் பயிர்ச்செய்கை ஆகியவற்றிற்கான அரசாங்க உர மானியத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்காக உரத்தை வழங்குவதற்கும், விற்பதற்கும், பதனிடப்படுவதற்கும், இறக்குமதி செய்வதற்கும் 1964 சனவரியில் இக்கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. இது உற்பத்தியை (அதாவது மூலப் பொருட்களே இறக்குமதி செய்வதற்கும் திருவாளர்கள் கொழும்பு கொமேசல் கொம்பனி லிமிட்டெட்டிலிருந்து வாடகைக்குப் பெற்ற ஹுணுப்பிட்டியா ஆலேயிற் கலத்தலும்) 1964 ஒற்ருேபரிலே தொடங்கியது. இதன்பின் வழங்குதலேப் பெருக்குவதற்கு மாவட்டங்களிற் தொடர்ச்சியாக உரக் களஞ்சியங்களே இக்கூட்டுத்தாபனம் நிறுவத் தொடங்கியது.

கடந்த ஐந்தாண்டுகளில் மூலப் பொருட்களே இறக்குமதி செய்வதிலும், உரத்தைக் கலப்பதிலும் வழங்குவதிலும் கூட்டுத்தாபனம் தன்னிகரில்லாத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அரசாங்க வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் அதிகரித்த தேவைகளே இவ்வதிகரிப்புகளுக்குக் காரணமாகும். விற்பனே வருவாய்களும் தொடர்பான அதிகரிப்பைக் காட்டியன. ஆனல் முக்கியமாக ரூபாய் மதிப்பிறக்கத்தினுல் ஏற்பட்ட கூடிய இறக்குமதிச் செலவுகளால் 1967/68ல் ஏற்பட்ட இலாபம் கணிசமானளவு வீழ்ச்சியுற்றது. எனினும், 1968/69ற்குரிய மதிப்பிடப்பட்ட ஆதாயம் அதிகரித்த விற்பனேயினுலும், 1968 ஏப்பிறலில் ஏற்பட்ட கூடிய விலேகளினுலும் கூரிய அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1966/67இற் கூட்டுத்தாபனத்திலிருந்து தொழிலாளர் எண்ணிக்கை 111 ஆகவிருந்து, 1967/68ல் 161 ஆகவுயர்ந்து, 1968 திசெம்பர் முடிவில் 265 ஆக விளங்கியது.

1967/68ன் முடிவில் 23,750 தொன்கள் அளவுகொண்ட 16 மாவட்ட உரக் களஞ்சியங்கள் நிறுவப்பட்டன. 1968/69ல் 19,000 தொன்கள் அளவு கொண்ட 14 களஞ்சியங்களே மேலும் நிறுவ கூட்டுத்தாபனம் எண்ணமிட்டுள்ளது. அத்துடன் 1968 நவெம்பரில் ஹுணுப்பிட்டியாவில் ஒரு உரம் கலப்புப் பொறியை நிறுவப் பிரித்தானிய நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இப்பொறியை நிறுவ ரூபா 116 இலட்சம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டிற்கு 1,00,000 தொன்களேக் கலக்கும் ஆற்றல் இப்பொறிக்கு உண்டென்றும் கணிக்கப்பட்டுள்ளது.

### இலங்கைக் கடற்ருெழிற் கூட்டுத்தாபனம்

உற்பத்தி செய்வதற்கும், பதனிடுவதற்கும் (அதாவது கலனிடுதல், உலர்த்துதல், காயவைத்தல்), மீனே விற்றல், மீன்பிடித் துறைமுகங்களேயும், நிறுவனங்களேயும் நிறுவுதல் (குளிர்ஊட்டும் அறைகள் உட்பட), தயாரிப்பு, மீன்பிடி துணேப் பொறியை இறக்குமதி செய்தலும் விற்றலும், தோணிகளேயும், மீன்பிடி வள்ளங்களேத் திருத்திப் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக இக்கூட்டுத்தாபனம் 1964 ஒற்ருேபரில் நிறுவப்பட்டது. இக் கூட்டுத்தாபனம் கண்டியிலும், குருநாகலிலும்,

கொழும்பிலும் மொத்த விற்பனைக் கடைகளையும், வழங்கும் நிலையங்களையும் நிறுவியுள்ளது. இது ஈரமீனை வழங்குவதற்கு 110 வழங்குநர்களையும், விறைப்பூட்டி இலங்கை மீனை வழங்குவதற்கு 250ற்கு மேற்பட்ட முகவர்களையும் வைத்திருக்கிறது. இது 1967/68ல் தோணிகளைத் தயாரிப்பதற்குத் தேசிய சிறு கைத்தொழில்கள் கூட்டுத்தாபனத்திலிருந்து மட்டக்குழியில் உள்ள தோணிச்சாலையைப் பொறுப்பேற்றது. அதே வேளையில், காலி, மிரிசை, வெருவலை, தங்கல்லை, திருகோணமலை, தொண்டமனாறு, மற்றும் ஏனைய பெரிய மீன்பிடி நிலையங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தது.

1967/68 வரை இக்கூட்டுத்தாபனத்தினாற் பிடிக்கப்பட்டு விற்கப்பட்ட மீனின் அளவு தளர்வில்லாத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 1968/69 நடைமுறைப் போக்குகள் மேலும் ஓர் அதிகரிப்பைக் காட்டுகிறது; இது தன் சொந்தத் தோணிகளாற் பிடிக்கப்பட்ட மீனின் 50 சதவீத அதிகரிப்பினால் ஆகும். இவ்வதிகரிப்பு வர்த்தகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டவையின் வீழ்ச்சியினால் ஓரலவுக்கு எதிரீடுசெய்யப்பட்டது. மறுபுறம், 1968/69ல் விற்பனை, தேங்கிய நிலையில் இருக்கையில், 1967/68ல் இது வீழ்ச்சியுற்றது. கருவாட்டின் விற்பனையின் அதிகரிப்பு விற்கப்படாத மீனின் ஒரு பகுதி அங்கு திருப்பப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது. உள்ளூர்ச் சந்தையில் வேண்டியளவு மீன் இருந்த காலங்களிலேதான் கூட்டுத்தாபனத்திற் பெரும்பகுதி உற்பத்தி ஏற்பட்டதினால் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டதென்று காரணங்கூறப்படுகிறது. மீன்பிடிப்புகளைச் சம இடைவெளி நிலையில் நடாத்திக் கூடிய விற்பனையைக் கூட்டுத்தாபனம் அடையமுடியும்.

1968/69ல் ரூபாய் 86 இலட்சம் அதிகரிப்பைக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருவாய் காட்டுகிறது. ஈரமீனின் விலைகளின் அதிகரிப்பும் ஏனைய உற்பத்திகளின் விலையின் சில அதிகரிப்புகளுமே இவ்வதிகரிப்புக்களுக்குக் காரணமாகும். 1967/68ல் 1,380ஆக அதிகரித்த கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர் எண்ணிக்கை, 1968 திசெம்பரில் 1,308ஆக வீழ்ச்சியுற்றது.

அநுராதபுரத்திலும் இரத்தினபுரியிலும் மொத்த விற்பனை தங்குநிலையங்களை நிறுவி, தனது வழங்கும் முறையைப் படிப்படியாக விரிவுபடுத்துவது கூட்டுத்தாபனத்தின் நோக்கமாகும். ஒரு நாளைக்கு 2 தொன் தகரமிடப்பட்ட மீனைத் தயாரிக்கத்தக்க ஒரு தகரம் அடைக்கும் சாலை பேசாலையில் உருவாகிக்கொண்டிருக்கின்றது. இது, 1969ல் உற்பத்திக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், கழிவு மீனிலிருந்து ஒருநாளைக்கு ஒரு தொன் மீன் தீனியை இது உற்பத்தி செய்யும் அதே வேளையில், மீன்பிடித் துறைமுகங்களை அமைக்கும் முயற்சியும் தொடரும். 1966/67ற் பெறப்பட்ட தோணிகட்டுமிடம் தோணிகளைத் திருத்துவதற்குப் பொறுப்பேற்கும் முறையில் நவீன பொறிகள் இணைக்கப்படும்.

அரசாங்க மாவரைக்கும் கூட்டுத்தாபனம்

ஐ.சோ.ச. ரூசியாவின் உதவிபெற்று மாச்சாலையை நிறுவி இயக்குவதற்காக 1964ல் இந்தக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது. ஒருநாளில் மூன்று முறைமாறி இயங்குவதால் (மாவுற்பத்தி 72 சதவீதம், தவிடு உற்பத்தி 23 சதவீதம், மாட்டிற்குரிய நடுத்தரமான கோதுமை மா 3 சதவீதம் என்ற நிலையில்) ஆண்டிற்கு 70,000 தொன்களை உற்பத்திசெய்யும் ஆற்றல் கொண்டவோர் ஆலை கொழும்பிலுள்ள முகத்துவாரத்தில் நிறுவப்பட்டு 1968ல் வர்த்தக உற்பத்தியைத் தொடங்கியது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபா 291 இலட்சமாகும்.

இது தொழிற்படத் தொடங்கியபின் இதனின் ஆற்றலின் பயன்பாடு 1969 சனவரியில் 42.5 சதவீதமாக விளங்கி, பெப்புருவரியிலும் மாச்சிலும் 76.6 சதவீதமாக அதிகரித்திருந்தது. இன்றைய நடைமுறைப்போக்கின்படி, 1969ல் இது முழுஆற்றலுடன் இயங்கும்போலத் தோன்றுகின்றது. கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர் எண்ணிக்கை 1967/68ல் 63 ஆகவிருந்து 1968 திசெம்பரில் 221 ஆக அதிகரித்துள்ளது.

## ஏனைய அரசாங்க முயற்சிகள்

அரசாங்கக் கைத்தொழிற்றுறையில் 39 அடையாள அறியத்தக்க வர்த்தகத் தொழில் நிலையங்கள் 1968ல் இருந்தன. ஆனால் அவை அரசாங்கக் கைத்தொழிற்றுறைக்கு வெளியே இயங்கின. இவை பின்வருபவையாகிய இலங்கைப் போக்குவரத்துச் சபையையும் இலங்கை அரசாங்கப் புகையிரதத்தையும் உள்ளடக்கிய போக்குவரத்துப் பொறுப்புக்கள், எரிபொருளையும் மின் சக்தியையும் வழங்கும் கைத்தொழில்களாகிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரசாங்க மின்சார பொறுப்பேற்கும் திணைக்களம், பொதுப் பயன்பாடுகளுக்குரிய அஞ்சல் செய்தி அறிவிப்புத் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்புத் துறைமுக ஆணைக் குழு, துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனம் ஆகிய துறைமுக நிறுவனங்கள், இலங்கை வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகிய நிதி நிறுவனங்கள், தேயிலை ஆய்வு நிறுவனம், இலங்கைச் சுற்றுலாச் சபை ஆகிய ஆய்வு பிரசார நிறுவனங்கள், ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை போன்ற பல்நோக்குப் பிரதேச அபிவிருத்தி நிறுவனங்கள், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் ஆகிய வர்த்தகத் தொழிற்பாடுகளாகும் சில.

சென்ற ஆண்டுகளில் இத்துறையில் முக்கிய தொழில் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் வரும் பகுதியில் தனித்தனியே ஆராயப்பட்டிருக்கிறது.

### இலங்கை அரசாங்கப் புகையிரதம்

இலங்கை அரசாங்கத்தின் வசமிருந்த புகையிரத சேவை 1867ல் தொடங்கிய காலந்தொட்டு அரசாங்கத் திணைக்களமாகவே இயங்கி வந்துள்ளது. புகையிரதத்திற்குரிய சில புள்ளி விவரங்கள் அட்டவணை II (இ) 5இலே தரப்பட்டுள்ளன.

தொடங்கிய காலந்தொட்டு 1968 செத்தெம்பர் முடியும்வரை முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனம் (பெறுமானத் தேய்வுற்று) ரூபாய் 6,391 இலட்சமாகவிருந்தது. இது சென்ற ஆண்டிலும்பார்க்க ரூபாய் 248 இலட்சம் அதிகரிப்பைக் காட்டுகிறது. புத்தளத்திற்குப் பாதை நீடிப்பதிலேயே 1967/68ல் மூலதனச் செலவின் ஒரு பகுதி செலவழிக்கப்பட்டுள்ளது. 1967/68ன் முடிவில் மொத்தப் பாதை 1,061 மைல்களாகவிருந்தது. இது விரிந்த பாதையில் 971 மைல்களாகவும், ஒடுங்கிய பாதையில் 90 மைல்களாகவும் இருந்தன. மறுபுறம் 1967/68ல் பழைய ஊர்திகள் ஓய்வு பெற்றதனால், மொத்த ஊர்திகளின் தொகை சிறிய வீழ்ச்சியைக் காட்டின.

1967/68 காலப் பகுதியில் ஏற்றிச்செல்லப்பட்ட பயணர்களின் எண்ணிக்கை 28 இலட்சத்தால் அல்லது 3.6 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்குகையில் சென்றாண்டில் இந்த அதிகரிப்பு 40 இலட்சமாக அல்லது 5.4 சதவீதமாகவிருந்தது. எனினும், பயணர் மைல்களின் அதிகரிப்பு 3.1 சதவீதமாயிருந்த சென்ற ஆண்டிலும்பார்க்க 1967/68ல் (7.7 சதவீத) அதிகரிப்பைக் காட்டியது. இது மீளப் பார்வையிடும் ஆண்டில் கூடிய இலாபத்தைத் தரத்தக்க நீண்ட தூரப்பணயத்தைக் கவர்வதிற் புகையிரதம் ஓரளவு வெற்றி அடைந்துள்ளதென்பதைக் காட்டுகிறது.[1] இது பயணர்களில் இருந்து பெற்ற வருவாய்கள் சென்ற ஆண்டில் ரூபாய் 17 இலட்சத்தால் அதிகரித்ததற்கு எதிராக 1967/68ல் ரூபாய் 31 இலட்சத்தால் அதிகரித்திருந்ததையும் விளக்குகின்றது.

சென்ற ஆண்டைவிட 1967/68ல் பொருட்களின் போக்குவரத்து ஓரளவு அதிகரிப்பைப் (8,000 தொன்கள்) பெற்றிருந்தது. இது தெருப் போக்குவரத்துடன் கடந்த பத்தாண்டுகளாக அல்லது அதற்கு மேலாகப் புகையிரதம் எதிர்நோக்கும் போட்டியின் போக்கிற்கு அமையவே விளங்குகிறது.

---

1. 1967/68ல் பயணக்காரரின் சராசரி பயணத் தூரம் 20.1 மைல்களிலிருந்து 20.9 மைல்களுக்கு உயர்ந்தது.

## அட்டவணை II (இ) 5

### இலங்கை அரசாங்கப் புகையிரதம் 1963/64—1967/68 (அ)

| விடயங்கள் | 1963–64 | 1964–65 | 1965–66 | 1966–67 | 1967–68 |
|---|---|---|---|---|---|
| 1. ஆண்டு முடிவில் முதலீடுசெய்யப்பட்ட மூலதனம் (ப. இ. ரூ.) ... ... | **536.4** | **566.4** | **592.9** | **614.3** | **639.1** |
| 2. பாதை மைல்களில் (மைல்கள்) ... | **1,028** | **1,033** | **1,043** | **1,053** | **1,061** |
| (அ) அகண்ட பாதை ... ... | 938 | 943 | 953 | 963 | 971 |
| (ஆ) ஒடுங்கிய பாதை ... ... | 90 | 90 | 90 | 90 | 90 |
| 3. போக்குவரத்து ஊர்திகள் (எண்கள்) ... | **7,785** | **8,010** | **8,204** | **8,067** | **7,983** |
| (அ) தொடர்வண்டி இயக்கும்பொறி ... | 355 | 355 | 357 | 355 | 344 |
| (ஆ) வண்டிகள் (ஆ) ... ... | 7,430 | 7,655 | 7,847 | 7,712 | 7,639 |
| 4. சுமக்கப்பட்ட போக்குவரத்து | | | | | |
| (அ) பயணர் (இ) (எண்கள் ப.இ.) ... | 73.4 | 73.5 | 74.7 | 78.7 | 81.5 |
| (ஆ) பொருட்கள் (ஈ) (தொன்கள் ப.இ.) ... | 1.9 | 1.6 | 1.7 | 1.8 | 1.8 |
| 5. போக்குவரத்து மைல்கள் | | | | | |
| (அ) பயணர் மைல்கள் (ப.இ. பயணர் மைல்கள்) ... | 1,453.5 | 1,498.4 | 1,536.9 | 1,584.9 | 1,706.2 |
| (ஆ) பொருட்கள் மைல்கள் (ப. இ. தொன்கள்) ... ... | 217.7 | 196.4 | 212.1 | 211.9 | 221.5 |
| 6. மொத்த வருவாய் (ரூபாய் ப.இ.) ... | **100.4** | **97.3** | **99.9** | **102.1** | **106.7** |
| (அ) பயணர்கள் ... ... ... | 47.6 | 48.0 | 48.9 | 50.6 | 53.7 |
| (ஆ) பொருட்கள் ... ... | 44.5 | 40.4 | 43.7 | 43.3 | 44.2 |
| (இ) ஏனைய ... ... ... | 8.3 | 8.9 | 7.4 | 8.2 | 8.8 |
| 7. மொத்தச் செலவு (ப.இ. ரூ.) ... | **139.6** | **145.1** | **150.2** | **148.3** | **154.4** |
| (அ) தொழிற் செலவு ... ... | 120.9 | 124.9 | 128.3 | 125.0 | 129.6 |
| (ஆ) ஆண்டுத் தொகைகள் (உ) ... | 7.6 | 8.2 | 9.0 | 9.7 | 10.5 |
| (இ) வட்டி (ஊ) ... ... ... | 11.1 | 12.0 | 12.9 | 13.6 | 14.3 |
| 8. நயம் (+) அல்லது நட்டம் (—) ப. இ. ரூபாய் | | | | | |
| (அ) வேலைசெய்கையில் ... ... | –20.5 | –27.6 | –28.4 | –22.9 | –22.9 |
| (ஆ) முழுமையாக ... ... | –39.2 | –47.8 | –50.3 | –46.2 | –47.7 |
| 9. தொழில்நிலை | | | | | |
| (அ) தொழிலிலமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை ... ... ... | 24,615 | 26,848 | 27,253 | 26,038 | 24,965 |
| (ஆ) மொத்தக் கூலிச் செலவு (ப.இ.ரூ.) | 79.2 | 81.3 | 83.4 | 82.6 | 82.9 |

மூலம்: இலங்கை அரசாங்கப் புகையிரதம்.

(அ) ஒற்றோபர்—செத்தெம்பருக்குரிய நிதியாண்டுகள்.

(ஆ) பெரிய பாதையில் நாலு சில்லுகள்.

(இ) மாதத்திற்கு 50 பயணங்கள் என்ற அடிப்படையில் தொகுக்கப்பட்ட பருவப் பயணச் சீட்டையும் உள்ளடக்கும்.

(ஈ) பணம் கட்டாது ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பொருட்களையும் உள்ளடக்கும்.

(உ) ஆண்டுத் தொகைகள் மீண்டும் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் திருப்பிக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(ஊ) வட்டி கொடுக்கப்படுவதில்லை. ஆனால் கணக்கிலிருந்து பின்பு நீக்கப்படும்.

(எ) மூப்போய்வு உதவுதொகைகளையும் உள்ளடக்கும்.

இறக்குமதிகளின் தடையினுல் இன்று இருப்பதிலும்பார்க்கத் தெருப் போக்குவரத்து ஊர்திகளின் நிலைமை திருந்திய நிலையில் இருந்திருப்பின் புகையிரதத்தின் நிலை இன்னும் கேவலமாய் இருந்திருக்கும். உண்மையில் அண்மைக் காலத்தின் (அரிசி, மா, சீமெந்து, பெற்ரேலியம் உற்பத்திகள் ஆகிய) அரசாங்கச் சரக்குக்குவியல்களே புகையிரதம் கொண்டுசென்ற பெரும்பகுதிப் பொருட்களாக விளங்கின. எனினும், சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1967/68ல் பொருட்களின் தொன்மைல்கள் அதிகரித்துள்ளன.[1] இதனுற் சாராசரி கொண்டுசெல்லப்பட்ட தூரம் 127.4 மைல்களிலிருந்து 132.5 மைல்களுக்கு உயர்ந்தது. எனவே, பொருட்கள் போக்குவரத்தில் ரூபா 9 இலட்சம் கொண்ட சிறு வருவாய் அதிகரிப்புப் புகையிரதத்திஞற் பதிவுசெய்யக்கூடியதாயிருந்தது.

புகையிரதத்தின் மொத்த வருவாய் 1967/68ல் ரூபாய் 46 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. ஒப்புநோக்குகையிற் சென்ற ஆண்டில் இவ்வதிகரிப்பு ரூபாய் 22 இலட்சமாகவிருந்தது. மறுபுறம் மொத்தச் செலவு ரூபாய் 61 இலட்சத்தால் அதிகரித்தது. எதிராக 1966/67ல் இது ரூபாய் 19 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. 1967/68ல் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இடைக் காலப்படி வழங்குவதென்ற முடிவின்படி கூலிகளும் இளைப்பாறற் சம்பளமும் அதிகரித்ததினுல் ஏற்பட்ட ரூபாய் 46 இலட்சம் அதிகரிப்பும் (வேலைநிலையில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் மொத்தக் கூலி ரூபாய் 3 இலட்சத்தால் அதிகரித் தது), இயக்கச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பும் காரணங்களாகும். இதனுல் வருவாயின் அதிகரிப்பை இயக்கச் செலவுகளின் அதிகரிப்பு எதிரீடுசெய்த மையால், இயக்கப் பணக்குறை சென்ற ஆண்டுபோன்றே 1967/68லும் விளங்கியது. எனினும், ஆண்டுத் தொகையினதும் வட்டிக் கட்டணங்களி னதும் அதிகரிப்பினுல் 1967/68ல் புகையிரதத்தின் மொத்தக் குறை ரூபாய் 15 இலட்சத்தால் அதிகரித்து, ரூபாய் 477 இலட்சமாயிருந்தது. இதே வேளையில் 1966/67ல் 1,215ஆல் வீழ்ச்சியுற்ற தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை, மீளப் பார்வையிடும் இவ்வாண்டில் மேலும் 1,073ஆல் வீழ்ச்சியுற்றது.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

1958 சனவரி 1ல் திறமைமிக்க ஒழுங்கான பேருந்துச் சேவைகளை உதவுவதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபை நிறுவப்பட்டது.[2] தனி யார் பேருந்துக் கூட்டுநிலையங்களின் உடைமைகளை இச் சபையிடம் ஒப்ப டைக்கப்பட்டதையடுத்து, பொதுத் தெருப்பயணப் போக்குவரத்தின் தனி யுரிமை இதற்கு வழங்கப்பட்டது. 1967/68 (ஒற்ரேபர்-செத்தெம்பர்)[3] முடிவடையும் ஐந்தாண்டுகளில், சபையின் தொழிற்பாடுகளிற் சில சிறப்புப் பண்புகளையும், 1968/69ற்குரிய மதிப்பீடுகளையும் அட்டவணை II (இ) 6 காட்டுகிறது.

1968 செத்தெம்பர் முடியும்வரை சபையினுல் முதலீடுசெய்யப்பட்ட மொத்த மூலதனம் ரூபாய் 2,872 இலட்சமாகவிருந்தது. இது சென்ற ஆண்டி லும்பார்க்க ரூபாய் 310 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. இந்த முதலீட்டத் தில் ரூபாய் 2,312 இலட்சம் அல்லது 80.5 சதவீதம் ஊர்திகளுக்குரியது. அதே வேளையில் மீதித் தொகை ஊர்திச் சாலைகளிலும் உந்தூர்திகள் வைப் பிடங்களிலும் தங்குமிடங்களிலும் முதலீடுசெய்யப்பட்டது.

---

1. எனினும், 1966/67ல் பணஞ்செலுத்தப்பட்ட பொருளை ஏற்றுமதிசெய்வதில் ஒரு சிறு அதி கரிப்பே காணப்பட்டது.
2. 1957ம் ஆண்டின் 48ம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்.
3. அட்டவணை II (இ) 6ன் அடிக்குறிப்பு 'அ'வைப் பார்க்கவும்.

## அட்டவணை II (இ) 6

### இலங்கைப் போக்குவரத்துச் சபை 1964—1968/69 (அ)

| விடயம் | 1964 | 1965 | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/9 மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. வருட முடிவில் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ப. இ. ரூபாய்) ... | **182.5** | **203.3** | **227.4** | **256.2** | **287.2** | **313.3** |
| (அ) வாகனம் ... ... | 150.9 | 169.1 | 189.0 | 209.0 | 231.2 | 253.4 |
| (ஆ) ஏனைய ... ... ... | 31.6 | 34.2 | 38.4 | 47.2 | 56.0 | 64.9 |
| 2. வாகனம் (எண்ணிக்கை) | | | | | | |
| (அ) சொந்தத்திலிருந்தவை ... | 4,820 | 4,875 | 5,085 | 5,056 | 5,184 | 5,366 |
| (ஆ) ஓடும் பஸ்வண்டித் தொகை ... | 4,008 | 4,225 | 4,160 | 4,363 | 4,814 | வி. கி. |
| (இ) இயங்க முடியுமான தொகை ... | 3,641 | 3,498 | 3,721 | 3,937 | 3,748 | வி. கி. |
| (ஈ) வேண்டப்பட்ட தொகை ... | 3,222 | 3,826 | 4,005 | 4,167 | 4,167 | 4,621 |
| (உ) நடைமுறையிலான (சராசரி) ... | 2,645 | 2,931 | 3,256 | 3,599 | 3,686 | 4,033 |
| 3. மைல்களின் தொகை (ப. இ. மைல்கள்) | | | | | | |
| (அ) குறிக்கப்பட்ட ... ... | 149.0 | 167.9 | 190.7 | 222.0 | 239.4 | 258.4 |
| (ஆ) நடைமுறையிலான ... ... | 133.8 | 153.3 | 177.4 | 205.9 | 211.2 | 232.6 |
| (இ) காணமற்போன ... ... | 18.6 | 18.3 | 18.8 | 21.3 | 32.2 | 32.5 |
| (ஈ) காலியாக ஓட்டப்பட்ட ... | 2.1 | 2.0 | 2.2 | 2.3 | 2.2 | 2.1 |
| 4. உபயோகஞ் செய்யப்பட்டவை | | | | | | |
| (அ) மொத்த ஆசனம்—மைல்களின் தொகை (பத்து இலட்சம்) ... | 6,897.0 | 7,965.1 | 9,307.1 | 10,868.6 | 11,386.8 | 12,560.0 |
| (ஆ) கொண்டுசெல்லப்பட்ட மொத்தப் பயணர்களின் எண்ணிக்கை (ப.இ.) | 761.6 | 893.7 | 1,025.2 | 1,144.8 | 1,250.1 | 1,340.0 |
| (இ) மொத்தப் பயணர்கள்—மைல்களின் தொகை (ப. இ.) ... | 4,373.0 | 4,898.3 | 5,582.1 | 6,183.9 | 6,823.5 | 7,500.0 |
| (ஈ) ஏற்றக்கூடிய சினைக்கொள் (%) ... | 63.4 | 61.6 | 60.0 | 56.9 | 59.9 | 59.7 |
| (உ) உபயோகிக்கப்பட்ட சராசரி வாகனங்கள் ... ... | 138 | 143 | 149 | 157 | 157 | 158 |
| (ஊ) பயணர்களின் சராசரி பயணங்கள் (மைல்கள்) ... ... | 5.85 | 5.59 | 5.54 | 5.52 | 5.59 | 5.60 |
| (எ) பயணரொருவரிடமான சராசரி வரவு (சதம்) ... ... | 21.30 | 20.68 | 20.58 | 20.58 | 20.76 | 20.79 |
| 5. வருவாய் (ப. இ. ரூபாய்களில்) ... | **171.5** | **145.1** | **215.7** | **241.0** | **262.0** | **286.2** |
| (அ) பயணர்களின் பயண அறவீடு ... | 169.1 | 141.9 | 211.4 | 236.0 | 257.5 | 280.8 |
| (ஆ) ஏனைய ... ... ... | 2.4 | 3.2 | 4.3 | 5.0 | 5.4 | 5.4 |
| 6. செலவு (ப. இ. ரூபாய்களில்) (ஆ) ... | **158.5** | **144.9** | **212.9** | **237.9** | **261.4** | **285.9** |
| (அ) காரியங்களுக்காய செலவு ... | 80.0 | 70.2 | 107.3 | 122.6 | 144.6 | 162.2 |
| (ஆ) தொழில்நுட்பத் துறை ... | 31.4 | 28.7 | 42.7 | 48.3 | 50.6 | 54.8 |
| (இ) பொதுக் காரியங்கள்... ... | 24.9 | 20.6 | 30.7 | 32.5 | 32.9 | 35.0 |
| (ஈ) நிருவாகம் ... ... | 22.2 | 25.5 | 32.2 | 34.5 | 33.2 | 33.8 |
| 7. சம்பளச் செலவு (ப. இ. ரூபாய்களில்)... | 66.5 | 64.5 | 109.6 | 125.1 | 143.5 | 162.2 |
| 8. தொழில்நிலை (எண்ணிக்கை) ... | 23,854 | 26,089 | 28,441 | 32,165 | 34,936 | வி. கி. |
| 9. நயம் (+) அல்லது நட்டம் (—) (ப. இ. ரூபாய்களில்) ... ... | + 13.0 | +0.2 | + 2.8 | + 3.2 | — 5.6 | +.3 (இ) |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) 1965 வரை சபையின் நிதியாண்டைக் கலண்டராண்டாகக் கணிக்கப்பட்டபோதும், 1965 செத்தெம்பர் தொடக்கம் நிதியாண்டாக ஒற்றோபரிலிருந்து செத்தெம்பர்வரை மாற்றப்பட்டது. இதனல் 1964 புள்ளிவிவரக் கலண்டர் வருடத்துக்கும், 1965 பு. வி. 9 மாதத் தொகைக்கும் (அதாவது, சனவரி முதல் செத்தெம்பர்வரை), அதற்குப் பிற்பாடு காட்டப்படும் பு. விபரங்கள் ஒற்றோபர் முதல் செத்தெம்பர்வரையான வருடத்துக்குமானதாகும்.

(ஆ) அரசாங்கக் கடனுக்காகச் செலுத்திய வட்டிப்பணமும் உட்படும்.

(இ) வரவு—செலவுக்குற்பட்ட புள்ளிவிபரங்களாகும்.

1967/68ல் சபையின் உடைமையில் இருந்த ஊர்திகள் 128ஆல் 5,184 ஆக அதிகரித்தன. எனினும், பழைய பேருந்துகள் திருத்தப்பட்டதனுல், இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை 451ஆக அதிகரித்தது. நீண்டகாலச் செலவிற் திருத்தவேண்டியளவிற்கு அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டதினுல், உண்மையிற் கிடைக்கத்தக்க பேருந்துகளின் கையிருப்புக்கள் 189ஆல் வீழ்ச்சியுற்றன. இதனுல் 1967/68ல் சராசரி நாளாந்த ஓட்டத்திலிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 87ஆல் மட்டுமே அதிகரித்து, 3,686ஆக விளங்கியது. இன்றுள்ள நேர அட்டவணைகளின்படி நாளாந்த ஓட்டத்திற்கு 4,167 பேருந்துகள் தேவைப்படுகையில், 88.5 சதவீதப் பேருந்துகளே ஓட்டத்தில் இருக்கின்றன. இது சென்ற ஆண்டின் ஒப்பிடத்தக்க 86.4 சத வீதத்திலும்பார்க்கச் சிறிதளவு திருந்தியிருந்தது.

1967/68ல் அட்டவணைபடுத்தப்பட்ட மைல்கள் 174 இலட்சம் மைல் களால் அதிகரித்தன. மேலதிகப் பேருந்துகளின் தேவையை அகற்றும் முறை யில் பாதைகளை மாற்றியமைத்ததினுல் இது முக்கியமாக அடையப்பட்டது. மறுபுறம், ஓடிய மைல்கள் 53 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்தன. அட்ட வணைபடுத்தப்பட்ட மைல்களில் ஓடிய மைல்களின் வீதம் 1966/67ல் 92.7 சதவீதமாகவிருந்து, 1967/68ல் 88.2 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இது இழக்கப்பட்ட மைல்கள் 109 இலட்சம் மைல்களால் அல்லது 51.2 சதவீதத்தால் 1967/68ல் 322 இலட்சம் மைல்களுக்கு அதிகரித்ததினுலேற் பட்டது. இந்நிலைமை தேவையான நேரத்தில் பேருந்துக்கூட்டத்தர் கிடைக்கா ததினுலும், பழுதுகள் ஏற்பட்டதினுலும் உருவாகியது. இதற்கிடையிற் பேருந் துச்சாலையிலிருந்து பேருந்துகள் ஓடத் தொடங்கும் இடம் ஆகியவற்றிற்கு ஓடிய இறந்த மைல் ஓட்டம் கடந்த ஐந்தாண்டுகளாக ஒரே மட்டத்தில் 20 இலட்சம் மைல்களாகத் தொடர்ந்தும் இருந்தது.

கடந்த ஆண்டுகளில் ஏற்றிச் செல்லப்பட்ட பயணர்களின் மொத்த எண்ணிக்கை தளர்ச்சியற்ற நிலையில் அதிகரித்து, 1,053 இலட்சத்தால் 1967/68ல் 12,501 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதே வேளையில் மொத்த இருப்பிட மைல்கள் 5,182 இலட்சத்தால் 1,13,868 இலட்சங்களுக்கு அதிகரித் தது. அதே நேரத்தில் பயணர் மைல்கள் 6,396 இலட்சத்தால் 68,235 இலட் சத்திற்கு உயர்ந்தன. ஆதனுல் பார அம்சத்தில் (இருப்பிட மைல்களின் அளவில் பயணர் மைல்களின் விகிதசமம்) ஒரு சிறிய அதிகரிப்புத் தோன் றியது தெரியவருகிறது. 1966/67ல் 56.9 சதவீதமாகவிருந்த இவ்வம்சம் 1967/68ல் 59.9 சதவீதமாக உயர்ந்தது. பயணர்களின் சராசரி சென்ற தூர மும் 5.52 மைல்களிலிருந்து 5.59 மைல்களாக உயர்ந்தது. எனினும், ஊர்தி கள் பயன்படுத்தப்பட்ட சராசரி, அதாவது (ஒருநாளில் ஒரு பேருந்து ஓடிய மைல்கள்) 1966/67 வரை தளர்வின்றி உயர்ந் திருந்தும், 1967/68ல் ஒருவித அதிகரிப்பையும் காட்டவில்லை.

பயணர்களின் எண்ணிக்கையிலும், பயணர் மைல்களிலும், பார அம்சத் திலும் ஏற்பட்ட அதிகரிப்பினுல் வருமானமானது 219 இலட்சம் ரூபாய் களால் அல்லது 9.1 சதவீதத்தால் அதிகரித்தது; இதில் ரூபாய் 215 இலட்சம் பயணர்களின் வருவாய்களின் அதிகரிப்பில் இருந்து பெற்றதாகும். எனினும், இந்த அதிகரிப்பு சென்ற ஆண்டிற் பெற்ற அதிகரிப்பான ரூபாய் 253 இலட் சத்திலும்பார்க்கக் குறைவுடையதாகும்; இதிற் பெற்ற ரூபாய் 246 இலட்ச மானது, பயணர்களின் வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பினுற் பெற்ற தாகும்.

மறுபுறம், சபையின் செலவு ரூபாய் 235 இலட்சத்தால் 1967/68ல் ரூபாய் 2,614 இலட்சமாக உயர்ந்தது. சென்ற ஆண்டில் இவ்வதிகரிப்பு ரூபாய் 250 இலட்சமாகும். ஏறக்குறைய வேலைச் செலவிலேயே இந்த அதி கரிப்பு ஏற்பட்டது. கடந்த ஈராண்டுகளிற் சபையினுல் வேலைக்கு அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கையிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பும், தொழி லாளர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் படிகளுமே இவ்வதிகரிப்பிற்குப் பெரும் காரணமாகும். வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 1966/67ல் 3,724ஆல் அல்லது 13.1 சதவீதத்தால் அதிகரித்தது. அத்துடன்,

1967/68ல் இவ்வெண்ணிக்கை 2,771ஆல் அல்லது 8.6 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு இவ்வாண்டுகளில் ஓடிய பேருந்துகளின் எண்ணிக்கையிலும், வகுக்கப்பட்ட மைல்களிலும், செயலாற்றப்பட்ட மைல்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களிலும்பார்க்க மிகக் கூடியளவாக இருந்தது.

எனவே, வருவாயின் அதிகரிப்பிலும்பார்க்க செலவின் அதிகரிப்புக் கூடியதனுல், 1967/68ல் போக்குவரத்துச் சபை ரூபாய் 56 இலட்சம் நட்டத்தில் இயங்கியது, இது சென்ற ஆண்டிலேற்பட்ட ரூபாய் 32 இலட்சம் கொண்ட இலாபத்திற்கும், அதற்கு முந்திய இரண்டு ஆண்டுகளிலேற்பட்ட இலாபத்திற்கும் முரணுக உள்ளது.

### இலங்கை விமானச் சேவை, வ. செ.

அரசாங்கத் திணைக்களக் குடியியல் விமானப் போக்குவரத்தின் கிளையாக 1947 திசெம்பரில் இலங்கைத் தேசிய விமானப் போக்குவரத்து ''இலங்கைகை விமானச் சேவை'' என்ற பெயரில் இயங்கத்தொடங்கிற்று.[1] இது பின்பு ஒரு கூட்டுத்தாபனமாக உருவாக்கப்பட்டது. இப்பொழுது இது உள்நாட்டுச் சேவைகளையும் (இது இலங்கையில் உள்ள இடங்களுக்குப் பணிபுரிவது), இந்திய இலங்கைப் பிரதேசங்களில் இந்திய விமானக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பிரதேசச் சேவைகளையும், குவான்ராஸ், பி.ஓ.ஏ.சீ. ஆகியவற்றுடன் கூட்டாகச் சேர்ந்து இலங்கை வழியாக இலண்டனுக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் ஒரு பல்நாட்டுச் சேவையையும் இயக்குகிறது. 1967/68 (நிதியாண்டுகள் ஒற்ரோபர் தொட்டு செத்தெம்பர் வரை) முடிவடையும் நாலாண்டுகளில் இலங்கை விமானச் சேவை ஆற்றிய தொழிற்பாடுகளின் சில சிறப்புப் பண்புகளைக் கீழேயுள்ள அட்டவணை II (இ) 7 காட்டுகிறது.

விமானங்கள் உட்பட்ட இருப்புச் சொத்துக்களின் பெறுமதி ரூபாய் 133 இலட்சமாக 1968 செத்தெம்பரில் விளங்கியது.[2] 1967/68ல் ஏற்றிச்செல்லப்பட்ட பயணர்களின் எண்ணிக்கை 1,406ஆல் வீழ்ச்சியுற்றது. ஆனல், ஏற்றிச் செல்லப்பட்ட பொருட்களின் தொன்கள் 29ஆல் அதிகரித்தன. முன்னைய வீழ்ச்சி, பிரதேசப் பல்நாட்டுப் பயணத்தில் ஏற்பட்ட குறைப்பினுல் ஏற்பட்டது. இது ஓரளவு உள்நாட்டுப் பயணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினுல் எதிரீடுசெய்யப்பட்டது. பின்னையதில் எற்பட்ட அதிகரிப்பு. பல்நாட்டு உள்நாட்டுச் சுமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பை ஓரளவு எதிரீடுசெய்து, பிரதேசச் சுமைகள் வீழ்ச்சியுற்றிருந்ததினுல் ஆகும். பல்நாட்டுப் பயணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினுற் பயணர் மைல்கள் 3,970ஆல் வீழ்ச்சியுற்றன. மறுபுறம், பொருட்கள் ஏற்றிச்செல்லப்பட்ட தொன் மைல்கள் 152 தொன் மைல்களால் அதிகரித்தன. இது பல்நாட்டில் ஏற்றிச் செல்லப்பட்ட பொருட்களின் அதிகரிப்பினுலேயே பிரதானமாக ஏற்பட்டது. உள்நாட்டுச் சேவையிலும் பல்நாட்டுச் சேவைகளிலும் பார அம்சம் ஒரு வரவேற்கத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளது. ஆனல், பிரதேசச் சேவைகளிலும் பல்நாட்டுச் சேவைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பை மேலதிகமாக எதிரீடுசெய்து இலங்கையின் ஊடான வெளிநாட்டு விமான சேவைகளுக்கென ஏற்பட்ட பொறியியல் போக்குவரத்துச் சேவைகளிலும், பல்நாட்டுச் சேவைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் மொத்த வருவாய் ரூபா 2.4 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. முதன்மையாக விமான இயக்கச் செலவுகளினுலேற்பட்ட அதிகரித்த செலவுகளினுல், செலவு ரூபாய் 8 இலட்சத்தால் அதிகரித்தது. இதனுல் இலங்கை விமானச் சேவையின் இலாபம் 1966/67ன் ரூபாய் 38 இலட்சத்திலிருந்து, 1967/68ல் ரூபாய் 27 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது.

---

1. தொடக்கத்தில் 'சிலோன் எயர்வேஸ் லிமிட்டெட்' என்று பெயரிடப்பட்டு, 1948ல் 'இலங்கை விமானச் சேவை' என்ற பெயரினை ஏற்று விளங்கிற்று. 1951ன் 7ம் இலக்க, இலங்கை விமானச் சேவை சட்டத்தின்கீழ் இக் கூட்டுத்தாபனம் 1951ல் நிறுவப்பட்டது.

2. நடைமுறை இருப்புச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்தப் பெறுமதி ரூபா 311 இலட்சமாகும்.

## அட்டவணை II (இ) 7

## இலங்கை விமானச் சேவை 1964/67 — 1966/68 (அ)

| விடயங்கள் | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 |
|---|---|---|---|---|
| 1. இருப்புக்களின் பெறுமதி ஆண்டு முடிவில் (ரூபாய் 1,000) (ஆ) ... ... ... ... | 6,334 | 7,126 | 13,303 | 13,286 |
| 2. கொண்டு செல்லப்பட்ட பயணர்களும் பொருட்களும் | | | | |
| (அ) பயணர்கள் (எண்) ... ... ... | 64,070 | 86,955 | 82,286 | 80,880 |
| (1) உள்நாட்டுச் சேவைகள் ... ... | 32,889 | 39,867 | 32,934 | 33,473 |
| (2) பிரதேசச் சேவைகள் ... ... | 23,226 | 36,863 | 38,049 | 36,308 |
| (3) பல்நாட்டுச் சேவைகள் ... ... | 7,945 | 10,225 | 11,303 | 11,099 |
| (ஆ) பொருட்கள் (தொன்கள்) ... ... | 471 | 531 | 513 | 542 |
| (1) உள்நாட்டுச் சேவைகள் ... .. | 46 | 46 | 36 | 45 |
| (2) பிரதேசச் சேவைகள் ... .. | 192 | 256 | 187 | 130 |
| (3) பல்நாட்டுச் சேவைகள் ... ... | 233 | 229 | 290 | 367 |
| 3. பயணர்மைல்களும் தொன்மைல்களும் | | | | |
| (அ) பயணர்மைல்கள் (1000) ... ... | 37,418 | 59,447 | 64,547 | 60,577 |
| (1) உள்நாட்டுச் சேவைகள் ... ... | 5,958 | 7,395 | 5,928 | 6,093 |
| (2) பிரதேசச் சேவைகள் ... ... | 8,507 | 12,847 | 14,371 | 14,192 |
| (3) பல்நாட்டுச் சேவைகள் ... ... | 22,953 | 39,205 | 44,248 | 40,292 |
| (ஆ) பொருட்கள் தொன்மைல்கள் ... ... | 4,356 | 6,456 | 7,170 | 7,322 |
| (1) உள்நாட்டுச் சேவைகள் ... ... | 441 | 547 | 432 | 435 |
| (2) பிரதேசச் சேவைகள் ... ... | 703 | 1,032 | 1,099 | 1,102 |
| (3) பல்நாட்டுச் சேவைகள் ... ... | 3,212 | 4,877 | 5,639 | 5,785 |
| 4. பயன்படுத்தப்பட்ட அளவு (பார அம்சம்) | | | | |
| (1) உள்நாட்டுச் சேவைகள் ... ... | 68.1 | 57.6 | 38.2 | 56.4 |
| (2) பிரதேசச் சேவைகள் ... ... | 48.1 | 52.1 | 50.5 | 50.3 |
| (3) பல்நாட்டுச் சேவைகள் ... ... | 48.1 | 38.8 | 42.4 | 48.0 |
| 5. மொத்த வருவாய் (ரூபாய் 1000) ... ... | 4,888 | 8,855 | 10,348 | 10,105 |
| (1) உள்நாட்டுச் சேவைகள் ... ... | 1,221 | 1,130 | 1,330 | 1,727 |
| (2) பிரதேசச் சேவைகள் ... ... | 2,883 | 4,442 | 4,784 | 5,625 |
| (3) பல்நாட்டுச் சேவைகள் ... ... | 141 | 946 | 2,009 | 1,642 |
| (4) ஏனைய ... ... ... ... | 643 | 2,337 | 2,225 | 1,111 |
| 6. மொத்தச் செலவு (ரூபாய் 1000) ... ... | 4,689 | 6,289 | 6,551 | 7,385 |
| (1) விமான இயக்கச் செலவுகள் ... | 2,886 | 3,863 | 4,305 | 4,743 |
| (2) பாதையும் நிலச் செலவுகளும் .... | 1,616 | 2,156 | 1,913 | 2,083 |
| (3) நிதிக் கட்டணங்கள் ... ... | 173 | 155 | 205 | 255 |
| (4) ஏனைய ... ... ... ... | 14 | 115 | 128 | 304 |
| 7. இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூபய் 1000) (வரிக்கு முதல்) ... ... ... ... | +199 | +2,566 | +3,797 | +2,720 |
| 8. தொழில்நிலை (எண்) ... ... ... | 244 | 303 | 584 | 578 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒற்றோபர்-செத்தெம்பர் நிதியாண்டுகள் (1966/67உம் 1967/68உம்) எண்தொகை தற்காலிகமானவை.

(ஆ) விமானம் உட்பட.

1969 யூனில் இங்கு ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட ''ரிடின்ற் ஐஈ ஜெற்'' விமானத்தை வாங்குவதற்கு ஓர் ஒப்பந்தத்தை இலங்கை விமானச் சேவை கையொப்பம் இட்டுள்ளது. இந்த விமானத்தைக் கொண்டு கராச்சி, பம்பாய், டெல்லி, பாங்கொக் ஆகியவற்றுடன் சேவைத் தொடர்பை ஏற்படுத்தி, சுற்றுலாப் போக்குவரத்தைக் குறிப்பிடத்தக்களவு கவர்வதே இச்சேவையின் நோக்கமாகும்.

## கொழும்புத் துறைமுக ஆணைக்குழு

கொழும்புத் துறைமுகத்தினதும், மற்றும் இலங்கையின் பெரிய துறைமுகங்களினதும் நிர்வாகம் 1950இற்குமுன் சுங்கத் திணைக்களத்தினாலேயே நடாத்தப்பட்டது. இது உலகம் முழுவதும் துறைமுகங்கள் உருவாகிய முதல் நாட்களில் நிலவிய ஒரு பொதுப் பண்பாகும்.1 துறைமுகப் பாவிப்பாளர்களின் பேராளர் குழு ஒன்றினால் சுங்கத் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. துறைமுக ஆணையாளர் தலைமையில் பெரிய துறைமுகப் பாவிப்பாளர்களின் பேராளர்களை உள்ளடக்கிய கொழும்பு ஆணைக்குழு ஒன்று 1950ல் உருவாக்கப்பட்டது.2 ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் பொறுப்பாகக் கொழும்புத் துறைமுகத்தினதும், ஏனைய வெளித் துறைமுகங்களினதும் நிர்வாகமும் கொண்டுவரப்பட்டது. இது கொழும்புத் துறைமுக ஆணைக்குழு என்றும் பெயரிடப்பட்டது. எனவே, துறைமுக நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட்ட சுங்கத் திணைக்களத் தீர்வைகளைச் சேகரித்தல், கள்ளக்கடத்தலைத் தடுத்தல் ஆகிய மற்றும் இன்னோரன்ன நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஆற்றுகிறது. சரக்குகளைக் கையாளுவதற்கென்று 1958ல் துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனம் என்ற இன்னுமொரு நிறுவனம் நிறுவப்பட்டது. இது துறைமுகத்தின் தொழிற்பாடுகளை மேலும் பிரித்து இயக்கும் நிலையை உருவாக்கியுள்ளது. எனவே, இதன் தொழிற்பாடுகளிற் கணிசமான மேலெழுந்த தன்மையைப் பிரித்துக்காட்டல் கடினம். ஆனால், இலங்கையின் துறைமுகங்கள் திறமையாக இயங்குவதற்கும், நிறுவனங்களைப் பரிபாலிப்பதற்கும், துறைமுக ஆணைக்குழு முழுப் பொறுப்பாயிருக்கிறதென்று கருத இடமிருக்கிறது. அத்துடன் இது கரையோரப் பாதுகாப்பு, மீன்பிடித் துறைமுகம் ஆகியவற்றை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. இலங்கைக் கடற்றொழிற் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளுக்கு ஒத்த மேற்சென்று கவிந்திருக்கும் முறையில் இதனின் இறுதித் தொழிற்பாடு அமைந்துள்ளது.

கடந்த நாலு ஆண்டுகளில் கொழும்புத் துறைமுக ஆணைக்குழு ஆற்றிய தொழிற்பாடுகளின் சில சிறப்பு அம்சங்களையும், 1968/69 காலப்பகுதியின் மதிப்பீடுகளையும் கீழேயுள்ள அட்டவணை II (இ) 8 காட்டுகின்றது.

கொழும்பிலுள்ள இருப்புச் சொத்துக்கள்பற்றி 1955ற் செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் துறைமுக ஆணைக் குழுவின், மூலதன முதலீடு 1968 செத்தெம்பரில் ரூபாய் 3,051 இலட்சமாக விளங்கியதென்று மதிப்பிடப்பட்டுள்ளது. நடைமுறை ஆண்டின் அபிவிருத்தியோடு இது ரூபாய் 3,229 இலட்சமாக அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. முதலீடு செய்யப்பட்ட இத்தொகையில் 90.0 சதவீதம் கொழும்புத் துறைமுகத்தில் ஆகும்.

1966/67இற் சிறிது வீழ்ச்சியுற்ற ஆணைக்குழுவின் வருவாய்3 1967/68ல் மெச்சத்தக்க முறையில் உயர்ந்துள்ளது. 1967 திசெம்பரில் துறைமுகக் கட்டணங்களும், குத வாடகையும், 1967 மாச்சில் ஏனைய கட்டணங்களும் உயர்த்தப்பட்டதால், 1967ல் துறைமுகக் கட்டணங்கள் அதிகரித்ததுடன்

---

1. என்ஈடீஈசீஓ : கொழும்புத் துறைமுகத்தினதும், இலங்கையின் வேறு சில வெளித்துறைமுகங்களினதும் தொழிற்பாடுகளினதும் அபிவிருத்தியினதும் மீதான அறிக்கை : 'த கேஷ்க்' 1961, பக். 17.

2. கொழும்புத் துறைமுகத்தினது (நிருவாகம்) 1950 இன் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டம்.

3. வருமதிகள், வாடகைகள், சாதனத்தைப் பாவிப்பதற்கான கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து பிரதானமாகப் பெறப்பட்டவை.

## அட்டவணை II (இ) 8

## கொழும்புத் துறைமுக ஆணைக்குழு 1964/65—1968/69 (அ)

| விடயங்கள் | 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| 1. மூலதனச் செலவு (ரூபாய் 1000) (கூட்டுத் தொகை) (ஆ) ... ... | **263,292** | **277,194** | **292,060** | **305,053** | **322,918** |
| அவற்றில், | | | | | |
| (அ) கொழும்பு ... ... | 248,191 | 258,618 | 267,170 | 273,382 | 283,095 |
| (ஆ) காலி ... ... ... | 13,419 | 15,993 | 20,920 | 25,784 | 28,706 |
| (இ) திருகோணமலை ... ... | 164 | 466 | 1,033 | 1,399 | 1,898 |
| 2. வருவாய் (ரூபா 1000) ... ... | **29,113** | **33,789** | **33,777** | **36,328** | **36,643** |
| (அ) கொழும்பு ... ... | **28,413** | **33,359** | **33,448** | **35,959** | **36,382** |
| அவற்றில், | | | | | |
| (1) துறை வருவாய் ... ... | 4,260 | 4,653 | 4,599 | 5,823 | 5,500 |
| (2) துறைமுக வருவாய் ... | 6,770 | 8,018 | 7,930 | 7,880 | 7,500 |
| (3) வாடகைகள் ... ... | 7,946 | 9,909 | 9,727 | 9,954 | 10,282 |
| (4) எண்ணெய் வசதிகள் ... | 3,558 | 3,536 | 4,381 | 5,124 | 5,700 |
| (ஆ) வெளித் துறைமுகங்கள் ... | **700** | **430** | **329** | **369** | **261** |
| அவற்றில், | | | | | |
| (1) காலி ... ... ... | 88 | 42 | 73 | 30 | 25 |
| (2) திருகோணமலை ... ... | 528 | 340 | 234 | 244 | 200 |
| 3. வேலைச்செலவு(இ)ஆண்டிற்கு(ரூ.1000) | **21,954** | **22,437** | **23,743** | **23,265** | **30,053** |
| அவற்றில், | | | | | |
| (அ) கொழும்பு ... ... | 21,019 | 21,501 | 22,725 | 22,370 | வி. கி. |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் ... | 310 | 298 | 306 | 215 | வி. கி. |
| (இ) கரையோரப் பாதுகாப்பு ... | 541 | 638 | 685 | 663 | வி. கி. |
| 4. மிகை (+) அல்லது குறை (—) ... | **+7,159** | **+11,352** | **+10,934** | **+13,063** | **+6,590** |
| (அ) கொழும்பு ... ... | +7,394 | +11,858 | +10,723 | +13,589 | வி. கி. |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் ... | + 390 | + 132 | + 23 | + 154 | வி கி. |

மூலம் : கொழும்புத் துறைமுகம்.

(அ) ஒற்ரேபரில் தொடங்கி செத்தெம்பரில் முடிவடையும் நிதியாண்டுகளுக்குரியது.

(ஆ) 1955ல் கொழும்புத் துறைமுக இருப்புக்கள் மதிப்பிடப்பட்டபோது அது ரூபாய் 1,774 இலட்சமாகவிருந்தது.

(இ) மீண்டெழுஞ் செலவு.

(ஈ) விடயங்கள் 2ம், 3ம். அநேக அரசாங்கத் திணைக்களங்களைப்போல துறைமுக ஆணைக்குழுவும் தனது கணக்குகளை வருமான-செலவு அடிப்படையிலேயே வைத்திருக்கின்றது. அங்கீகரிக்கப் பட்ட வர்த்தகக் கணக்கு வைப்பு முறைகளைக் கையாண்டால் ஆணைக்குழுவானது தனது தொழிற்பாடுகளில் நட்டமுடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

வருமதியாய் வெளிநில் வருவாய்களும் சேகரிக்கப்பட்டதும் இவ்வதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். 1968/69ல் மதிப்பிடப்பட்டுள்ள வருவாய் சிறிது அதிகரித்துள்ளது. ஏற்றக்குறைய முழு வருவாயும் கொழும்புத் துறைமுகத்தி லேயே பெறப்பட்டது. அதே வேளையில் வெளித் துறைமுகங்களிற் பெற்ற வருவாய் புறக்கணிக்கத்தக்கதாயே இருந்தன. 1967/68 வரை இயக்கச் (மீளஎழும்) செலவு ஓரளவிற்குத் தளர்வில்லாது இருக்க, 1968/69ல் இது கூரிய அதிகரிப்பைக் காட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 'இடைக்காலப் படிகளை' வழங்கியதாலும், சாதனங்களைப் பராமரிப்பதில் ஏற்பட்ட அதி கரித்த செலவுமே இவ்வுயர்விற்கு முக்கிய காரணமாகும்.

முக்கியமாக இவ்வாண்டில் எழுந்த அதிகரித்த வருவாயாலேயே 1967/68ல் ஆணைக்குழுவின் தேறிய மிகை[1] (வருமானத்தில் இருந்து வேலை செலவுகள் நீக்கி) கூரிய முறையில் அதிகரித்தது. 1968/69ல் இயக்கச் செலவில் ஏற்படவிருக்கும் அதிகரிப்பை எதிர்பார்த்து, 1968/69ல் மேலதிகத் தொகை பெருமளவு வீழ்ச்சியுறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் துறைமுகங்களின் இயக்கங்கள்பற்றி நெதர்லாந்திலிருந்து வந்த பொறியியல் ஆலோசகர்கள் நிறுவனம் ஒன்று 1961ல்[2] அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையில் இன்றைய துறைமுக ஆணையாளரின் தொழிற்பாடுகளையும், துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளையும் இணைத்து "துறைமுக அதிகார அவை" நிறுவவேண்டும் என்று விதந்துரை வழங்கியுள்ளது. துறைமுகப் பாவனையாளர்களையும் தொழிலாளர்களையும் கொண்ட ஒரு குழுவினுல் தானுக இயங்கும் சார்புடைய இவ்வதிகாரச்சபைக்கு ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். துறைமுக நிர்வாகத்தில் சுங்கத் திணைக்களம் தலையிடுவதை நீக்கல், துறைமுகக் கட்டணங்களை எளிதாக்கல், துறைமுகக் கட்டணங்களிலிருந்து விதிவிலக்கு வழங்கும் இன்றைய அமைப்புமுறைக்கு பதிலீடாக அரசாங்க மானியங்களை நேரடியாக வழங்கல், எல்லாத் தொழிற் சங்கங்களும் அங்கம் வகிக்கும் முறையில் ஒரு நிலைக் குழுவை உருவாக்கல், தனிப்பட்டோர் விடயங்களைத் திருத்துவதற்கு ஆளணித் திணைக்களத்தை உருவாக்கல், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் இன்றைய முறைகளை மாற்றி, தொழிலாளர்களின் திறனைத் திருத்தல், அத்துடன் ஏற்படுத்தப்பட்ட துறைமுக வாய்ப்புக்களில் சில அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கும் விதைந்துரை வழங்கியது. இவற்றிற் சில நடைமுறையிற் கொண்டுவரப்பட்டுள்ளன. அத்துடன் கலனிடப்பட்ட சரக்கு வசதிகளை உதவுவதற்கும் துறைமுகம் திட்ட மிடுகிறது.

**துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனம்**

கொழும்புத் துறைமுகத்திற் கப்பற்சரக்குகளைக் கையாளுவதற்கு, அத்துறைமுகத்தின் கப்பற்சரக்குகளைக் கையாளும் நிறுவனம் தேசியமயமாக்கப்பட்டபோது, 1958 ஓகத்தில் துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.[3] இதன்பின் காலித் துறைமுகத்திலும், திருகோணமலைத் துறைமுகத்திலும் கப்பற்சரக்குகள் கையாளப்படுவது தேசியமயமாக்கப்பட்டு, முறையே 1964 ஒற்றோபரிலும், 1967 ஒற்றோபரிலும் கூட்டுத்தாபனத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. கடந்த ஐந்து நிதியாண்டுகளில் (ஓகத்து தொடக்கம் யூலை வரை) கூட்டுத்தாபனத்தின் இயக்கங்கள் பற்றிய சில தரவினைப் பின்வரும் அட்டவணை II (இ) 9 தருகின்றது.

1968 யூலையில் முடிவுறும் 1967/68ம் நிதியாண்டின் முடிவில் இக் கூட்டுத்தாபனத்தின் மூலதன முதலீட்டத்தின் ஒன்றுசேர்ந்த தொகை ரூபாய் 642 இலட்சமாக விளங்கியது. இது சென்ற ஆண்டிலும்பார்க்க ரூபாய் 115 இலட்சம் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. இந்த அதிகரிப்பில் காலித் துறைமுகத்திற்குரிய தொகை ரூபாய் 35 இலட்சமும், மீதித் தொகை கொழும்புத் துறைமுகத்திற்குமுரியது.

---

1. அட்டவணை II (இ) 8இன் அடிக்குறிப்பு (ஈ)ஐப் பார்க்கவும்.
2. என்ஈடீஈசீஓ : முற்கூறியபடி பக்கம் xiii தொடக்கம் xvi வரை.
3. துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனத்தினது 1958இன் 13ஆம் இலக்க அதிகாரச் சட்டம்.

## அட்டவணை II (இ) 9

## துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனம் — 1963/64 தொடக்கம் 1967/68 வரை (அ)

| விடயங்கள் | 1963-64 | 1964-65 (ஆ) | 1965-66 | 1966-67 | 1967-68 |
|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ரூபா பத்து இலட்சம்) ஒன்று திரண்ட தொகை ... ... | **42.6** | **45.1** | **52.7** | **52.7** | **64.2** |
| (அ) கொழும்பு ... ... | 42.6 | 44.4 | 50.1 | 50.1 | 58.1 |
| (ஆ) காலி ... ... ... | — | 0.7 | 2.6 | 2.6 | 6.1 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | — |
| 2. கையாளப்பட்ட பொருட்கள் (1000) தொன்கள் ... ... ... | **2,567** | **2,949** | **3,029** | **3,093** | **3,185** |
| (அ) கொழும்பு ... ... | 2,567 | 2,849 | 2,957 | 3,040 | 2,906 |
| (ஆ) காலி ... ... ... | — | 100 | 72 | 53 | 56 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | 223 |
| 3. வருவாய் (ரூபாய் 10 இலட்சம்) ... | **55.0** | **62.0** | **73.7** | **75.8** | **86.7** |
| (அ) கொழும்பு ... ... | 55.0 | 60.6 | 72.6 | 74.7 | 80.2 |
| (ஆ) காலி ... ... ... | — | 1.4 | 1.1 | 1.1 | 1.1 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | 5.4 |
| 4. செலவு (ப. இ. ரூ.) ... ... | **61.3** | **70.0** | **76.7** | **80.6** | **101.2** |
| (அ) கொழும்பு ... ... | 61.3 | 67.5 | 73.8 | 77.7 | 90.8 |
| (ஆ) காலி ... ... ... | — | 2.5 | 2.9 | 2.9 | 3.1 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | 7.3 |
| 5. இலாபம் (+) அல்லது நட்டம் (ப. இ. ரூ.) ... ... ... | **–6.3** | **–8.0** | **–3.0** | **–4.8** | **–14.5** |
| (அ) கொழும்பு ... ... | –6.3 | –6.9 | –1.2 | –3.0 | –10.6 |
| (ஆ) காலி ... ... ... | — | –1.1 | –1.8 | –1.8 | –2.0 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | –1.9 |
| 6. வேலை எண்ணிக்கை ... ... | **16,059** | **17,059** | **17,792** | **17,974** | **20,188** |
| (அ) கொழும்பு ... ... | 16,059 | 16,259 | 16,992 | 17,336 | 17,077 |
| (ஆ) காலி ... ... ... | — | 800 | 800 | 638 | 631 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | 2,480 |
| 7. மொத்தக் கூலிச் செலவு... ... | **46.0** | **51.8** | **56.7** | **67.7** | **83.0** |
| (அ) கொழும்பு ... ... | 46.0 | 50.2 | 54.9 | 65.2 | 74.4 |
| (ஆ) காலி ... ... ... | — | 1.6 | 1.8 | 2.5 | 2.8 |
| (இ) திருகோணமலை ... ... | — | — | — | — | 5.8 |

மூலம் : துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனம்.

(அ) ஓகத்தில் தொடங்கி யூலையில் முடிவுறும் நிதியாண்டுகள்.

(ஆ) 1966/67 றக்குரிய எண்தொகைகள் தற்காலிகமானவை.

(இ) காலித் துறைமுகத்திற்குரிய எண்தொகைகள் 10 மாதங்களிற்குரியன. 1964 ஒற்ரோபர் 1 முதல் 1965 யூலை 31 வரை.

1. துறைமுகக் (சரக்கு) கூட்டுத்தாபனம் 1958, எண். 13.

கூட்டுத்தாபனத்தாற் கையாளப்பட்ட பொருட்களின் தொன்கள் 1967/68ல் 92,000 தொன்களால் அல்லது 3.0 சதவீதத்தால் அதிகரித்தன. இது சென்ற ஆண்டில் 64,000 தொன்கள் அல்லது 2.1 சதவீத அதிகரிப்பை மட்டுமே காட்டியது. 1967/68ல் திருகோணமலைத் துறைமுகத்தின் செயலாற்றம் உள்ளடக்கியதே 1967/68ல் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஏறக்குறைய முழுக் காரணமாகும். உண்மையிற் சென்ற ஆண்டிலும்பார்க்க 1967/68ல் கொழும்புத் துறைமுகத்தின் செயலாற்றம் 1,34,000 தொன்களால் வீழ்ச்சியுற்றது.

மறுபுறம் 1967/68ல் கப்பற்சரக்குகளைக் கையாண்டதன் வருவாய் ரூபாய் 109 இலட்சத்தால் ரூபாய் 867 இலட்சத்திற்கு உயர்ந்தது. இதற்கு மாருக சென்ற ஆண்டில் இதனின் அதிகரிப்பு ரூபாய் 21 இலட்சமாக விளங்கியது. இது திருகோணமலையில் இருந்து பெற்ற ரூபாய் 54 இலட்சம் கொண்ட மேலதிக வருவாயினுலும், கொழும்பில் இருந்து பெற்ற ரூபாய் 55 இலட்சத்தினுலேயுமே ஏற்பட்டதாகும். இது காலியில் இருந்து பெற்ற வருவாயின் சிறு வீழ்ச்சியினுல் எதிரீடுசெய்யப்பட்டது. கையாளப்பட்ட பொருட்களின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும், 1967/68ல் கட்டணங்கள் அதிகரித்தமையால், கொழும்புத் துறைமுகத்தில் வருவாயில் அதிகரிப்பு ஏற்பட்டது. கப்பற்சுமைச் சேவையிற் பெற்ற வருவாய் ரூபா 45 இலட்சத்தாற் கூரிய அதிகரிப்பைப் பதிவுசெய்தது. கரியைக் கையாளும் வருவாயிலேயே முக்கிய வீழ்ச்சி ஏற்பட்டது. இது ரூபாய் 7 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது.

அதே நேரத்தில், 1967/68இற் கூட்டுத்தாபனத்தின் செலவு ரூபாய் 206 இலட்சத்தால் அல்லது 25.6 சதவீதத்தாற் கூரிய அதிகரிப்பைக் காட்டியது. இதில் திருகோணமலையிலேற்பட்டச் செலவு ரூபாய் 73 இலட்சமாக விளங்கியது. அதே வேளையில் கொழும்பிலேற்பட்ட அதிகரிப்பு ரூபாய் 131 இலட்சம் அல்லது 16.9 சதவீதமாகும். இவற்றுள் பெரும்பான்மையான அதிகரிப்புகள் கூலிகளின் செலவினுலேயே ஏற்பட்டதாகும். இது 1967/68ல் ரூபா 153 இலட்சத்தால் அல்லது 22.6 சதவீதத்தால் உயர்ந்தது. இவற்றுள் ரூபா 58 இலட்சம் திருகோணமலையின் கப்பற்சரக்குக் கையாளப்படுதல் தேசியமயமாக்கப்பட்டபின், வேலைக்குச் சேர்க்கப்பட்ட 2,480 தொழிலாளர்களின் பேரில் ஏற்பட்டதாகும். மீதிக்கு கொழும்பில் ரூபா 92 இலட்சத்தால் அல்லது 14.1 சதவீதத்தால் அதிகரித்த கூலிச் செலவே காரணமாகும். உண்மையில் 1967/68இற் கூட்டுத்தாபனத்தின் முழுச் செலவில் 82.0 சதவீதம் கூலிச் செலவாகவே கணக்கிடப்பட்டுள்ளது; மாருகச் சென்ற ஆண்டில் இது 84.0 சதவீதமாகவிருந்தது. இந்த உயர்ந்த வீதச் செலவிற் பெரும் பகுதி, தொழிலாளர்களிலேயே செலவிடப்படுவதால், தொழிலாளர்களின் உற்பத்தியின் அதிகரிப்பினுலேதான் இலங்கையின் துறைமுக இயக்கங்கள் வெற்றியீட்ட முடியும். 1967/68ல் கூட்டுத்தாபனத்தின் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கை 2,214ஆல் அல்லது 12.3 சதவீதத்தால் அதிகரித்தது. மாருகச் சென்ற ஆண்டில் 182 அல்லது 1.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பே ஏற்பட்டது. திருகோணமலையில் எடுக்கப்பட்ட புதிய தொழிலாளர்களே இந்த அதிகரிப்பிற்கு ஏறக்குறைய முழுமைக் காரணமாகும். இது கொழும்பிலும், காலியிலும் ஏற்பட்ட சிறிய வீழ்ச்சிகளை எதிரீடுசெய்தது.

பொருட்களின் அளவு கையாளப்பட்டதில் வீழ்ச்சி ஏற்பட்டபோதிலும், செலவிலேற்பட்ட கூரிய அதிகரிப்பே 1967/68ல் ஏற்பட்ட வருவாய் அதிகரிப்பை எதிரீடுசெய்யும். முதலில் 1966/67ல் ரூபாய் 48 இலட்சமாக விருந்த கூட்டுத்தாபனத்தின் நட்டத்தை 1967/68ல் ரூபா 145 இலட்சமாக உயரச் செய்தது. இறுதியிற் குறிக்கப்பட்ட தொகையில் கொழும்பில் ஏற்பட்ட தொகை ரூபா 106 இலட்சமாகவும், காலியிலும், திருகோணமலையிலும் ஏற்பட்ட நட்டங்கள் முறையே ரூபா 20 இலட்சமாகவும், ரூபா 19 இலட்சமாகவும் இருந்தன. அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று துறைமுகங்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதால், மேலும் ஏற்படும் நட்டங்களைக் குறைக்கலாம் என்று கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கிறது. இத்திட்டம் ரூபா 111 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது மேலே குறிக்கப்பட்ட துறைமுகங்களின் தொழிற்றிறனை உயர்த்தும் என்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## இலங்கைப் பெற்ருேலியக் கூட்டுத்தாபனம்

தற்போதிருக்கும் எண்ணெய் வியாபாரக் கூட்டுநிலையங்களுடன் போட்டியாக இறக்குமதி, விற்பனை, எண்ணெய், எண்ணெய்ப் பொருட்களின் உற்பத்திற்காக நிறுவப்பட்ட இலங்கைப் பெற்ருேலியக் கூட்டுத்தாபனம் 1962 ஏப்பிறலில் தொழிலை ஆரம்பித்தது. 1963ல் உள்நாட்டு எண்ணெய் விநியோகம் தேசியமயமாக்கப்பட்டதும், அது இலங்கையிலுள்ள பொருட்களின் தனியுரிமையைக் கைப்பற்றியது. 1965 தொடக்கம் எண்ணெய்த் தூய்மியையும், கலத்தல் இயந்திரத்தையும் அமைக்கும் துணிகர முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதுடன், நிலநடுக்க ஆய்வுகளையும் (இவை முழுவதும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை) நடாத்தியுள்ளது. பின்வரும் அட்டவணை II (இ) 10, 1964 தொடக்கம் 1968 வரை (பஞ்சாங்க ஆண்டுகள்) கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் விநியோகத் தொழிற்பாடுகளின் சில முக்கிய அம்சங்களைக் காட்டுகின்றது.

1968ல் இக் கூட்டுத்தாபனத்தினது மொத்த மூலதன முதலீட்டம் 706 இலட்சம் ரூபாய்களால் 1,703 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இது பிரதானமாக எண்ணெய்த் தூய்மித் திட்டத்திற்கும் (600 இலட்சம் ரூபாய்கள்), விநியோக அமைப்பிற்கும் (56 இலட்சம் ரூபாய்கள்), கலத்தல் இயந்திரத்திட்டத்திற்கும் (45 இலட்சம் ரூபாய்கள்) உரியனவாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் இக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் இறக்குமதிகள் ஏற்றவிறக்கமடைந்துள்ளன. மத்திய கிழக்கில் ஆரம்பித்த யுத்த நிலைமைகளினுலும், அதனுல் சர்வதேசக் கப்பற்ருெழிலுக்கேற்பட்ட ஆபத்தினுலும் 1967ல் அதிகரித்த இறக்குமதிகள் தேவைப்பட்டன. ஆகவே, 1968ன் போதான இறக்குமதிகளின் வீழ்ச்சிக்கு, மத்திய கிழக்குக் குழப்பம் சிறிது குறைவுற்றபின், கையிருப்புக்கள் குறைக்கப்பட்டமையைக் காரணமாகக் கூறலாம். ஆயினும், உள்நாட்டு விற்பனைகளில் இக் கூட்டுத்தாபனம் நிலையான, தொடர்ச்சியான வளர்ச்சியை அடைந்துள்ளது. முந்திய ஆண்டுகளின் கூடிய அதிகரிப்புகளுக்கெதிராக, 1968ல் 25 இலட்சம் கலன்கள் மட்டும் அதிகரித்தமைக்கு, 1967ல் பெற்ருேல் விலையிலேற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இது மிக உயர்ந்த ரகப் பெற்ருேலின் விற்பனை வீழ்ச்சிகளையும், ஒப்பியல்பான குறைந்த விலையுடைய சாதாரண தரப் பெற்ருேல் விற்பனவுகளின் சிறு அதிகரிப்புக்களையும் விளைவித்தது. கைத்தொழில் தீசல் எண்ணெய், விற்பனவுகளிலும் வீழ்ச்சியேற்பட்டது. காலப்போக்கில், உலையெண்ணெய் மண்ணெண்ணெய் விற்பனவுகள் நிலையான அதிகரிப்பைக் காட்டியுள்ளன. முன் கூறப்பட்டது (கைத்தொழில்களில் அதிகமாகப் பாவிக்கப்படுவது) கூடிய வேகத்தில் அதிகரித்தது.

இதன் விளைவாக இக்கூட்டுத்தாபனத்தின் வருமானம் 1968ல் 325 இலட்சம் ரூபாய்களால் 3,508 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்வுற்றது. இக்கூட்டுத்தாபனத்தின் செலவும் கூடியளவால், அதாவது 1968ல் 431 இலட்சம் ரூபாய்களால் 3,462 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்வுற்றது. இவ்வதிகரிப்புக்கு ஏறக்குறையப் பெரும்பாலும் இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினுல் விற்பனைசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதிவிலை அதிகரிப்பே காரணமாகும். இதன் விளைவாக, 1968ம் ஆண்டிற்கான இக்கூட்டுத்தாபனத்தின் இலாபம், 1967ம் 1966ம் ஆண்டுகளினது முறையே 161 இலட்சம் ரூபாய்கள், 230 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 46 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. 1968ல் இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த வேலைநிலை 300ஆல் 2,515க்கு அதிகரித்தது. இதற்குத் தூய்மி, கலத்தல், ஆலைத் திட்டங்கள் போன்ற புதிய முதலீட்டத் தொழிற்பாடுகளே பெருமளவு காரணமாகும்.

ஏறக்குறைய 1,500 இலட்சம் ரூபாய்களௌன மதிப்பிடப்பட்ட செலவில், நாளொன்றிற்கு ஏறக்குறைய 38,000 பீப்பாக்கள் கொண்ட தூய்மையாக்கப்படாத எண்ணெயைக் கையாளும் ஆற்றல்கொண்ட எண்ணெய்த் தூய்மியை நிறுவுதல் 1969 மாச்சு இறுதியில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏறக்குறைய மூன்று மாதங்களுக்குப் பின்னர், வர்த்தக உற்பத்தி ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தூய்மையாக்கப்படாத

## அட்டவணை II (இ) 10

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் — 1964/68 (அ)

| விடயம் | 1964 | 1955 | 1966 | 1967 | 1968* |
|---|---|---|---|---|---|
| 1. விலையின்படியான நிலையான இருப்புச் சொத்துக்கள் (பத்து இலட்சம் ரூபாய்கள் ஒன்றுசேர்க்கப்பட்டது) | **46.5** | **80.6** | **89.2** | **99.7** | **170.3** |
| (அ) வர்த்தகப் பின்னலமைப்பு ... | 46.5 | 78.2 | 81.2 | 81.6 | 87.2 |
| (ஆ) எண்ணெய்த் தூய்மித் திட்டம் | — | 2.4 | 8.0 | 17.2 | 77.2 |
| (இ) கலத்தல் இயந்திரத் திட்டம் ... | — | — | — | 0.5 | 5.0 |
| (ஈ) நிலநடுக்க அளவை ... ... | — | — | — | 0.4 | 0.9 |
| 2. எண்ணெய் இறக்குமதிகள் (ப. இ. கலன்கள்) (ஆ) ... ... | **208.8** | **183.9** | **195.5** | **224.5** | **214.3** |
| (அ) மிக உயர்ந்த ரகப் பெற்றோல் | 19.8 | 19.7 | 22.3 | 23.2 | 22.2 |
| (ஆ) சாதாரணப் பெற்றோல் ... | 24.1 | 19.7 | 20.5 | 16.2 | 18.2 |
| (இ) தானுயியங்கும் டீசல் ... | 46.3 | 42.1 | 45.4 | 55.5 | 53.2 |
| (ஈ) கைத்தொழில் டீசல் ... | 26.3 | 22.9 | 21.6 | 21.3 | 26.1 |
| (உ) உலையெண்ணெய் ... ... | 42.6 | 24.5 | 35.8 | 39.6 | 33.2 |
| (ஊ) மண்ணெண்ணெய்... ... | 49.7 | 55.0 | 49.9 | 68.7 | 61.4 |
| 3. எண்ணெய் விற்பனவுகள் (ப.இ.க.) ஆ | **175.2** | **186.8** | **200.8** | **219.4** | **221.0** |
| (அ) மிக உயர்ந்த ரகப் பெற்றோல் | 20.3 | 21.1 | 22.4 | 23.4 | 22.9 |
| (ஆ) சாதாரணப் பெற்றோல் ... | 21.9 | 20.4 | 18.6 | 17.8 | 18.1 |
| (இ) தானுயியங்கும் டீசல் ... | 39.6 | 42.8 | 47.2 | 53.2 | 53.4 |
| (ஈ) கைத்தொழில் டீசல் ... | 22.3 | 21.9 | 21.6 | 23.5 | 22.3 |
| (உ) உலையெண்ணெய் ... ... | 21.6 | 29.7 | 34.4 | 40.3 | 43.1 |
| (ஊ) மண்ணெண்ணெய்... ... | 49.5 | 50.9 | 56.6 | 61.2 | 62.2 |
| 4. வருமானம் (ப. இ. ரூபாய்கள்) ... | **265.3** | **265.9** | **300.6** | **318.3** | **350.8** |
| இதில் எண்ணெய் விற்பனவுகள் ... | 263.0 | 264.5 | 298.8 | 316.1 | 348.6 |
| 5. செலவு (ப. இ. ரூபாய்கள்) ... | **234.1** | **245.2** | **277.5** | **303.1** | **346.2** |
| (அ) விற்பனை செய்த பொ. இ. விலை | ட.நொ. | 208.4 | 238.5 | 259.8 | 301.5 |
| (ஆ) ஏனையவை ... ... | ட.நொ. | 36.8 | 39.0 | 43.3 | 44.7 |
| 6. தேறிய இலாபம் (+) ப. இ. ரூ. ... | **+31.2** | **+20.7** | **+23.1** | **+16.1** | **+4.6** |
| 7. வேலை நிலை — எண்கள் ... | **1,595** | **1,750** | **2,129** | **2,215** | **2,515** |

* தற்காலிகமானவை.    மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) நிதியாண்டுகளுக்குரிய சனவரி டிசெம்பருக்கான எண்தொகைகள்.

(ஆ) உராய்வுநீக்கிகள், கொழுப்புகள்போன்ற சில சிறு விடயங்களை உள்ளடக்கா.

எண்ணெய் நிரம்பலுக்கும், தொழில்நுட்பச் சேவைகளின் ஏற்பாட்டிற்கும், தூய்மியின் மேலதிகப் பொருட்களின் விற்பனைக்கும், இலண்டன், கொன் சொலிடேற்றட் பெற்ருேலியம் சப்ளை கொம். லிமிற்றெட்டுடன் ஓர் ஒப் பந்தம் கையொப்பமிடப்பட்டது.

### தபாற் தந்தித் திணைக்களம்

100 ஆண்டுகளுக்கு மேல், இலங்கையிலுள்ள தபால், தந்தி, தொலை பேசிச் சேவைகளைத் தபாற் தந்தி அரசாங்கத் திணைக்களம் இயக்கியுள்ளது. சகல அரசாங்கத் திணைக்களங்களையும் போலவே, இது வரவுகள் கொடுப்பன வுகள் அடிப்படையில் கணக்குகளை வைத்திருந்தாலும், இதனுல் அளிக்கப் பட்ட இலவச வசதிகளுக்கும் (உதாரணமாக அரசாங்கத் திணைக்களங் களுக்கு), தேய்மானம் ஆகியனவற்றிற்கும் இடமளித்து, ''வர்த்தகக் கணக்கு கள்'' போன்ற ஒரு தனித் தொகுதியை வெளியிடுகின்றது. 1966/67ல் (பிந்திய எண்தொகைகள் இன்னும் கிடைக்கவில்லை) முடிவடைவதான நான்கு ஆண்டுகளுக்கான வர்த்தகக் கணக்குகளின் தொடர்பான சுருக்கம் கீழுள்ள அட்டவணை II (இ) 11இலே தரப்பட்டிருக்கின்றது.

தபாற் தந்தித்தொடர்புச் சேவைகளின்மீது செய்யப்பட்ட முதலீட்டம் 1967 செத்தெம்பரில்1 ரூபா 1,145 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் தந்திச் சேவை ரூபா 1,054 இலட்சத்துக்கு வகை கூறியது.

அட்டவணை II (இ) 11

தபாற் தந்திச் சேவைகள் — 1963/64 — 1966/67 (அ)

| விடயம் | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 |
|---|---|---|---|---|
| 1. பயன்படுத்தப்பட்ட மூலதனம் (ப. இ. ரூ.) (அ) | | | | |
| (ப.இ.ரூபாய்கள்-ஒன்றுசேர்க்கப்பட்டது) | 92.7 | 99.0 | 105.2 | 114.5 |
| (அ) தந்திகள் ... ... | 2.9 | 2.9 | 3.0 | 3.0 |
| (ஆ) தொலைபேசி ... ... | 84.8 | 90.6 | 96.4 | 105.4 |
| (இ) ஏனையவை ... ... | 5.0 | 5.5 | 5.8 | 6.0 |
| 2. தபாற் சேவை (ப. இ. ரூபாய்கள்) ... | | | | |
| (அ) வருமானம் ... ... | 50.7 | 49.8 | 52.5 | 51.5 |
| (ஆ) செலவு (இ) ... ... | 46.2 | 46.0 | 46.5 | 51.4 |
| (இ) தேறிய இலாபம்/நட்டம் ... | + 4.6 | + 3.8 | + 6.0 | + 0.1 |
| 3. தந்திச் சேவை (ப. இ. ரூபாய்கள்) | | | | |
| (அ) வருமானம் ... ... | 15.2 | 16.3 | 17.9 | 20.0 |
| (ஆ) செலவு (இ) ... ... | 17.9 | 19.7 | 19.7 | 22.2 |
| (இ) தேறிய இலாபம்/நட்டம் ... | — 2.7 | — 3.4 | — 1.8 | — 2.2 |
| 4. தொலைபேசிச் சேவை ... | | | | |
| (அ) வருமானம் ... ... | 19.6 | 20.4 | 22.9 | 26.1 |
| (ஆ) செலவு (இ) ... ... | 21.4 | 21.9 | 24.7 | 24.3 |
| (இ) தேறிய இலாபம்/நட்டம் ... | — 1.8 | — 1.5 | — 1.8 | + 1.9 |
| 5. (அ) மொத்த வருமானம் ... | 86.5 | 87.3 | 94.2 | 98.7 |
| (ஆ) மொத்தச் செலவு ... ... | 86.4 | 88.6 | 91.9 | 99.0 |
| (இ) தேறிய இலாபம்/நட்டம் ... | —0.1 | -1.3 | — 2.3 | — 0.3 |
| 6. தொழில்நிலை ... ... | 24,762 | 25,031 | 22,187 | 22,844 |

மூலம்: தபாற் தந்தித் திணைக்களம்.

(அ) ஒற்ருேபர் தொடக்கம் செத்தெம்பர் வரையிலான நிதியாண்டுகள்.

(ஆ) வெளிநாட்டுத் தந்திச் சேவையைத் தவிர்த்து.

(இ) ஆண்டுத் தொகைகளை உள்ளடக்கும்.

1. இலங்கை அரசாங்கப் புகையிரதத்தைப் போலல்லாது, தபாற் தந்திச் சேவைகள் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே முதலீட்டம் செய்யப்பட்ட மூலதனத்தின் விரிவான எண்தொகைகள் கிடைக்கவில்லை. இத்தொகை அண்மைக் காலங்களிலுள்ள முதலீட்டங்களைக் காட்டுகின்றது.

*1966/67*ம் ஆண்டினது தபாற் சேவைக்கான வருமானம் *515* இலட்சம் ரூபாய்களாகும். இது சென்ற ஆண்டின் *10* இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியின் விளைவாகும். *1966/67*ல் செலவு (ஆண்டுத் தொகை உட்பட) *49* இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தமையால், *1965/66*ல் *60* இலட்சம் ரூபாய்கள் கொண்ட இலாபம் *1966/67*ல் *1* இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. *1966/67*ல் தந்தியிலிருந்து பெற்ற வருமானம் *21* இலட்சம் ரூபாய்களால் *200* இலட்சம் ரூபாய்களுக்கு உயர்வுற்றது. செலவு *25* இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து *1966/67*ன் நட்டத்தை *22* இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. தொலைபேசிச் சேவையிலிருந்து பெற்ற வருமானத்தில் *32* இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது. ஆயினும், செலவு *1966/67*ல் வீழ்ச்சியுற்று, *1965/66*ன் *18* இலட்சம் ரூபாய்கள் கொண்ட நட்டத்தை *1966/67*ல் *19* இலட்சம் ரூபாய்கள் கொண்ட இலாபமாக மாற்றியது. பொதுப்படையாக, தபாற் தந்திச் சேவைகள், *1966/67*ல் சென்ற ஆண்டின்போதய *23* இலட்சம் ரூபாய்கள் கொண்ட இலாபத்துடன் ஒப்புநோக்குகையில், *3* இலட்சம் ரூபாய்கள் கொண்ட நட்டத்தில் இயங்கியது. இதற்கான பிரதான காரணங்கள் தபால் வருமானத்தினது வீழ்ச்சியும், தபாற் தந்திச் செலவின் அதிகரிப்புக்களுமேயாகும். இது, தொலைபேசிச் சேவையிலிருந்து பெற்ற திருந்திய விளைவுகளை மேலதிகமாக எதிரீடுசெய்தது.

**இலங்கை ஒலிபரப்புச் கூட்டுத்தாபனம்**

*1967* சனவரியில் நிறுவப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு முன்னைய அரசாங்க ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சொத்து வழங்கப்பட்டது. கீழுள்ள அட்டவணை *II* (இ) *12*ல் *1967/68*னது (ஆண்டிறுதி செத்தெம்பர் *1968*) இக் கூட்டுத்தாபனத்தின் இயக்கங்கள் முன்னைய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குத் தொடர்பான ஒப்பியல் தரவுகளுடன் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை *II* (இ) *12*

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் *1963/64*இலிருந்து *1967/68*வரை (அ)

| விடயம் | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68* |
|---|---|---|---|---|---|
| 1. இருப்புச்சொத்துக்களின் பெறுமதி(ஆ) (பத்து இலட்சம் ரூபாய்கள்) | வி.கி. | வி.கி. | வி.கி. | 6.0 | 6.0 |
| 2. வருமானம் (ப. இ. ரூபாய்கள்) ... | 8.4 | 8.5 | 7.8 | 8.8 | 8.3 |
| (அ) உத்தரவாதக் கட்டணங்கள் ... | 4.2 | 4.3 | 3.9 | 4.5 | 3.5 |
| (ஆ) வர்த்தகச் சேவை-காலவிற்பனவு | 3.6 | 3.7 | 3.4 | 3.5 | 4.0 |
| (இ) ஏனையவை ... ... ... | 0.5 | 0.6 | 0.5 | 0.7 | 0.8 |
| 3. செலவு (ப. இ ரூ.) இதனில்— ... | 7.3 | 7.5 | 8.3 | 7.6 | 7.5 |
| (அ) தேசிய சேவை ... ... | 4.2 | 4.3 | 4.6 | 3.9 | ட.நொ. |
| (ஆ) வர்த்தகச் சேவை ... ... | 3.1 | 3.2 | 3.7 | 3.7 | ட.நொ. |
| 4. இலாபம் (+) நட்டம் (—) (பத்து இலட்சம் ரூபாய்கள்) ... | +1.1 | +1.1 | -0.5 | +1.2 | +0.8 |
| 5. தொழில் நிலை எண்ணிக்கை (ஆ) ... | 7 | 795 | 841 | 798 | 935 |

* தற்காலிகமானவை. மூலம் : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

(அ) நிதியாண்டுகளுக்கு ஒற்றோபர் தொடக்கம் செத்தெம்பர்வரை *1967/68*ற்கான எண்தொகைகள் தற்காலிகமானவை. ஒலிபரப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பெற்ற ஒலிபரப்புச்சேவைகள் *1967* சனவரி *5*ல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது.

(ஆ) ஆண்டிறுதியிலுள்ளபடி.

இக் கூட்டுத்தாபனத்தின் இருப்புச் சொத்துக்களினது பெறுமதி 1968 செத்தெம்பரில் 60 இலட்சம் ரூபாய்களென மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளையில், பெரும்பாலும்வானொலிப்பெட்டி உத்தரவுச்சீட்டுக் கட்டணங்களின் வீழ்ச்சியினால் 1967/68ன் வருமானம் 83 இலட்சம் ரூபாய்களுக்குச் சிறு வீழ்ச்சியைக் காட்டியது. இது வர்த்தகச் சேவையின் கால விற்பனை உயர்வினால் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. செலவு 75 இலட்சம் ரூபாய்களாக அமைந்து சென்ற ஆண்டிலும்பார்க்கச் சிறிதளவு குறைவுற்றிருந்தது. இதன்விளைவாக, ஒலிபரப்பிலிருந்து பெற்ற இலாபங்கள் 1966/67னது 12 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1967/68ல் 8 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. 1967/68 இறுதியில் இக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நிலை 137ஆல் 935ற்கு அதிகரித்தது.

## கூட்டுறவு மொத்தவிற்பனை நிறுவனம்

இரண்டாவது உலக யுத்தத்தின்போது அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகளைத் தீர்ப்பதற்காக நிறுவப்பட்ட வர்த்தக விநியோக அமைப்புமுறையின் தொடர்ச்சியாக 1950 யூலையில் இக்கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் மொத்த வர்த்தகத் தாபனமாகத் தொடங்கிய இந்நிலையம், நாடு முழுவதுமான அடிப்படையில் சில்லறை விற்பனவுத் தாபனமாக (குறிப்பாக ஆயிரத்தித் தொளாயிரத்து ஐம்பதின் பத்தாண்டு இறுதிகளில்) விரிவடைந்தது. 1964 அளவில் இதன் தொழிற்பாடுகள் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் (கருவாட்டின் முழுவுரிமையை உள்ளடக்கும்), மருந்துகள், வளமாக்கி, போக்குவரத்து, அச்சடித்தல், இறக்குமதி செய்தல், விற்பனவு செய்தல், ஏற்றுமதிகள் முதல் பெற்றோல் நிரப்பும் நிலையத்தை இயக்குவதிலும் விரிவடைந்துள்ளன. 1964/65ன்போது வளமாக்கி, விளம்பர, மருந்துத் திணைக்களங்கள் மூடப்பட்டன. ஆடைத் திணைக்களத்தினாலும், மருந்துத் திணைக்களத்தினாலும் கையாளப்பட்ட தொழில்கள், முறையே 1967 ஒற்றோபர் 1ந் தேதி தொடக்கமும், 1968 சனவரி 1ந் தேதிதொடக்கமும், லங்கா சலுசல லிமிற்றெட், கொன்சொலிடேற்றட் எக்ஸ்போட்ஸ் (சிலோன்) லிமிற்றெட் ஆகிய இரு புதிய பொதுக் கூட்டுநிலையங்களுக்கு[1] ஒப்படைக்கப்பட்டன. தற்போது, இதன் பிரதான தொழிற்பாடுகள், பலசரக்குகள் (உதாரணமாகச் சீனியும் தகரமிடப்பட்ட மீனும்), சீமெந்து, வன்பொருட்கள், ஏனைய வீட்டுப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்தலும், விற்பனவு செய்தலுமாகும்.

கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையத்தின் 1967 வரை நான்கு ஆண்டுகளுக்கான சில அடிப்படைப் புள்ளிவிபரங்கள் பின்வரும் அட்டவணை II (இ) 13இலே தரப்பட்டுள்ளன.

இக்காலப்பகுதியில் கூட்டுறவு மொத்தவிற்பனை நிறுவனத்தின் மொத்தச் சுழல்வு தளராத அதிகரிப்பைக் காட்டியுள்ளதென்பது தெரிகின்றது. 1967ல் இவ்வதிகரிப்பு 533 இலட்சம் ரூபாய்கள் அல்லது 6.8 சதவீதமாகும். இதற்கு மாறாக செலவு மெதுவான வீதத்தில் அதிகரித்தது. இது, ஏற்கனவே குறிப்பிட்டவாறு, சில பொருளியற் சிக்கனமற்ற தொழிற்பாடுகள் மூடப்பட்டமையினாலாகும். இவ்வுண்மை, விற்பனைத் தொகையின் படிப்படியான அதிகரிப்புடன் இணைந்து, தேறிய இலாபத்தில் 1965 தொடக்கம் படிப்படியான அதிகரிப்பை விளைவித்தது. 1965ம் ஆண்டின் 583 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேறிய இலாபம், பதிவுசெய்யப்பட்ட தொகைகளில் மிகக் கூடியதாகும். அதன் தொழிற்பாடுகளில், பொது வர்த்தகமும் (மொத்த இலாபத்தில் 89.4 சதவீதமாக விளங்கியது), கருவாட்டின் இறக்குமதியும் விற்பனவும் பிரதானமான இலாபத் துறைகளாகும். அதே வேளையிற் சில தொழிற்பாடுகள் மூடப்பெற்றபோதும், 1967 வரை தொழில்நிலை

1. 1966ம் ஆண்டின் 38ம் இலக்கக் கூட்டுறவு மொத்தவிற்பனைச் (திருத்த) சட்ட நியதிகளின்படி ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு தளராத அதிகரிப்பைக் காட்டியது. 1967 இறுதியில் தொழில்நிலை 5,581ற்கு அதிகரித்தபோதும், 1968 இறுதியில் 5,505ற்குச் சிறிதளவு வீழ்ச்சியுற்றது.

### அட்டவணை II (இ) 13

### கூட்டுறவு மொத்தவிற்பனை நிறுவனம் 1964—67 (அ)

| விடயம் | 1964 | 1965 | 1966 | 1967* |
|---|---|---|---|---|
| 1. மூலதனம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) ... | **40.9** | **64.0** | **75.4** | **107.5** |
| (அ) நிலையான (வாக்களிக்கப்பட்ட) ... | 11.7 | 12.2 | 10.9 | 16.2 |
| (ஆ) வேலையில் நிற்கும் (தேறிய) ... ... | 29.2 | 51.8 | 64.5 | 91.3 |
| 2. மொத்தச் சுழல்வு (ப. இ. ரூபாய்களில்) ... | **689.5** | **732.2** | **784.2** | **837.5** |
| 3. மொத்தச் செலவு (ப. இ. ரூபாய்களில்) ... | **680.2** | **700.4** | **750.0** | **779.2** |
| 4. இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ப. இ. ரூ.) | **+9.3** | **+31.8** | **+34.2** | **+58.3** |
| 5. பிரதான திணைக்களங்களினது இயக்க விளைவுகள் இலாபம் அல்லது நட்டம் (ப. இ. ரூ.) ... | | | | |
| (அ) பொது வர்த்தகம் ... ... ... | +5.7 | +27.3 | +31.8 | +52.2 |
| (ஆ) கருவாடு ... ... ... | +2.5 | +3.8 | +2.4 | +5.4 |
| 6. தொழில்நிலை (எண்கள்) ... ... | **4,322** | **4,467** | **4,918** | **5,581** |

* தற்காலிகமானவை. மூலம் : கூட்டுறவு மொத்தவிற்பனை நிறுவனம்.

(அ) நிதியாண்டுகளுக்கான எண்தொகைகள் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை. 1968ற்கான எண்தொகைகள் இன்னும் கிடைக்கவில்லை.

(ஆ) பல்வேறு திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படாத சில செலவுகள் (பொது வர்த்தகத்தில்) உள்ளடக்கப்பட்டுள்ளன.

## கைத்தொழிற் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

கைத்தொழிற் பெருந்தோட்டங்களை (அதாவது வாய்ப்பு நோக்கிய கைத்தொழிலாளர்களுக்கு நியாயமான வீதங்களில் வாடகைக்குக் கொடுப்பதற்கான சகல வசதிகளுமுடைய கைத்தொழில் நிலையங்களின் சேர்க்கைகள்) அமைப்பதற்கான நோக்கத்திற்காக 1960 சனவரியில் மேற்கூறப்பட்ட கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. 1965ல் இக்கூட்டுத்தாபனம் தனது முதலாவது கைத்தொழிற் பெருந்தோட்டத்தை ஏக்கலையில் நிறைவேற்றியது. முதற் படியிலுள்ள 20 கைத்தொழிற் கூறுகள் 1963இலும், இரண்டாம் படியிலுள்ள 23 கூறுகள் 1965இலும் நிறைவேற்றப்பட்டன. கீழுள்ள அட்டவணை II (இ) 14ல் இக் கைத்தொழிற் பெருந்தோட்ட இயக்கத்தின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (இ) 14

கைத்தொழிற் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 1963/64—1967/68 (அ)

| விடயங்கள் | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68* |
|---|---|---|---|---|---|
| 1. ஆண்டிறுதியில் முதலீட்டம் செய்யப்பட்ட மூலதனம் ... ... | 5,137 | 7,637 | 7,707 | 7,807 | 8,707 |
| 2. ஆற்றல் (கைத்தொழிற் கூறுகளின் எண்ணிக்கை) ... ... | 43 | 43 | 43 | 43 | 43 |
| 3. மொத்த வருவாய்கள் ஆ. ரூபாய்கள் (தொழிற்சாலை வாடகைகள்) ... | 157 | 176 | 251 | 360 | 350 |
| 4. இலாபம்(+)அல்லது நட்டம்(—)ஆ.ரூ. | –6 | +3 | +46 | +52 | +91 |
| 5. தொழில்நிலை (எண்கள்) ... | 16 | 17 | 22 | 21 | 23 |

மூலம் : கைத்தொழிற் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

* தற்காலிகமானவை.

(அ) ஏப்பிறல் தொடக்கம் மாச்சு வரையான நிதியாண்டுகள்.

1967/68 இறுதியில் இக் கூட்டுத்தாபனத்தினால் முதலீட்டம் செய்யப்பட்ட மூலதனம் 87 இலட்சம் ரூபாய்களாகும். இது பிரதானமாக ஏக்கலையில் அமைக்கப்பட்ட 43 கைத்தொழில் நிலையங்களைப்பற்றியதாகும். இக் கூட்டுத்தாபனத்தின் (தொழிற்சாலை வாடகைகள் உள்ளடக்கிய) மொத்த வருமானம் 3.5 இலட்சம் ரூபாய்களாக அமைந்து சென்ற ஆண்டினதிலும் பார்க்கச் சிறிது குறைவுற்றிருந்தது. ஆயினும் இக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் 1967/68ல் 0.9 இலட்சத்தால் உயர்வுற்றது. இக்கூட்டுத்தாபனத்தின் தொழில்நிலை 23ஆக விளங்கியது.

இக் கூட்டுத்தாபனம், கண்டியிலும், காலியிலும், யாழ்ப்பாணத்திலும் இன்னும் மூன்று கைத்தொழிற் பெருந்தோட்டங்களை அமைக்கத் திட்டமிட்டிருப்பதுடன், தற்போதைய ஏக்கலைக் கைத்தொழில் அமைப்பை விரிவாக்கவும் எண்ணியுள்ளது. கண்டிப் பெருந்தோட்டம் (படி 1) 126 இலட்சம் ரூபாய்கள் செலவுடைய 35 கைத்தொழிற் கூறுகளுக்காகும். இக்கட்டடம் 1969 ஏப்பிறலில் ஆரம்பித்து, 1970 செத்தெம்பரில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேயாற்றலையும் செலவையுமுடைய காலிப் பெருந்தோட்டம் (படி 1) 1970 செத்தெம்பரில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 100 இலட்சம் ரூபாய்கள் செலவில் 35 கூறுகளுடைய கைத்தொழிற் றொகுதி இதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிறைவேற்றப்படும். ஏக்கலையில் 60 கூறுகள் நிறுவுவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை

1949ல் தொடங்கிய இக்கூட்டுத்தாபனம் 1965 வரை கல்லோயா அபிவிருத்திச் சபையெனப்[1] பெயர் பெற்றிருந்தது. இது 1,217 சதுரமைல் கொண்ட கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி முழுமைக்கும் பொறுப்பாயிருந்தது. நீர்ப்பாசன வாய்ப்புக்களை அமைத்தல், வெள்ளத்தைத் தடுத்தல், கமக்காரர்களைக் குடியேற்றல், வேளாண்மை, கைத்தொழில், போக்குவரத்து தொடர்புகள், குடியியல் வசதிகள் ஆகியவற்றை அபிவிருத்திசெய்தல், பொது நிர்வாகத்தைப் பார்த்தல் ஆகிய நடவடிக்கை

1. 1949ம் ஆண்டின் 51வது இலக்க கல்லோயா அபிவிருத்திச் சட்டம்.

களைப் பிரதேச அபிவிருத்தி அதிகார சபையாகிய இது மேற்கொண்டது. இச்சபை பெரும் பகுதியை அபிவிருத்தி செய்தபின், 1961ல் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் அபிவிருத்தி செய்த பிரதேசங்களை வழங்கத் தொடங்கியது. அதன்பின், அணைக்கட்டுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் ஆகிய முக்கிய வேலைகள், சீனிக் கைத்தொழில், விமான நிலையம், மின்சாரம் அமைத்தல், தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், அரிசி ஆலை ஆகியவை அரசாங்கத்தின் வெவ்வேறு அதிகாரங்களுக்கும், கூட்டுத் தாபனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

கல்லோயாவின் தொழிற்பாடுகள் படிப்படியாக மூடப்படுகையில் இக் கூட்டுத்தாபனம் 1965[1] ''ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை'' எனத் திருப்பி அமைக்கப்பட்டது. இலங்கையின் எப்பகுதியிலும் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்தியையும், அதோடு ஒட்டிய ஏனைய வேலையையும் நடாத்துவதற்கு இதன் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தொடக் கத்தில் வளவ கங்கையின் 954 சதுரமைல் கொண்ட உடவளவ கங்கைப் பள்ளத்தாக்கை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப் பட்டது. இத்திட்டத்தின் செலவு ரூபா 3,737 இலட்சம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்கிடையில் கல்லோயாவின் ''அடித்தள வேலைத்தலத்திற்'' பணியாற்றிய அலுவலாளர்களும், கனத்த இயந்திரங்களும் 1967ல் ''கனத்த அடைப்புப் பிரிவின்'' கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதனுற் பார அமைப்பு நிறுவனமாக இச்சபை இயங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.[2] அத்துடன் பிரண்டி, ஜின் ஆகிய நாட்டிற் செய்யப்படும் குடிவகைகளையும் (கலா கொஸ் மற்றிக்ஸ் லிமிட்ரெட் இலண்டனுடன் சேர்ந்து), வாசனைகளையும், அழகு சாதனங்களையும் தயாரிக்க இச்சபை தொடங்கியுள்ளது.

சபையின் பல்வகை நடவடிக்கைகளை விளக்கும் ஏற்கத்தக்க புள்ளி விவரங்களைப் பெறுவதில் மிகக் கடினமான நிலை நிலவியது. ஒற்ரோபர் தொடக்கம் செத்தெம்பர் வரையுள்ள 1967/68ல் முடிவடையும் கடந்த நாலாண்டுகளின் இயக்கங்களின் சிலவெண்தொகைகளை அட்டவணை II (இ) 15 தருகிறது.

1966/67இற் சபையினுற் பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 843 இலட்சம் வீழ்ச்சியைக் காட்டியது. இது சிறி லங்கா சீனிக் கூட்டுத் தாபனத்திற்குச் சீனிக் கைத்தொழிலின்மீது செய்யப்பட்ட மூலதன முதலீடு 1966 ஒற்ரோபரில் மாற்றப்பட்டு வேறுபடுத்தப்பட்டதே முக்கிய காரண மாகும். கல்லோயாவிலும் உடவளவையிலும் செய்யப்பட்ட முதலீடுகள் அதிகரிப்புக்களைக் காட்டின. மேலும், இம்மூதலீடுபற்றிய பகுக்கப்பட்ட விவரங்கள் கிடைக்கவில்லை.

சென்ற ஆண்டுகள்போல் கல்லோயாப் பிரதேசத்தின் மிகுதிப் பகுதியின் இயக்கமும் நிர்வாகமும், 1966/67ல் இழப்பையே காட்டின. செங்கல், ஓட்டுத் தொழிற்சாலையும், தச்சு வேலைத்தலமும் நயத்திலேயே இயங்கின. கல்லோயாவில் உள்ள நிலத்தில் 1,00,000 ஏக்கர்களுக்கு மேலான பகுதிக்கு நீர்ப்பாசன வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளனவென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சாதனைக் கிளையும், மற்றும் சில வர்த்தக நடவடிக்கைகளும் நயத்தில் இயங்க, பலகையறுக்கும் ஆலை நட்டத்தில் இயங்கியது தவிர்த்து, உடவள வைத் திட்டத்தைப்பற்றி அதிக தரவு கிடைக்கவில்லை. இத்திட்டம் முற்றுப் பெற்றபின், புது நிலத்தின் 60,000 ஏக்கர்கள் நீர்ப்பாசனத்திற்குக்கீழ்க் கொண்டுவரப்படுவதோடு 5,940 கிலோ வாட்ஸ் சக்தியுள்ள மின்வலி அபி விருத்திச் செய்யப்படும்.

---

1. 1965ம் ஆண்டின் 6ம் இலக்க அபிவிருத்திச் சட்டம்.
2. அரசாங்க பொறியியற் கூட்டுத்தாபனத்திற்கு ஒத்தது.

## அட்டவணை II (இ) 15

### ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை
### 1963/64 தொடக்கம் 1966/67 வரை (அ)

| விடயங்கள் | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 |
|---|---|---|---|---|
| 1. பயன்படுத்தப்பட்ட மூலதனம்(ஆ) திரட்டப்பட்ட ரூபாய் ப. இ. ரூ. ... ... ... | **779.8** | **832.1** | **875.3** | **791.0** |
| (அ) கல்லோயாத்திட்டம் ... ... | 660.2 | 674.0 | 682.9 | 700.8 |
| (ஆ) கல்லோயாச் சீனிக் கைத்தொழில் ... | 109.1 | 112.9 | 117.2 | — |
| (இ) உடவளவைத் திட்டம் ... ... | 10.5 | 45.2 | 75.2 | 90.2 |
| 2. இலாபம் (+) அல்லது நட்டம் (—) (இ) (ரூ. '000) | | | | |
| (அ) தலைமை அலுவலகம் (ஈ) ... ... | வி.கி. | வி.கி. | — 815 | — 1,449 |
| (ஆ) கல்லோயாத் திட்டம் ... ... | வி.கி. | —10,319 | —11,500 | — 9,161 |
| இதனுல்:— | | | | |
| (1) செங்கல் ஒட்டுத் தொழிற்சாலை ... | + 138 | + 160 | + 117 | + 57 |
| (2) மின்சாரம் ... ... | — 1,229 | + 341 | — | — |
| (3) அரிசி ஆலை ... ... | — 4 | — 93 | — 15 | — |
| (4) தச்சு வேலை நிலையம் ... ... | — 345 | — 297 | — 261 | + 380 |
| (இ) சீனிக் கைத்தொழில் ... ... | — 4,281 | — 6,195 | — 6,295 | — |
| (1) சீனித் தொழிற்சாலை ... ... | — 8,689 | —12,182 | —12,392 | — |
| (2) வடிகட்டும் சாலை ... ... | + 4,408 | + 5,987 | + 6,096 | — |
| (ஈ) உடவளவைத் திட்டம் ... ... | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| இதனுல், | | | | |
| (1) சாதனக் கிளை ... ... | வி.கி. | வி.கி. | — 495 | — 4,105 |
| (2) அரைக்கும் ஆலை ... ... | வி.கி. | வி.கி. | — 201 | — 75 |
| (3) ஏனைய வர்த்தக நடவடிக்கைகள் ... | வி.கி. | வி.கி. | — 154 | + 28 |
| (உ) வாசனைத் தொழிற்சாலை ... ... | — | — | — | + 43 |
| 3. தொழிலாளர் (எண்ணிக்கை) ... ... | வி.கி. | வி.கி. | **11,499** | **14,695** |

மூலம் : ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை.

(அ) ஒற்ரோபர் தொடக்கம் செத்தெம்பர் வரைக்குரிய நிதியாண்டுகள். எல்லா எண்தொகைகளும் தற்காலிகமானவை.
(ஆ) வேறு நிறுவனங்களுக்கு இப்பொழுது கையளிக்கப்பட்ட சில விடயங்களின் முதலீடுகளை உள்ளடக்குகிறது.
(இ) சில விடயங்களின் வருவாய்க்கும் செலவிற்கும் உள்ள வேறுபாட்டை எண்தொகைகள் எடுத்துக்காட்டுகின்றன.
(ஈ) 1965/66ற்குப் பின்புதான் தலைமை அலுவலகத்திற்கு தனிக் கணக்குகள் தொடங்கப்பட்டன.

1966/67ல் ரூபா 43,000 ரூபாய்கள் கொண்ட இலாபத்தை அழகு சாதனைத் தொழிற்சாலை பதிவுசெய்துள்ளது. இதற்கிடையில், நாட்டிற் செய்யப்பட்ட குடிவகைகள் போத்தலில் அடைக்கும் பணியிலே தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

### இலங்கை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

அரசாங்கத்திடம் அதாவது காணி ஆணையாளரிடமும், உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமும் இருந்த எட்டுப் பெருந்தோட்டங்களை ஏற்று நடாத்துவதற்கு 1959ல் இக்கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. அதன்பின் இது மேலும் 4 பெருந்தோட்டங்களைத் திறந்துள்ளது. 1967/68 முடிவில் 12 பெருந்தோட்டங்களையும்1, 4 தொழிற்சாலைகளையும்2 பொறுப்பேற்றது. இவற்றின் இயக்கத்தின் விவரங்கள் தனியாக அட்டவணை II (இ) 16ல் காட்டப்பட்டுள்ளன.

1. நெல்ல ஊலை, ஏடெல்லை, யட்டவத்தை, லச்சிஸ், யெலங்கௌரி, ஹிக்கொடை/நெவஸ்மேயர், யஹலத்தென்னை/டிப்பிட்டை, கெரசமா, பெலவத்தை, ஹபரக்கடை, சமணலவத்தை, நுவரெலியாப் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்றன.
2. மண்டரநுவரை, டெரன்கலே, டெல்கொடை, கலுபோவிற்றியன தேயிலை ஆகியவைகளை உள்ளடக்குகின்றன.

## அட்டவணை *II* (இ) 16

### மாநிலப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் *1963/64—1967/68* (அ)

| விடயங்கள் | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 |
|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ஆண்டு முடிவில்) ... ... | | **27,954** | **33,542** | **39,185** | **43,577** |
| (அ) பெருந்தோட்டங்கள் ... | வி.கி. | 22,848 | 28,378 | 34,000 | 36,500 |
| (ஆ) தொழிற்சாலைகள் ... ... | 4,900 | 5,106 | 5,164 | 5,185 | 7,077 |
| 2. பெருந்தோட்டங்கள் | | | | | |
| (அ) எண்ணிக்கை ... ... | 12 | 12 | 12 | 12 | 12 |
| (ஆ) மொத்த ஏக்கர்கள் ... ... | 8,441 | 8,435 | 8,654 | 8,654 | 8,654 |
| (இ) பயிரிடப்பட்ட மொத்த ஏக்கர்கள் | 5,097 | 5,290 | 5,565 | 5,513 | 5,794 |
| (ஈ) மொத்த வருவாய் (ரூ. 1000/-) ... | 2,029 | 2,130 | 1,841 | 3,193 | 4,509 |
| (உ) இலாபம்(+) அல்லது நட்டம்(—) (ரூ. '000) ... ... | −235 | + 8 | +111 | −350 | +290 |
| (ஊ) தொழில் நிலை ... ... | 6,181 | 6,209 | 6,631 | 6,441 | 7,213 |
| 3. தொழிற்சாலைகள் | | | | | |
| (அ) எண்ணிக்கை ... ... | 3 | 3 | 3 | 3 | 3 |
| (ஆ) மொத்த வருவாய் (ரூ. '000) ... | 1,901 | 2,038 | 2,107 | 1,458 | 3,155 |
| (இ) இலாபம் (+) அல்லது நட்டம்(—) (ரூ. '000) | −3 | +6 | −33 | −134 | +20 |
| (ஈ) தொழில் நிலை ... ... | 231 | 254 | 215 | 192 | 246 |
| 4. மொத்தக் கூட்டுத்தாபனம் | | | | | |
| (அ) மொத்த வருவாய் (ரூ. '000) ... | 3,930 | 4,168 | 3,948 | 4,651 | 6,065 |
| (ஆ) இலாபம்(+) அல்லது நட்டம் (—) (ரூ. '000) (ஆ) | −238 | +14 | +78 | −484 | +310 |
| (இ) தொழில் நிலை ... ... | 6,412 | 6,463 | 6,846 | 6,633 | 7,459 |

மூலம்: மத்திய பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

அ. செத்தெம்பர் முடிவடையும் நிதியாண்டுக்குரியது. எல்லா எண்தொகைகளும் தற்காலிகமானவை.

ஆ. வரிவிதிப்பிற்குமுன் இவ்வட்டவணையின் விடயங்கள் *2* (ஊ)வினதும், *3* (இ)இனதும் கூட்டுத்தொகைகளாகும். இந்த இலாப/நட்ட எண்தொகைகள் கூட்டுத்தாபனத்தாற் பதிப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கைகளில் வரும் எண்தொகைகளோடு மாறுபடுகின்றன. இறுதியில் குறிக்கப்பட்டதற்கமைய *1963/64*இல் கூட்டுத்தாபனம் ரூபாய் *97,000* நட்டம் அடைந்தது. *1964/65*இல் ரூபாய் *35,000* இலாபம் காட்டியது. *1965/66*இல் ரூபாய் *89,000* நட்டத்தை அடைந்தது. *1966/67*இல் ரூபாய் *16,000* இலாபத்தைக் காட்டியது.

கூட்டுத்தாபனத்தினுற் பொறுப்பேற்று நடாத்தப்பட்ட 12 பெருந்தோட்டங்களின் மொத்த ஏக்கர்கள் 1965/66இற்குப்பின் 8,654 ஏக்கர்களாயிருந்தன. 1967/68ல் இப் பெருந்தோட்டங்களின் மொத்த வருவாய் ரூபா 45 இலட்சமாகவிருந்து ரூபா 2.9 இலட்சம் கொண்ட மொத்த இலாபத்தை ஏற்படுத்தியது சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில், அவ்வாண்டில் ஏற்பட்ட நட்டம் ரூபா 3.5 இலட்சமாகவிருந்தது. நெல்ல ஊலே, யட்டவத்தை, யகலத் தென்னே, டெப்பிற்றியா பெருந்தோட்டங்களிலேற்பட்ட நட்டங்களே எதிரீடு செய்யும் முறையில், ஏடெல்லே, யெலன்கொளரி, கிக்கொடை/நெவஸ்மேயர், பெல்வத்தை, கெரகமை ஆகியவற்றில் இருந்து பெற்ற இலாபங்களே இவ் விளைவிற்குக் காரணமாகும். 1967/68ல் 12 பெருந்தோட்டங்களின் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,213 ஆகவிருந்தது. இது சென்ற ஆண்டிலும்பார்க்க 772 எண்ணிக்கை அதிகரிப்பைக் காட்டுகிறது.

1967/68ல் கூட்டுத்தாபனத்தின் 4 தேயிலைத் தொழிற்சாலையின் மொத்த வருவாய் ரூபா 32 இலட்சமாகவிருந்தது. இவை 1967/68ல் ரூபா 2 இலட்சம் கொண்ட இலாபத்தைத் தரும் முறையில் இயங்கின. ஒப்புநோக்குகையில், சென்ற ஆண்டில் இவற்றிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1.3 இலட்சமாகவிருந்தது. 1967ற் கையேற்கப்பட்ட கலுபோவிற்றியன தொழிற்சாலையில் ஏற்பட்ட ரூபா 4.4 இலட்சம் இலாபமே இதற்கு முக்கிய காரணமாகும். ஏனையவற்றில் டெரன்கலேத் தொழிற்சாலே சிறிய இலாபத்தைப் பதிவுசெய்ய ஏனையவை நட்டத்தில் இயங்கின. எனினும், இங்கு கவனிக்கப்படவேண்டியது யாதெனில், இந்தத் தொழிற்சாலேகளே நிறுவி இயக்கியது வர்த்தக அடிப்படையில் இலாபத்தை ஏற்படுத்துவதற்கன்றி, மேட்டுநிலக் குடியேற்றத் திட்டங்களிற் குடியேறிய தேயிலேப் பயிர் செய்வோருக்கு உதவிசெய்ய வென்பதையே உணரவேண்டும். 1967/68ல் இந்தத் தொழிற்சாலேகளிற் பணிபுரிந்தோரின் எண்ணிக்கை 246 ஆகும்.

இந்தத் தொழிற்சாலேகளிலும் பெருந்தோட்டங்களிலும் இருந்துபெற்ற இலாபங்களேயும், நட்டங்களேயும் கூட்டி மொத்தமாகப் பார்க்கையில், 1967/68ல் ரூபா 3.1 இலட்சம் கொண்ட இலாபத்துடனேயே இக் கூட்டுத்தாபனம் தன் பணியை முடித்ததென்பது தெரியவருகிறது. மாருகச் சென்ற ஆண்டில்[1] இதற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4.8 இலட்சமாகும்.

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

1961ம் ஆண்டில் ஆயுட் காப்புறுதித் தொழிலேத் தேசியமயமாக்கியுடன் மேற்கூறிய கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டு, 1963ம் ஆண்டு சனவரி[2] முதலாந் தேதி தொடக்கம் இலங்கையில் ஆயுட் காப்புறுதித் தொழிலேத் தனியுரிமையோடு நடாத்த அனுமதி கொடுக்கப்பட்டது. பின்னர் 1963ம் ஆண்டில் இந்தக் கூட்டுத்தாபனத்திற்குத் தனியுரிமையாகப் பொதுப்படைக் காப்புறுதித்தொழிலும் (கப்பற் காப்புறுதி நீக்கி) கொடுக்கப்பட்டது. இந்தக் கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபா 200 இலட்சத்தில் ரூபா 100 இலட்சம் அரசாங்கத்தால் உதவப்பட்டது. கீழேயுள்ள அட்டவணே II (இ) 17 கடந்த ஐந்து நிதியாண்டுகளில் (ஆங்கிலப் பஞ்சாங்க ஆண்டுகள்) கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயலாற்றலேக் காட்டுகின்றது.

மீளப் பார்வையிடும் ஆண்டுகளில் ஆயுட் காப்புறுதி ஒப்பந்தப் பத்திரங்களின் எண்ணிக்கையும் மதிப்புத் தொகையும் தளர்ச்சியில்லாது அதிகரித்தன. ஆயினும், 1967ம் ஆண்டின் பெருக்கம் முந்திய ஆண்டுகளினதும்பார்க்க மந்தமானதாகும். காப்புறுதிக் கட்டண வருவாயும் இவ்வண்ணமே அதிகரிப்புக் காட்டிற்று. 1968ம் ஆண்டு முடிவில் ஆயுட் காப்புறுதி நிதியில் ரூபா 1,005 இலட்சம் இருந்தது. செயலாற்றத்தினுற் கிடைத்த மேலதிகத் தொகையும் இடைவிடாத வளர்ச்சியையே காட்டிற்று. இதன் காரணமாக

---

1. அட்டவணே II (இ) 16ன் அடிக்குறிப்பு 'ஆ'வைப் பார்க்கவும்.

2. 1961ன் 2ம் இலக்கக் காப்புறுதிச் சட்டம்.

## அட்டவணை II (இ) 17

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1964—1968 (அ)

| விடயம் | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|
| 1. மூலதனம் அளிக்கப்பட்டது ... ... | **10.0** | **10.0** | **10.0** | **10.0** | **10.0** |
| 2. ஆயுட் காப்புறுதி ... ... ... | | | | | |
| (அ) செயலிலிருக்கும் ஆயுட்காப்புறுதிகள் எண்ணிக்கை (ஆண்டு முடிவில்) ... | 69,902 | 85,110 | 98,246 | 103,285 | வி.கி. |
| (ஆ) செயலிலிருக்கும் ஆயுட்காப்புறுதிகள் பெறுமதித் தொகை (ஆண்டு முடிவில்) | 323.5 | 411.6 | 509.6 | 540.5 | வி.கி. |
| (இ) கட்டணங்களின் வருமானம் (ஆண்டுக் காலத்தில்) ப. இ. ரூ. ... ... | 15.5 | 21.0 | 26.5 | 27.6 | 36.8 |
| (ஈ) கொடுக்கப்பட்ட பணம் ப. இ. ரூ. ... | 0.5 | 0.9 | 0.8 | 1.6 | 1.7 |
| (உ) ஆயுட் காப்புறுதி நிதி ஆண்டு முடிவிற் தொகை ப. இ. ரூ. ... ... | 14.1 | 28.8 | 49.6 | 71.4 | 100.5 |
| (ஊ) மொத்த வருமானம் (இ) ப. இ. ரூ. ... | 16.7 | 23.0 | 29.8 | 31.9 | 42.1 |
| (உ) மொத்தச் செலவழிப்பு (இ) ப. இ. ரூ. ... | 7.5 | 8.3 | 9.0 | 9.7 | 13.3 |
| (ஏ) மேலதிகம் (+) அல்லது குறைவு(—) (இ) ப. இ. ரூ. ... ... ... | +9.2 | +14.7 | +20.8 | +22.2 | +28.8 |
| (ஐ) செலவின் விகிதம் (சதவீதம்) ... | 45.3 | 34.9 | 30.6 | 29.5 | 30.1 |
| 3. தீக் காப்புறுதி (ஆண்டுக் காலத்தில்) | | | | | |
| (அ) நிகர கட்டணம் ... ... ... | 14.5 | 15.5 | 19.1 | 19.1 | 20.0 |
| (ஆ) நிகரக் கொடுபட்ட பணமும் நி. இருப்பு | 1.3 | 3.6 | 3.9 | 3.3 | 4.7 |
| (இ) இலாபம் (+) அல்லது நட்டம் (—) ... | +5.0 | +11.2 | +13.4 | +17.5 | +14.0 |
| (ஈ) பதில் எழுத்து ஒதுக்கு நிதி ... ... | 9.4 | 10.1 | 12.4 | 12.4 | 13.2 |
| 4. பொதுப்படையான விபத்துக் காப்புறுதி (ஆண்டுக் காலத்தில்) ப. இ. ரூ. ... | | | | | |
| (அ) நிகரக் கட்டணம் ... ... | 19.9 | 20.8 | 22.2 | 24.5 | 30.1 |
| (ஆ) நி. கொ. பணமும் நிலுவையில் எடுப்பன | 4.8 | 8.8 | 18.6 | 24.1 | 29.3 |
| (இ) இலாபம் (+) அல்லது நட்டம் (—) ... | +2.0 | +8.4 | +4.7 | +4.3 | +3.6 |
| (ஈ) பதில் எழுத்து ஒதுக்கு நிதி ... ... | 13.0 | 13.5 | 14.4 | 15.9 | 19.5 |
| 5. கப்பற் காப்புறுதி (ஆண்டுக் காலத்தில்) ப. இ. ரூ. | | | | | |
| (அ) நிகரக் கட்டணம் ... ... | 1.9 | 2.7 | 3.1 | 2.8 | 4.4 |
| (ஆ) நி. கொ. நிலுவையில் இருப்பனவும் ... | 0.8 | 1.3 | 1.4 | 2.8 | 3.6 |
| (இ) இலாபம் (+) அல்லது நட்டம் (—) ... | ... | +0.6 | +2.2 | +1.1 | +1.4 |
| (ஈ) பதில் எழுத்து ஒதுக்கு நிதி ... ... | 1.9 | 2.7 | 3.1 | 2.8 | 4.4 |
| 6. தொழில்நிலை (ஆண்டு முடிவின் எண்ணிக்கை) | **820** | **1310** | **1390** | **1388** | **1505** |

மூலம்: இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

* தற்காலிகமாக

(அ) நிதியாண்டு சனவரி முதல் திசெம்பர் வரை.

(ஆ) இண்டாண்டுத் தொகையும் மற்றையக் காப்புதிறுக் கூற்றும் உட்பட.

(இ) (ஈ) (உ) 1. காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம்1961ம் ஆண்டு இல. 2,

செலவின் விகிதம் (செலவை வருமானத்திலிருந்து விகிதமாய் எடுப்பது) 1967ம் ஆண்டு வரை தளர்ச்சியடையாது வீழ்ச்சியுற்றது. 1968ம் ஆண்டில் செலவு விகிதம், அதிகரித்த சம்பளச் செலவை முதற்காரணமாகக் கொண்டு, சிறிய ஏற்றத்தைக் காட்டிற்று.

1966ஆம் ஆண்டிலிருந்து தீக் காப்புறுதிக் கட்டண வருமானம் ஓரளவு நிதானமாகவே விளங்கியதாயினும், 1967ம் ஆண்டில் கொடுக்கப்படவேண்டிய கோரிக்கைகள் குறைவுற்றிருந்தமையால் அதிக இலாபம் ஏற்பட்டது. 1968ம் ஆண்டில் அதிகமான கொடுப்பனவு இருந்ததனை முதற் காரணமாகக் கொண்டு இலாபம் குன்றியது. பொதுப்படை, உறுப்பாட்டுக் காப்புறுதியின் கட்டண வருமானம் தளர்ச்சியின்றி அதிகரிப்புக் காட்டியும், 1966ம் ஆண்டிலிருந்து நலன் கோரிக்கைக் கொடுப்பனவுகள் கூர்மையாக அதிகரித்தமையால், இலாபத்தில் வீழ்ச்சியேற்பட்டது. இக்காலத்தில் இந்தக் கூட்டுத்தாபனம் ஒப்பியல்பிற் குறைவான கப்பற் காப்புறுதித் தொழிலையே செய்துள்ளது. இதன் வருமானமும் இலாபமும் தளப்பம் காட்டின. தாபனத்தின் மொத்த ஆளணி 1967ம் ஆண்டில் 1,388 பேராயிருந்து, 1968ம் ஆண்டில் 1,505 பேருக்குக் கூடியது.

### தேசிய லொத்தர் சபை

1956ல் தொடக்கப்பட்ட இச்சபை 1963வரை ''ஆசுப்பத்திரி லொத்தர் சபை'' என்ற பெயருடன் விளங்கி, அதனின் மிகை வருவாய் இலங்கையின் உடல்நலத்துறை (சுகாதார) விருத்திக்கெனச் சிறப்பாக ஒதுக்கப்பட்டிருந்தது. இது இன்றைய அமைப்பில் 1964 சனவரியில் மீளக்கூட்டப்பட்டு, இதன் தொழிற்பாடுகளும் படிப்படியாக விரிவடைந்துள்ளன. ஒற்றோபரிற்றொடங்கி செத்தெம்பரில் முடிவடையும் கடந்த ஐந்தாண்டுகளின் சபையின் தொழிற்பாடுகள்பற்றிய சில தரவுகளைக் கீழேயுள்ள அட்டவணை II (இ) 18 தருகிறது.

அட்டவணை II (இ) 18

தேசிய லொத்தர் சபை 1963/64--1967/68 (அ)

| விடயங்கள் | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67* | 1967-68* |
|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் ... | 45 | 54 | 20 | 176 | 600 |
| 2. இழுக்கப்பட்ட அதிட்டச் சீட்டுகளின் எண்ணிக்கை ... ... ... | 26 | 41 | 52 | 52 | 54 |
| 3. வருவாய் (ரூ. '000) ... ... | **6,773** | **12,256** | **26,306** | **29,940** | **38,956** |
| (அ) சீட்டுகளின் விற்பனை ... ... | 6,622 | 11,975 | 25,318 | 28,909 | 37,960 |
| (ஆ) ஏனைய ... ... ... | 151 | 281 | 988 | 1,031 | 996 |
| 4. செலவு (ரூ. '000)... ... ... | **3,913** | **6,724** | **14,289** | **16,424** | **22,048** |
| (அ) பரிசில் பெறுமதி ... ... | 2,649 | 4,580 | 10,127 | 11,564 | 15,184 |
| (ஆ) நிர்வாகம் (தரகு உட்பட) ... | 1,264 | 2,144 | 4,162 | 4,860 | 6,864 |
| 5. செலவு தவிர்ந்த வருவாய் (ரூ. '000) ... | +2,860 | +5,532 | +12,017 | +13,516 | +6,908 |
| 6. திரட்டு நிதிக்கு வழங்கப்பட்ட தொகை (ரூபா '000) இ ... ... | 2,781 | 5,231 | 10,683 | 12,142 | 15,609 |
| 7. தொழிலாளர் (எண்ணிக்கை) ... | 38 | 43 | 37 | 66 | 71 |

* தற்காலிகமானவை. மூலம்: தேசிய லொத்தர் சபை.

(அ) ஒற்றோபரிற்றொடங்கி செத்தெம்பரில் முடிவடைந்த நிதியாண்டுகளுக்கே இவ்வெண்தொகைகள் உரியவை.

(ஆ) பதிவுசெய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் அரசாங்கக் கணக்குகளில் இருந்து இவ்வெண் தொகைகள் மாறுபடுகின்றன.

1963/64ல் 26 ஆகவிருந்த இழுக்கப்பட்ட அதிட்டச் சீட்டுகள் 1965/66ல் 52 ஆகவுயர்ந்தன. இதன்பின் கிழமைதோறும் அதிட்டச் சீட்டு இழுக்கப்படுவது, ஓராண்டு அம்சமாக வந்துள்ளது. 1967/68ல் இரண்டு ''ஜாதிக சம்பத'' அதிட்டச் சீட்டு என்ற பெயரில் அதிகரித்த சீட்டு விலைகளும் பரிசுகளும் கொண்ட இரு மேலதிக அதிட்டச் சீட்டுகள் ஆக்கப்பட்டன. 1967/68ல் சீட்டுக்களின் விற்பனை வருவாயிலேற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இதற்கு ஓரளவு வகைகூறுகின்றது. கோரப்படாத பரிசுகளின் பெறுமதி உட்பட மொத்த வருவாய் 1966/67ல் ரூபா289 இலட்சத்திலிருந்து 1967/68ல் ரூபா 400 இலட்சமாகவுயர்ந்தது. அதே வேளையிற் செலவும் பெருமளவு அதிகரித்துள்ளது. அதிகரித்த செலவில் வழங்கப்பட்ட அதிகரித்த பரிசுப் பணம் ரூபா 36 இலட்சத்திற்கு வகைசெய்தது. அத்துடன் தரகு உட்பட நிர்வாகத்திலேற்பட்ட அதிகரித்த செலவு ரூபா 20 இலட்சத்திற்குக் காரணமாகவிருந்தது.

1963ம் ஆண்டின் 11ம் இலக்க நிதிச் சட்டத்தின்கீழ் நிதியாண்டு முடிவில் இச்சபையின் வரவிலிருந்த பணம் யாவும் திரட்டுநிதியில் வரவு வைக்கப்படவேண்டியதாகும். இதற்கமைய இந்தச் செலுத்துத் தொகைகள் படிப்படியாக அதிகரித்து, 1967/68ல் இத்தொகை ரூபா 156 இலட்சமாக விருந்தது. 1967/68இற் சபையின் நிரந்தர ஊழியர்கள் 71 ஆகவிருந்தனர். இது சென்ற ஆண்டிலும்பார்க்க 5ஆற் கூடியிருந்தது. எனினும், சபையின் தொழிற்பாடுகளால் உருவாக்கப்பட்ட மறைமுகத் தொழில்வாய்ப்பு பெருமளவு அதிகரித்தது.

### இலங்கைச் சுற்றுலாப்பயணர் சபை

1966 மேயில் இலங்கையிற் சுற்றுலாச் சேவையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு, இலங்கைச் சுற்றுலாப்பயணர் சபை நிறுவப்பட்டது. சபையையும், சுற்றுலாப் போக்குவரத்தையுமொட்டிய சில புள்ளிவிபரங்கள் கீழுள்ள அட்டவணை II (இ) 19லே தரப்பட்டுள்ளன.

சபையினுல் தொழிலீடுபடுத்தப்பட்ட மூலதனம் 1967/68ன் இறுதியில் (ஒற்ரூேபர் தொடங்கி செத்தெம்பர்வரை) ரூபா 34 இலட்சத்தால் ரூபா 70 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது. 1967/68 இறுதியிற் சபையின் இருப்புச் சொத்துக்களின் பெறுமானம் ரூபா 125 இலட்சமாகவிருந்தது. சபையானது தொடக்கத்தில் விடுதி ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஒரு சிறு விடுதியையும், விடுதிப் பாடசாலையையும் நிறுவி, 14 வாடிவீடுகளையும் பராமரித்ததெனினும், 1967 ஏப்பிறல் தொடக்கம் வாடிவீடுகள் இலங்கை விடுதிகள் கூட்டுத்தாபனத்திற்கும், தனியார் முயற்சிகளுக்கும் வாடகைக்குக் கொடுக்கப்பட்டன.

1966/67, 1967/68ல் சபையின் மொத்த வருமானம் சிறிதளவு அதிகரிப்பைக் காட்டியது. எனினும், அதன் சுற்றுலா அபிவிருத்தியின் மேலுள்ள செலவு மேலும் அதிகரித்து, அதன் விளைவாற் பணக்குறை (வருமானத்தின் மேலான செலவின் மிகை) 1966/67ல் ரூபா 21 இலட்சத்திலிருந்து 1967/68ல் ரூபா 33 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது. சபையினுல் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 1967/68ல் 8இனுல் 1968ல் 198இற்கு அதிகரித்துள்ளது.

எனினும், இலங்கையில் வருகையாளர்களின் எண்ணிக்கை 1967, 1968ல் முறையே 15,294, 13,075ஆலும் வீழ்ச்சியடைந்தது. 1967 யூனில் மத்திய கிழக்குப் போரினுலேற்பட்ட கடற்போக்குவரத்தின் ஓரளவு தடையினுல் உல்லாசப் பயணரின் (இரவு தங்காதோர்) வருகையில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சியே பிரதான காரணமாகும். எனினும், சுற்றுப்பயணரின் வருகையில் (ஓர் இரவிற்கு அல்லது கூடிய இரவிற்குத் தங்குவோர்) ஓரளவு ஈடுசெய்யும் அதிகரிப்பு ஏற்பட்டது. இது 1967ல் 4,697 ஆகவும், 1968ல் 4,606 ஆகவும் இருந்தது. 1968ல் சுற்றுப் ''பயணத்தர் இரவுகளில்'' 57,146 கொண்ட கணிசமான அதிகரிப்பும் இருந்தது.

## அட்டவணை II (இ) 19

### இலங்கை சுற்றுலாப்பயணர் சபை — 1965/66 — 1967/68 (அ)

| விடயங்கள் | | 1965-66 (ஆ) | 1966-67* | 1967-68* |
|---|---|---|---|---|
| 1. உபயோகிக்கப்பட்ட மூலதனம் ஆண்டிறுதியில் உள்ளபடி (ரூ. '000) ... ... ... | ... | **300.0** | **3,528.4** | **6,967.0** |
| 2. இருப்புச் சொத்துக்களின் பெறுமானம் ஆண்டிறுதியில் உள்ளபடி (ரூ. '000) ... ... | ... | **7,717.1** | **8,448.7** | **12,535.5** |
| 3. மொத்த வருமானம் (ரூ. '000) ... ... | ... | 146.6 | 588.6 | 704.7 |
| 4. இலாபம் (+) அல்லது நட்டம் (—) இ (ரூ. '000) | ... | 200 | –2,061 | –3,272 |
| 5. தொழில் நிலை (இல.) ஆண்டிறுதியில் ... ... | ... | 96 | 190 | 198 |
| 6. சுற்றுப்பயணர் புள்ளிவிவரங்கள் (அ) | | | | |
| (அ) சுற்றுப்பயணர் வருகைகள் (ஈ) ... | ... | **98,048** | **82,754** | **69,679** |
| (1) சுற்றுப்பயணர் (எண்) ... ... | ... | 18,969 | 23,666 | 28,272 |
| (2) உல்லாசப்பயணர் (எண்) ... ... | ... | 79,079 | 59,088 | 41,407 |
| (ஆ) சுற்றுப்பயணர் இரவுகள் (உ) (எண்) ... | ... | வி. கி. | 268,092 | 325,238 |

மூலம்: இலங்கைச் சுற்றுலாப்பயணர் சபை.

* தற்காலிகமானவை.

(அ) சுற்றுப்பயணர் சபையையொட்டிய 1 தொடக்கம் 5 வரையுள்ள விடயங்களின் எண்ணிக்கை ஒற்ரோபர் தொடக்கம் செத்தெம்பர் வரையான நிதியாண்டுகளுக்குரியதாகும். விடயம் 6ல் உள்ள சுற்றுப்பயணர் புள்விளிவரங்கள் 1966, 1967, 1968ம் பஞ்சாங்க ஆண்டுகளுக்குரியதாகும்.

(ஆ) சுற்றுப்பயணர் சபை தனது முயற்சிகளை 1966 மே 1ல் தொடக்கியது.

(இ) வருமானத்திற்கு மேலான செலவு.

(ஈ) ''சுற்றுப்பயணர்'' ஓர் அல்லது கூடிய இரவுக்குத் தங்கும் வருகையாளர் என விவரிக்கப்பட்டுள்ளது. ''உல்லாசப் பயணர்'' இரவு தங்காத வருகையாளர்.

(உ) சுற்றுப்பயணத்தாரால் கழிக்கப்பட்ட இரவுகளின் எண்ணிக்கை.

கொழும்புப் பிரதேசத்திலும், கிழக்கு, தெற்குக் கரையோரங்களிலும் பழைய நகரங்கள், மலைநாடு ஆகிய இடங்களிலும் விடுதிகளையும், ஏனைய விடுமுறை விடுதிகளையும் சுற்றுப்பயணர் வசதிகளையும் நிறுவுவதற்குச் சபை திட்டமிட்டுள்ளது. 1973ம் ஆண்டளவில் இடவசதித் தேவைகள் மேலும் 1,750 அறைகளால் அதிகரிக்குமெனச் சபை மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே பன்னிரண்டு திட்டங்கள் கரைப்பகுதிகளில் இடவசதியை 800 அறைகளாலும், பழைய நகரங்களில் 100 அறைகளாலும் அதிகரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 1973 அளவில் முடிவுபெறுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பெந்தோட்டையில் 100 ஏக்கர்களும், பொலனறுவையில் 10 ஏக்கர்களும் கொண்ட சுற்றுப்பயணர் விடுதிவசதி அபிவிருத்தி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஈ) 1

### பணநிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | சதவீத மாற்றம் 1963 — 64 | சதவீத மாற்றம் 1964 — 65 | சதவீத மாற்றம் 1965 — 66 | சதவீத மாற்றம் 1966 — 67 | சதவீத மாற்றம் 1967 — 68 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி ... ... ... | 1,347 | 1,468 | 1,615 | 1,693 | 1,598 | 1,792 | +9.0 | +10.0 | +4.8 | —5.6 | +12.1 |
| பெப்புருவரி ... ... ... | 1,369 | 1,501 | 1,582 | 1,674 | 1,687 | 1,793 | +9.6 | +5.4 | +5.4 | +0.8 | +6.3 |
| மாச்சு ... ... ... | 1,385 | 1,505 | 1,585 | 1,666 | 1,817 | 1,831 | +8.7 | +5.3 | +5.1 | +9.1 | +0.8 |
| ஏப்பிறல் ... ... ... | 1,400 | 1,534 | 1,601 | 1,675 | 1,781 | 1,857 | +9.6 | +4.4 | +4.6 | +6.3 | +4.3 |
| மே ... ... ... | 1,431 | 1,547 | 1,645 | 1,698 | 1,723 | 1,869 | +8.1 | +6.3 | +3.2 | +1.5 | +8.5 |
| யூன் ... ... ... | 1,448 | 1,550 | 1,650 | 1,692 | 1,731 | 1,857 | +7.0 | +6.4 | +2.5 | +2.3 | +7.3 |
| யூலை ... ... ... | 1,447 | 1,543 | 1,693 | 1,757 | 1,718 | 1,831 | +6.6 | +9.7 | +3.8 | —2.2 | +6.6 |
| ஓகத்து ... ... ... | 1,474 | 1,529 | 1,674 | 1,702 | 1,678 | 1,839 | +3.7 | +9.5 | +1.7 | —1.4 | +9.6 |
| செத்தெம்பர் ... ... ... | 1,499 | 1,549 | 1,675 | 1,681 | 1,700 | 1,850 | +3.3 | +8.1 | +0.4 | +1.1 | +8.8 |
| ஒற்ரோபர் ... ... ... | 1,505 | 1,592 | 1,687 | 1,682 | 1,761 | 1,889 | +5.8 | +6.0 | —0.3 | +4.7 | +7.3 |
| நவெம்பர் ... ... ... | 1,533 | 1,603 | 1,677 | 1,655 | 1,787 | 1,896 | +4.6 | +4.6 | —1.3 | +3.0 | +6.1 |
| திசெம்பர் ... ... ... | 1,506 | 1,622 | 1,716 | 1,659 | 1,808 | 1,913 | +7.7 | +5.8 | —3.3 | +9.0 | +5.8 |
| மாதாந்தச் சராசரி ... ... ... | 1,545 | 1,454 | 1,650 | 1,686 | 1,732 | 1,851 | +6.9 | +6.8 | +2.2 | +2.7 | +6.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.